www.tamilarangam.net

இதழ் 96
மே.02-மே.15, 1996
விலை 7.00

சரிநிகர்
SARINIHAR

# சரிநிகர்


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.


“

இந்தத் தீவுகளில் வசிக்கின்ற அனைவரும் தோற்றத்திலும், நடையுடை பாவனைகளிலும், பேச்சிலும் அதிக வித்தியாசப்பட்டவர்களாய் இருக்கவில்லை. பரஸ்பரம் ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொண்டு பழகுகிறார்கள். இவை காரணமாக இவர்களை கிறிஸ்தவர்களாக்குவது சுலபம். இவர்களும் கிறிஸ்தவர்களாகுவதற்கு தயாராக இருப்பது மாதிரித் தென்படுகிறது. கூடிய பட்சம் எல்லோரையும் கிறிஸ்தவர்களாக்குவது என்பது தானே நமது அரசர் பெருமானின் விருப்பம்

”

-ஸ்பானிய மன்னருக்கு கொலம்பஸ் எழுதிய முதலாவது கடிதத்திலிருந்து
(நன்றி-'வரலாறு கண்ட கடிதங்கள்')







## ரிவிரச - 2

# விடுவிக்கப்பட்ட தமிழ்மக்கள்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 30 கோடிக்கு வாங்கி 300 கோடிக்கு விற்பனை?

அரசாங்கத்திற்கு சொந்தமாக இருந்த யக்கல உலோகப் பொருள் தொழிற்சாலையும் என்டேரமுல்ல வார்ப்பு தொழிற்சாலையையும் கடந்த அரசாங்கத்தின் போது ரூபா 30 கோடிக்கு வாங்கிய நிறுவனம் மூலம் என்டேரமுல்ல தொழிற்சாலை மட்டும் ரூபா 50 கோடிக்கு விற்கப்பட்டு ரூபா 20 கோடி இலாபம் உழைக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது அந்நிறுவனத்தார் யக்கல உலோகப் பொருள் தொழிற்சாலையை ரூபா 250 கோடிக்கு விற்பனை செய்ய முயல்கின்றனர்.

தனியார்மயப்படுத்தலின் கீழ் உலோகப் பொருள் கூட்டுத்தாபனம் வாங்கப்பட்டது. ABCஎனும் நிறுவனத்தின் மூலமாகும். இவற்றை விற்க தற்போதைய அரசாங்கத்திடம் அனுமதிப் பெற்றுள்ளது.

அவர்களால் இத்தொழிற்சாலையை நிர்வகிக்க முடியாததன் காரணமாக இலாபத்துடன் விற்கினற போதும், ஊழியர்களுக்கு எந்தவித நட்டஈடும் வழங்கப்படவில்லை. என்டேரமுல்ல தொழிற்சாலை அதிக விலைக்கு விற்கப்பட்டதன் பின் அத்தொழிற்சாலையில் சேவை புரிந்த ஊழியர்கள் அனைவரும் வேலையின்றி வீதியில் உள்ளனர்.

யக்கல உலோகப் பொருள் தொழிற்சாலை இப்பொழுது மூடப்பட்டுள்ளது.

அத்துடன் ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளமும் வழங்கப்படவில்லை. புதுவருட போனஸ் மற்றும் சம்பளம் இவை எவையும் வழங்கப்படவில்லை.

''திட்டமிட்டபடி அந்நிறுவனம் தொழிற்சாலையை ரூபா 250 கோடிக்கு விற்று விட்டு பணத்தை பையில் போட்டுவிட்டு சென்றுவிடும் என்றும், தமக்கு அதனால் எந்த வித நன்மையும் இல்லையெனவும் ஊழியர்கள் குறிப்பிடுகின்றனர். இது தொடர்பாக கவனம் செலுத்தும்படி அவர்கள் அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

இதைத்தவிர இலங்கை உலோகப் பொருள் கூட்டுத்தாபனத்தை ரூபா 30 கோடிக்கு வாங்கிய நிறுவனம் அதற்கான பணத்தைப் பெற்றுக்கொண்டது வங்கிகளின் மூலமாகும். அதற்கான வங்கிக்கடன் கூட இன்னும் செலுத்தி முடிக்கப்படவில்லை.

யுக்திய 960420

# காணாமல் போன ஆணைக்குழுக்கள்?

கடந்த பயங்கரவாதக் காலகட்டத்தின் போது நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட 3 ஆணைக்குழுக்களின் விதந்துரைப்புகளை செயற்படுத்தாது பொ.ஐ.மு. அவற்றைக் குப்பைக்கூடையில் போட்டுள்ளதாகவும் இதனால், அவ் ஆணைக்குழுக்களுக்கு தமது செயற்பாடுகளை சிறந்த முறையில் செயற்படுத்த முடியாதிருப்பதாகவும் அறியக் கிடைக்கின்றது.

மத்திய வடமத்திய, வடமேல், மற்றும்ஊவா மாகாணங்களில் காணாமல் போனோர் பற்றி விசாரணை நடாத்திய ஆணைக்குழு இதுவரை காணாமல் போனோர் பற்றிய அறிக்கைகள் நான்கை முன்வைத்து பொறுப்புச் சொல்லவேண்டியவர்களையும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடுகளையும் குறிப்பிட்டு முன்வைத்த அறிக்கைகளே தற்போது செயற்படுத்தப்படாது வைக்கப்பட்டுள்ளன.

அவ் ஆணைக்குழுவுக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் அறிக்கை முன்வைத்த மேல் சப்பிரகமுவ, தென் மாகாணசபை ஆணைக்குழுவினது செயற்பாட்டுக்கும் அரசாங்கத்தின் ஒரு பதிலும் கிட்டவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்ட ஆணைக்குழுவின் செயற்பாடுகள் யுத்தம் காரணமாக தடைபட்டுள்ளன. நட்டஈடுகள் வழங்குவது தொடர்பாக சிறிய அளவிலான விதந்துரைத்தலை வெளியிட மட்டுமே இந்நிலைமையின் கீழ் அவ் ஆணைக்குழுவுக்கு முடிந்துள்ளது. இதைத்தவிர அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது; அக்காலகட்டத்தில் நடந்த குற்றங்கள் தொடர்பாக மட்டுமே எனத் தெரிய வந்துள்ளது.

மூன்று ஆணைக்குழுக்களினதும் விதந்துரைத்தல் தொடர்பாக கடந்த மார்ச் 25ம்திகதி நடைபெற்ற கூட்டத்தில் அரசாங்க அதிகாரிகள் குறிப்பிட்டது என்னவெனில் நட்டஈடு பெற்றுக்கொடுக்க பணம் இல்லாததால் நட்டஈட்டுத் தொகையை குறைத்து விடுங்கள் என்றாகும்.

1988ல் தீர்மானித்தன்படி காணாமல் போன அரசியல்வாதிக்கு ரூபா 6லட்சமும் அரச உத்தியோகத்தருக்கு ரூபா 1,50,000மும், சாதாரண பிரஜைக்கு ரூபா 50,000மும் வழங்கப்பட வேண்டும். இதன்படி மொத்த நட்டஈட்டுத் தொகை ரூபா 650மில்லியன் ஆகும்.

ஆணைக்குழுவின் விதந்துரைத்தலின்படி நட்டஈடு வழங்குவதற்காக வருடத்துக்கு ரூபா 145மில்லியன்கோரப்பட்டாலும் அனுமதிக்கப்பட்டது. ரூபா 55மில்லியன் மட்டுமே இந்நிலைமையின்படி நட்டஈடு வழங்குதல் அரசியல் அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளது.

ஒரு காணாமல் போனோரின் அறிக்கையின் படி காணாமல் போனதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய பொலிஸ் அதிகாரிகள் எண்ணிக்கை 172, இராணுவ வீரர்கள் எண்ணிக்கை 200 எனக் குறிப்பிட்டுள்ளது. அத்துடன் இவர்கள் அதேஇடத்தில் சேவை புரிந்துகொண்டிருப்பின் இடமாற்றம் செய்யும்படியும் விதந்துரைத்தல் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கம் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. யுத்தம் நடைபெறுவதால் இராணுவ பொலிஸ் வீரர்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என அரசாங்க முன்னிலை அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக அறியக் கிடைக்கின்றது.

யுக்திய 960428

# 158 கோடி நட்டம்!

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமாகவிருந்த எல்.பி.காஸ் பிரிவை ஷெல் நிறுவனத்துக்கு ரூபா. 192 கோடிக்கு விற்றதினால் பெற்றோலியக் கூட்டுதாபனத்தால் தயாரிக்கப்படும் எல்.பி. காஸை அழிக்க வேண்டியுள்ளதாக உள்ளதனால் ரூபா 158 கோடியை இழக்க வேண்டியதாக உள்ளது.

எல்.பி.காஸ் நிறுவனத்தை ஷெல் நிறுவனத்துக்கு விற்பனை செய்ய ஆலோசித்த அதிகாரிகள் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தயாரிக்கும் எல்.பி.காஸை என்ன செய்வது என்பதனை ஆராய்ந்தறியவில்லை.

ஷெல் நிறுவனத்துக்கு காஸ் பிரிவை வழங்கியதன் காரணமாக, எண்ணெய்க் கூட்டுத்தாபனத்திடமிருந்து எல்.பி. காஸை விற்கும் உரிமை பறித்தெடுக்கப்பட்டுள்ளதனால் ரூபா158 கோடி பெறுமதியான எல்.பி.காஸ் அழிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எண்ணெய் கூட்டுத்தாபனத்தினால் மசகு எண்ணெய் துப்புரவாக்கப்படும் பொழுது உற்பத்தியாக்கப்படும் எல்.பி. காஸின் பெறுமானம் வருடத்துக்கு 1800டொன் ஆகும்.

அன்றாடம் உற்பத்தியாக்கப்படும் எல்.பி காஸின் பெறுமதி ரூபா 5.9 மில்லியன் ஆகும் என கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்தார்.

எண்ணெய்க் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான எல்.பி.காஸ் பிரிவின் பங்குகளில் 51%ஐ விற்பனை செய்யப்பட்டபோது, இலங்கை காஸ் விற்பனை மற்றும் உற்பத்தி ஆகியவற்றின் ஏகபோக உரிமைகள் ஷெல் நிறுவனத்துக்கு வழங்க செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதனால் எண்ணெய்க் கூட்டுத்தாபனத்துக்கு காஸை களஞ்சியப்படுத்தும் வசதியும் விற்கும் உரிமையும் பறிபோயுள்ளது.

இப்பொழுதிருக்கும் நிலைமையின் பிரகாரம் எல்.பி.காஸை எரித்து வீணாக்குவது தான் ஒரே தீர்வு என்றும் அதை எரிப்பதற்காகவும் பணம் செலவிட வேண்டியுளளது எனவும் எண்ணெய்க் கூட்டுத்தாபனம் தெரிவிக்கின்றது.

மற்றும், எண்ணெய்க் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காஸ் பிரிவின் பங்குகளில் நூற்றுக்கு 39 வீதம் அரசாங்கத்திடமும் 10 வீதம் ஊழியர் வசமும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ராவய 960428

# காணி சுவீகரிப்பு?

பதுளைப் பகுதியில் கிராம அபிவிருத்தித் திட்டத்திற்காக காணிகள் சுவீகரிக்கப்படுகின்றது. இத்திட்டத்திற்காக தேயிலைத் தோட்டங்களில் நல்ல பயன்தரக்கூடிய தேயிலை மலைகளை அதிகாரிகள் தெரிவு செய்கின்றனர்.

இது தோட்டத் தொழிலாளர்களின் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. சகல தோட்டத் தொழிலாளர்களும் ஆகக் குறைந்த நாட் சம்பளமான ரூபா.72.24மட்டுமே பெறுகின்றனர். இதிலும் மாதத்தில் கிடைக்கும் வேலை நாட்களோ மிகக் குறைவு, அதுமட்டுமல்ல வேலைப் பழு அதிகரிப்பு, வயது வந்த பிள்ளைகளை பெயர் பதியாமை, மோசமான வாழ்க்கைத்தரம் போன்றவைகளால் பல சொல்லொணாத் தொல்லைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

நிர்வாகங்கள் தோட்டங்களை முறையாக கவனிக்காமையினால் தொழிலாளர்களின் நிலை மிகவும் மோசமானதாக உள்ளது. இந்த நிலையில் நல்ல தேயிலை மலைகளை கிராம அபிவிருத்தித் திட்டத்திற்கு பகிர்ந்தளிப்பதால் தொழிலாளர்களின் நிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்படும்.


இதே வேளையில் தோட்டங்களில் பயிர் செய்யாத காணிகள் அதிகம் உண்டு. அப்படிப்பட்ட காணிகளில் வீடுகள் அமைப்பதும் வசதியாக உள்ளது. இதை விடுத்து நல்ல பயன்தரக் கூடிய காணிகளை பகிர்ந்தளிப்பதன் மூலம் தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமல்ல நாட்டின் பொருளாதாரமும் பெரிதும் பாதிக்கப்படும்.

ஆகையால் இவ்விடயத்தை ஆராய்ந்து நல்ல பயன் தரக்கூடிய காணிகளை இத்திட்டத்திற்காக சுவீகரிப்பதை மீளாய்வு செய்ய வேண்டும் என ஐ.தோ.தொ.சங்க பிரதித் தலைவர் ஆ.முத்துலிங்கம் ஜனாதிபதியை கேட்டுள்ளார்.

## திருத்தம்

கடந்த இதழில் 9ம் பக்கத்தில் வெளியான நேர்காணலை சரிநிகருக்குத் தந்தவர் டில்வின் டி சில்வா. இவர் மக்கள் விடுதலை முன்னணியின் தற்போதைய பொதுச் செயலாளர். களுத்துறை மாவட்டத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1977க்குப் பின்னர் ம.வி.மு வுடன் இணைந்து கொண்டார். இது தவறுதலாக விடுபட்டு விட்டது. இதனால் வாசகர்களுக்கு ஏற்பட்ட சிரமத்துக்கு மன்னிப்புக் கோருகிறோம்.

ஆ–ர்



ஏதேதோ காரணங்களால் நின்று போய்விட்ட இந்தப் பத்தியை மீண்டும் ஆரம்பிக்கும்படி கோரிக்கை வந்தது ஆசிரியரிடம் இருந்து.

வாசகர்களுக்கு ஆர்வத்தை கொடுக்கும் ஒரு பத்தியாக இது இருந்ததோ இல்லையோ என்பது குறித்து எனக்கு எப்போதுமே ஒரு சந்தேகம். நின்று போனது குறித்து வாசகர்கள் யாரும் எதுவும் கேட்கவில்லையே என்ற ஒரு ஆதங்கமும் இருக்கத்தான் செய்தது.

எப்படியோ ஆசிரியர் மீண்டும் எழுதுமாறு கேட்டதும் "செமை" சந்தோசம். ஆனால் எதை எழுதுவது, எதை விடுவது என்று தான் தீர்மானிக்க முடியவில்லை பல விடயங்கள் என்னை எழுது என்னை எழுது என்று முண்டியடித்துக் கொண்டு வந்தன. எதை தெரிவு செய்வது என்பதில் திக்குமுக்காடிப் போனேன்.

நல்ல வேளையாக போன் மணி அடித்தது. ரிசீவரை எடுத்தேன்.

'ஹலோ,...."

'ஹலோ... சரிநிகர்"

'ஹலோ...என்ன நடக்குது யாழ்ப்பாணத்திலை... யாழ்ப்பாணத்தை ஆமி பிடிச்சிடுமா?"-ரெலிபோன் குரல் கேட்டது.

'போகிற போக்கைப் பார்த்தால் அப்பிடித்தான் தெரியுது...நீங்கள்"

என் கேள்விக்குப் பதில் இல்லை. ஆனால் கேள்விகள் தொடர்ந்தன.

'சாவகச்சேரிக்குப் போட்டாங்களாம் உண்மையா? பேப்பரிலே போட்டிருக்கிறதுகளைப் பார்த்தால் முழுக்க பிடிச்சாச்சு போலை இருக்கு... சனங்களுக்கு என்ன நடந்ததெண்டு தெரியுமோ?"

'ஒன்றுமே தெரியாது. எல்லாம் பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள்தான் பத்திரிகையாளர்களை அவர்கள் போகவிடவில்லை... யாரும் அங்கிருந்து வரவும் முடியாது. இதனால் உண்மை என்ன வென்று தெரியவே இல்லை..." -இது நான்.

"இல்லை கிளாலிலை பதினாறு போட்டை, அடிச்சவங்களாம். அவ்வளவு சனமாகத்தான் இருக்கும் போலக்கிடக்குது... அதுபற்றி ஏதேன் தெரியுமா?

'இல்லை..."

'அப்ப என்னதான் உங்களுக்கு தெரியும்..."

'ஒன்றுமே தெரியாது... அரசாங்கம் சொல்வதை தவிர"

"அதைத் தெரிந்து கொள்ள உங்கட பேப்பர் தேவையா என்ன? அதை சொல்ல அவங்கடை ரேடியோ, ரி.வி போதாதோ..."

அவருக்கு சரியான கோபம். ரெலிபோனில் குரல் ஓங்கி ஒலித்தது.

"தெரிஞ்சால் தான் என்ன? தெரிஞ்சதையும் எழுத முடியாமல் தணிக்கை அமுலில் இருக்குது... இந்த நிலமையில் ஒரு பத்திரிகை தேவைதானா எண்ட உங்கடை கேள்வி எங்களுக்கு புரியுது. ஆனால் இது அரசாங்கத்துக்கு விளங்கவில்லையே.."

"அவங்களுக்கு விளங்கிறபடியால்தான் இப்பிடிச் செய்யிறாங்கள்... நீங்களும் அவங்கடை வாயைப் பார்த்துக் கொண்டு இருங்கோ. அங்கை சனங்கள் செத்துக் கொண்டே இருக்கட்டும்."

அவர் ரெலிபோனை வைத்த சத்தத்தில் எனது காது அதிர்ந்தது. நான் நீண்ட நேரம் திகைத்துப் போய் மௌனமாக இருந்தேன்.

ஒரு மணி நேரம் இருக்கும். மீண்டும் ரெலிபோன் ஒலித்தது. இம்முறை குரல் சற்று தணிந்திருந்தது.

கோபிக்காதேயுங்கோ... என்ரை ஆத்திரத்திலை உங்களை திட்டிவிட்டேன். என்ரை அப்பா, அம்மா தங்கச்சி மூவருமாக தம்பியை (26 வயதிலும் குறைவு) சாவகச்சேரியில் விட்டிட்டு கிளாலியாலை வவுனியா வரப்போறதா அறிவிச்சிருந்தவை. கட்டாயம் போட் ஏறியிருப்பினம்...தங்கச்சியை கனடாவுக்கு கலியாணத்துக்கு அனுப்பிற விடயம்...என்ன நடந்ததோ தெரியேல்லை... அந்தக் கவலையிலை பேசிட்டன்..."

"பரவாயில்லை... இப்ப என்ன நடந்தது... வவுனியாவுக்கு வந்திட்டினமா..?

"தெரியாது... ஆக்கள் வரேல்லை... கொஞ்சப் 'பொடியள்" வந்திருக்காம்... வவுனியாவிலை இருந்து கோல்வந்தது."

"பொடியள் வந்திருக்கினமோ?"

"வரயில்லை.... ஒதுங்கியிருக்காம்... 'பொடீஸ்'...சடலங்கள்"

பிறகு அவர் பேசவில்லை.

எனக்கும் எழுத்து ஓடவில்லை.

---

இரண்டு பே ரின் உரையாடல் ஒன்றை கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. காதை அவர்புறமாக திருப்பிவிட்டுக் கொண்டு நின்றேன்:

"பேப்பர் பார்த்தனியோ?"

"எந்தப் பேப்பர்..."

"எந்தப் பேப்பரெண்டில்லை... எதெண்டாலும் பேப்பர் பார்த்தனியோ?"

"ஓ...ஏன்"

"புலிகளிட்டை இருந்து தமிழ் மக்களை விடுவிச்சு விட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவிச்சிருக்குது"

"பார்த்தனான்..."

சனம் சந்தோசமா வலிகாமத்துக்கு திரும்பி போகுதாம்"

"ஓமோம்...பார்த்தனான்... அதுக்கென்ன இப்ப..."

"இல்லை முந்தி அரசாங்கத்திட்டை இருந்து மக்களை புலியள் விடுவிச்சினம். இப்ப புலியளிட்டை இருந்து அரசாங்கம் விடுவிச்சிருக்கு... இனி திரும்ப அதிட்டை இருந்து மக்களை திரும்ப புலியள் விடுவிக்கிறது எப்ப எண்டதுதான் அடுத்த பிரச்சினை..."

"மொத்தத்திலை இரண்டு பகுதிக்குமே மக்களின்ரை விடுதலையிலை அவ்வளவு அக்கறை எண்டு சொல்ல வாறாய் அதுதானே..."

"ஓமோம் அந்த அக்கறையின்ரை வேகத்திலை, சனம் திகைச்சுப்போய் நிக்குது.... அதுவும் இலங்கைப் படையளுக்கு திடீரெண்டு தங்கள்ளை ஏற்பட்ட கரிசனையைப் பார்க்க அவர்களுக்கு நடப்பதெல்லாம் கனவாக இருக்குமோ என்ற சந்தேகம் கூட வந்து விடுகிறது."

"இதெல்லாம் உனக்கு எப்பாடித் தெரியும்"

"பாதுகாப்பு அமைச்சு தந்த படங்களைப் பார்த்தாலே தெரியுது தானே"

"ஆனாலும், உனக்கு கற்பனை வளம் அதிகம் தான்"

"தாக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து எடுக்கப்பட்ட படங்களில் தமக்கு வாய்ப்பானதை மட்டும் அரசாங்கம் தரேக்கை, நாங்கள் கற்பனை வளமற்றவர்களாக இருந்தால் எப்பிடி உண்மையை அறியிறது...."

"அப்ப சனங்களுக்கு திரும்ப வலிகாமம் போவதில் விருப்பமில்லை எண்டு சொல்கிறாயா?"

"இல்லை, நான் அப்பிடிச் சொல்லேல்லை. ஆனால் இவையள் எதுக்காக எதைச் செய்யினம் என்டதை அவர்கள் தெளிவாகவே தெரிஞ்சு வைச்சிருக்கிறார்கள் என்கிறேன்."

"எப்பிடி..."

"பொறுத்திருந்து பார் தெரியும்!"

--உரையாடல் இந்தளவுடன் முடியவில்லை அது தொடர்ந்து கொண்டே இருந்தது. ஆனால் எனது புலன்கள் அதை விட்டு நகர்ந்து விட்டன. யாழ்ப்பாணத்தில் நடக்கப்போகிற ஒரு தேர்தலைப்பற்றிய நினைவு என்னுள் எழுந்தது. இதன் பிறகு என்ன பேசப்பட்டது என்பது எனக்கு நினைவிலில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ரிவிரச - 2 : ஒருமுறையா?

ரிவிரச - 2 நடவடிக்கை யாழ். குடாநாட்டினை முற்றாக இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. வலிகாமத்திலிருந்து வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் இடம் பெயர்ந்த மக்கள் மீள வலிகாமம் நோக்கி சென்று கொண்டிருப்பதாகவும் அச் செய்திகள் கூறுகின்றன. தொலைக்காட்சியில் காட்டப்படும் படங்களின்படி இராணுவத்தினர் அங்குள்ள மக்களது நலன்களை பேணும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த வெற்றி இராணுவ ரீதியாக எவ்வளவு தூரம் நின்று பிடிக்கக் கூடியது, புலிகளின் தோல்வி எவ்வளவு காலம் நீடிக்கப்போகிறது என்பன குறித்து இப்போதைக்கு எதையும் கூற முடியாவிட்டாலும் இந்த நிலைமையானது வடக்கு கிழக்கு மக்களுக்கு நன்மை பயக்கப் போகிறதா இல்லையா என்பது பற்றி இப்போதே கூறிவிட முடியும். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான யுத்தத்தில் வெற்றி பெறுவது வடக்கு கிழக்கு தமிழ் மக்களது முற்று முழுதான விடுதலைக்கு வாய்ப்பளிக்கும் என்று ஏற்றுக் கொள்ள மறுப்பவர்கள் கூட மறுக்காத ஒரு உண்மை உண்டு. (புலிகளது மக்கள் தொடர்பான அணுகுமுறை காரணமாக, அவர்களது வெற்றியானது மக்களது விடுதலைக்கான வெற்றியாக, தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகள் அனைத்தையும் பெறுவதற்கான வெற்றியாகக் கொள்ளப்பட முடியாது என்ற



வாதத்தில் நியாயம் இருக்கவே செய்கிறது. ஆனால் புலிகளது வெற்றி தமிழ் மக்கள் மீதான இனரீதியான ஒடுக்குமுறைக்கு முடிவு கிட்ட வழிவகுக்கும் என்பதையிட்டு யாரும் சந்தேகம் தெரிவித்ததில்லை.) அதாவது, புலிகளின் வெற்றியை விட நீண்டகால நோக்கில் மக்களுக்கு அதிகளவு பாதிப்பை தரக்கூடியது அவர்களது தோல்வியே என்பதாகும். இந்த உண்மையை அங்குள்ள மக்கள் அனைவருமே நன்றாக அறிவர். அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள் வட - கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை கையாண்ட விதம், அவர்கள் ஒரு தேசிய இனம் என்ற அந்தஸ்தை இல்லாமல் செய்யும் நோக்கிலானவையே என்பதைக் காட்டுகின்றன. திட்டமிட்ட குடியேற்றங்கள், வடக்கு கிழக்கை பௌதீக ரீதியில் துண்டாடி அங்குள்ள தமிழ் மக்களை சிறுபான்மையினராக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டவையே என்பது வெளிப்படை. பண்டா - செல்வா ஒப்பந்தம் முதல், முறிந்து போன சந்திரிகா - பிரபாகரன் பேச்சு வார்த்தை வரை எல்லாச் சமரச முயற்சிகளும் தமிழ் மககள் மத்தியிலிருந்து எழுந்த போராட்டங்களின் நிர்ப்பந்தங்கள் காரணமாக நடந்தவையேயன்றி, இலங்கை அரசாங்கங்களால் மனமுவந்து நடாத்தப்பட்டவைகள் அல்ல. ஆயுதப் போராட்டம் ஆரம்பமான பின் நடந்த திம்புப் பேச்சும் சரி, பிரேமதாச கால 14 மாத பேச்சுவார்த்தைகளும் சரி, கடந்த வருடம் ஏப்பிரல் 19ம் திகதி முறிவடைந்த பொ.ஐ.முவின் பேச்சுவார்த்தைகளும் சரி, எல்லாமே இலங்கை அரசுகள் ஆயுதப் போராட்டத்தின் காரணமாக எதிர்கொண்ட நெருக்கடிகளினால் நடாத்தப்பட்டவையே. இதன் காரணமாகவே பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த ஒவ்வொரு கட்டத்திலும் அரசாங்கங்கள் தாம் விரும்பிய ஒரு தீர்வை ஒருதலைப்பட்சமாக தமிழ் மக்கள் தலையில் திணிக்க முயன்றிருக்கின்றன. அதற்காக ஆயுதப் போராட்டத்தின் சக்தியை ஒடுக்க யுத்தத்தில் இறங்கியிருக்கின்றன. இந்தியப்படை மூலமான யுத்தம் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைத் திணிக்க முயன்றது; பிரேமதாச கால யுத்தம் புலிகளை நிராயுதபாணிகளாக்கும் நோக்குடன் முடுக்கி விடப்பட்டது. இன்றைய யுத்தம் 'தீர்வுப்பொதியை' நடைமுறைப்படுத்தும் 'சமாதான யுத்தமாக' நடந்து கொண்டிருக்கிறது.

இன்று அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுப்பொதி பலராலும் சிலாகிக்கப்படுவது போல இதுவரை வெளிவந்த எல்லாத் தீர்வுத் திட்டங்களையும் விட 'முன்னேறியது' என்று சொல்லப்பட்டாலும் கூட, த.வி.கூ உள்ளிட்ட எந்தத் தமிழ்க் கட்சிகளாலுமோ, குழுக்களாலுமோ முற்று முழுதாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இந்த அரசாங்கத்திற்கு ஆதரவு செலுத்தும் தமிழ்க் கட்சிகள் கூட தீர்வுப் பொதியை முற்றுமுழுதாக ஏற்று அதற்காக செயற்படத் தயாராக இல்லை. அந்தவகையில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு இருந்தளவு ஆதரவு கூட இதற்கு இல்லை என்றே சொல்ல வேண்டும். அப்படியிருக்க இதை எப்படி முன்னேறியது என்று சொல்லலாம் என்பது கேள்விக்குறியே. தமிழ் அரசியற் தலைவர்களோ, அரசியல் சட்ட நிபுணர்களோ இத் தீர்வுப் பொதியை அவ்வளவு நம்பிக்கையூட்டும் ஒன்றாகக் காணவில்லை.

இத்தகைய ஒரு நிலையில் புலிகளது இராணுவ ரீதியான தோல்வி வெறும் புலிகள் என்ற இராணுவ அணியின் அல்லது இயக்கத்தின் தோல்வியாக மட்டுமே இருக்கப் போவதில்லை. ஏனென்றால் இந்த அரசாங்கத்தின் மூலோபாயமே புலிகளை இராணுவ ரீதியில் கட்டுப்படுத்தி விட்டு, அங்குள்ள மக்களின் மனங்களை வென்றெடுப்பதும், ஒரு தேர்தலை நடாத்துவதும், சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்தி (அதற்கு ஒரு சதவீதத்தினர் வாக்களித்தாலும் சரிதான்) அதன் மூலமாக வடக்கு கிழக்கை பிரித்து விடுவதும் தான் என்பது தெளிவு. இதனால் தான் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாது எனக் கூறப்படுகின்ற ஒரு தீர்வை தமிழ் மக்கள் தலையில் கட்டி விடுவதற்கு வாய்ப்பளிக்கக் கூடியதாக இந்தத் தோல்வி அமைந்து விடும் என்பதால் தான், இத் தோல்வி நீண்டகால நோக்கில் தமிழ் மக்களின் நலனுக்கு பாதகமானது என்று சொல்ல வேண்டியிருக்கின்றது.

புலிகளின் இந்தத் தோல்வி, அதை தற்காலிகமானது தான் என்று அவர்கள் கூறிக் கொண்டாலும் கூட ஒன்றும் எதிர்பார்க்க முடியாத தோல்வி அல்ல. எப்போது ஒரு விடுதலைப் போராட்ட அணி தனது சொந்த மக்களையே பகடைக்காய்களாக்கத் தயங்கவில்லையோ அப்போதே அது தனது தோல்விக்கான அத்திவாரத்தையும் போட்டு விடுகிறது. வலிகாமம் நோக்கிய ரிவிரச படையெடுப்பின் போது புலிகள் பின்வாங்கியது இராணுவ ரீதியிலான தந்திரோபாயமாக இருக்கலாம். மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு கோரியதும் கூட அவர்களை பாதுகாப்பதற்கான ஒன்றாக இருக்கலாம். ஆனால், அவர்கள் இந்த நடவடிக்கை முடிந்த பின் திரும்பிப் போக அனுமதி மறுத்ததும் தடை செய்ததும் எந்தவிதமான தந்திரோபாயங்களுக்குள்ளும் அடங்கப் போவதில்லை. காலங்காலமாக வாழ்ந்து வந்த பிரதேசங்களிலிருந்து பயம் காரணமாக வெளியேறிய மக்கள் திரும்பிப் போக விரும்புவது இயல்பானதே என்பதையும், இந்த விருப்பத்தை மறுப்பது அரசியல் ரீதியில் எதிர்மறை விளைவையே தரும் என்பதையும் புலிகள் விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. மக்கள் சுயமாக தமது இருப்பிடங்களைச் சென்றடையாமல் தடுத்தது அரசியல் ரீதியில் புலிகள் தமக்குத் தாமே இழைத்த மாபெரும் தவறாகும்.

அகதி வாழ்க்கைக்கு தள்ளப்பட்டுள்ள மக்களுக்கு அரசியல் உரிமைப் பிரச்சினை இரண்டாம் பட்சப் பிரச்சினையாகி விடுகிறது. அன்றாட அகதி வாழ்வின் அனர்த்தங்களுக்காகப் போராடுவதே அவர்களின் பிரதான போராட்டமாகி விடுகின்றது. அந்த விடுதலை இலங்கை அரசுப் படைகளினால் கிடைக்குமானால் கூட அவர்கள் அதையே முதலிற் பெற்றுக் கொள்ள விரும்புவார்கள். புலிகளோ மக்களது அரசியல் உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை, உரிமைப் போரில் அவர்களது பாத்திரமே தீர்க்கமானது என்பதை கோட்பாட்டு ரீதியில் ஏற்றுக் கொள்பவர்கள் அல்லர். அவர்கள் முன்னணிப் படையின் பின்னணிப் பாடகர்கள் என்ற அபிப்பிராயமே அவர்களது அரசியல் அணுகுமுறையின் தாற்பரியமாகும். இதனால் அகதி வாழ்வுக்குள் வீழ்ச்சியுற்ற மக்களின் துயரங்கள், அவர்களது நீண்டகால அரசியல் நலன்களை விட உடனடிப்பான நிலைமைகளில் பாரியவை என்பதை மறந்தே செயற்பட்டார்கள். தோல்வி நெருங்கி வரும் நெருக்கடியான காலத்தில் நீண்ட படை நடப்பு நடத்திய சீனத்தலைவர் மாவோ சேதுங், படையினை நடத்திச் சென்றாரே ஒழிய சீன மக்களை கூட்டிச் செல்லவில்லை; அல்லது அவர்களை வெளியேறுமாறு அறிவுரை கூறவில்லை. கெரில்லா இயக்கமாக வளர்ச்சிபெற்ற புலிகள் மக்களின் முன்னால் தம்மை சாமானியர்களாகக் கருதவேண்டும் என்று ஒருபோதும் நம்பியதில்லை... எனவே, போர்த்தந்திர ரீதியாக குடாநாட்டிலிருந்து பின்வாங்குவது என்ற தமது இராணுவ தந்திரோபாயத்தைக் கூட, மக்களையும் கூட்டிச் செல்லும் நடைமுறையினூடாகவே செயற்படுத்த விளைந்தனர். இது மிகவும் ஆபத்தானது, மக்களது எதிர்ப்பை பெரிதும் சம்பாதிக்கக் கூடியது. அது மட்டுமல்ல, அரசியல் ரீதியில் (நீண்டகால நோக்கில்) கெரில்லாக் குழுவொன்றிற்கு மாபெரும் நெருக்கடியைத் தரக் கூடியது. புலிகள் குடாநாட்டிலிருந்து பின்வாங்கும் முடிவை எடுத்ததற்கான அரசியல் இராணுவக் காரணங்கள் எதுவாக இருப்பினும், அதை அவர்கள் நடைமுறைப்படுத்திய விதம் ஒரு அரசியல் தோல்விக்கான அடிப்படையை தற்காலிகமாகவேனும் உருவாக்கி விட்டுத்தான் உள்ளது.

இராணுவ ரீதியிலான பின்வாங்கல்களை எல்லாம் தோல்விகள் என்று கூற முடியாது. ஆனால் பின்வாங்கல்களை அரசியல் வெற்றிகளாக ஏற்படுத்திக் கொள்வதில்தான் அந்த தந்திரோபாயத்தின் வெற்றியே தங்கியுள்ளது. புலிகள் இதனைச் செய்யவில்லை. அவர்கள், பேச்சுவார்த்தைக் காலகட்டத்தில், அதை மந்தப்படுத்தி அரசு இழுத்தடித்து, எப்படியாவது புலிகளால் அது முறிக்கப்பட வேண்டும் என்கிற போக்கில் நடந்து கொண்டதை அரசியல் ரீதியாகப் பார்க்காமல் பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டார்கள். இது அரசாங்கத்திற்கு வாய்ப்பான ஒரு அரசியல் வெற்றியாகப் போய்விட்டது. அரசியல் ரீதியான வெற்றியே இராணுவ ரீதியான இறுதி வெற்றிக்கான அடிப்படை என்பதை அரசாங்கம் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தது. புலிகள் இதற்கு நேரெதிரான கோட்பாட்டை கொண்டிருந்தனர். இதனால் அரசாங்கம் சர்வதேச அரங்கிலும் உள்நாட்டிலும் புலிகளை மக்களிடமிருந்து அந்நியப்படுத்துவதில் தற்காலிகமாகவேனும் வெற்றி பெற்றிருக்கிறது என்றே கூற வேண்டும். (புலிகளுக்கு இந்த நிலைமை புதிதல்ல. பிரேமதாச காலத்திலும் இதே கதை நடந்தது!) இலங்கை அரசின் பௌத்த பேரினவாத இருப்பு, அதன் பிற தேசிய விவகாரங்கள் மீதான அணுகுமுறை என்பன காரணமாக நீண்டகால நோக்கில் புலிகள் மீளவும் அரசியல் வெற்றியை நோக்கி நகரலாம். போராட்ட சக்திகளின் பலத்திற்குப் பதிலாக பல வேளைகளில் ஒடுக்குமுறையாளர்களின் தன்மையே போராட்டத்தை பலமான தாக்கி விடுகிறது. தமிழ் மக்களின் போராட்டத்தின் வளர்ச்சிக்கு இதுவே பெரும்பாலும் பிரதான காரணியாக இருந்து வந்துள்ளது. ஆனால் அதற்கிடையிலான இழப்பை புலிகள் தவிர்க்க முடியாமல் எதிர்கொள்ள வேண்டித்தான் வரும் என்பதில் ஐயமில்லை. மக்களின் உயிரிழப்பு,புலிகளின் இராணுவ அரசியல் வள இழப்பு என்பன இந்த அரசியல் தவறுகட்கான விலைகளே எப்பது ஒன்றும் சொல்லித் தெரிய வேண்டியவை அல்ல.

இலங்கை அரசின் அரசியல் ரீதியான வெற்றி திரும்பவும் நீண்டகால நோக்கில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் சவப்பெட்டிக்கு இன்னுமொரு ஆணியை ஓங்கி அடித்ததாகவே முடியும். இப்போது ஜனாதிபதி கையிலுள்ள பொதி அந்தக் கைங்கரியத்தை செவ்வனே செய்யும் சக்தி வாய்ந்ததாக உள்ளது என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

ஆக, இந்த ரிவிரச நடவடிக்கையின் வெற்றி மிகவும் பாரதூரமான விதத்தில் நீண்டகால நோக்கில் தமிழ் மக்களின் அரசியல் நலன்களைப் பாதிக்கப் போகும் ஒன்று என்று இப்போதைக்கு தெளிவாகவே கூறமுடியும்.

வெற்றி மிதப்பில் தலை கனத்து தமிழ் மக்களின் உரிமைகளை காலில் மிதித்து, அவர்களது உரிமைகளை வழங்க அரசு முன்வராத பட்சத்தில், இந்த வெற்றிப் பெருமிதம் தற்காலிகமான ஒன்றாக மட்டுமே போய்விடும் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பது தான் தமது இலட்சியம் என்று புலிகள் மனப்பூர்வமாக நம்புவார்களானால், இந்த தோல்விக்கான காரணிகளை அவர்கள் மீளாய்வு செய்ய வேண்டும். விடுதலை மக்களுக்கானதே. அவர்களது தீர்க்கமான பங்களிப்பின்றி அது சாத்தியப்பட முடியாதது என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அரசியல் ரீதியில் தோல்வியுறும் போதெல்லாம், இராணுவ வெற்றிகள் தற்காலிகமானவையே என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களுக்கும் கூட இது ஒரு படிப்பினைதான். மக்களது விடுதலை மக்களது போராட்டத்தால் காணப்படும் ஒன்றே அன்றி, அவர்கட்காக அவர்களது 'பெடியன்களால்' செய்யப்படும் ஒன்று அல்ல என்ற கோட்பாட்டுப் புரிதலை இது அவர்களுக்கு வழங்கியுள்ளது. மொத்தத்தில் இந்தப் படிப்பினைகள் புரிந்து கொள்ளப்படுமானால், இந்த ரிவிரச -2 இலங்கையின் விடுதலை வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமையும் என்று துணிந்து கூறலாம்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு இந்தியத் தலையீடு பாதகமானது?

ராம்பிரசாத்



சமகால சர்வதேச நிலைமைகளில் ஒரு உள்நாட்டுப் பிரச்சினையில் வெளிநாடுகள் அக்கறைகொள்ளாமல் இருக்கும் நிலைமை இல்லை. வேறு ஒரு நாட்டு உள்விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு ஏற்றவாறு இன்று சர்வதே தொடர்புகளும் அக்கறைகளும் விருத்தியடைந்துள்ளன. தலையீடுகள் நிர்ப்பந்தங்கள், அழுத்தங்கள் என்றளவில் மட்டுமன்றி இராணுவ தலையீடுகளாகவும் அவை வளர்ச்சி பெற்றுள்ளன.

இலங்கையின் விவகாரங்களில் இந்தியாவின் அக்கறை தலையீடு, செல்வாக்கு வரலாற்றுக்கு முந்திய காலந்தொட்டு இருந்து வருகின்றன. அவை வரலாற்று வளர்ச்சிக்கேற்ப பரிணாமமடைந்துள்ளன.

பௌத்த மதக் கொள்கைகள் இந்தியாவிலிருந்து அறிமுகமானது தொட்டு விஜயன் நாடு கடத்தப்பட்டமை, மன்னார் படையெடுப்புகள், வர்த்தகத் தொடர்புகள், மன்னர்களுக்கு பட்டத்து ராணிகள் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டமை, இந்தியர்களே இங்கு மன்னர்களாக இருந்தமை என்பன முன்னைய வரலாறுகள்.

பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து கொண்டு இலங்கையின் நிர்வாகத்தை கவனித்தமை, அதன் பிறகு சுதந்திரம் கிடைத்தமை. அதன் பிறகு இங்கு ஏற்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் என்பவற்றின் மூலம் இந்தியாவின் செல்வாக்கு நிறையவே இருந்தது எனலாம்.

வெளிநாட்டு கொள்கைகள், இந்தியர்களின் குடிவரவு, குடியகல்வு, தமிழ் நாட்டவர்களின் தொடர்பு, வர்த்தகம், கலாசாரம் என்பவற்றினால் ஆழமாகவே இந்திய பாதிப்புகள் இருக்கின்றன.

இரண்டாம் உலகயுத்தத்தின் போது இலங்கையை இந்தியாவின் ஒரு மாநிலமாக்க வேண்டும் என்ற ஆலோசனையும் வெளிப்பட்டது கவனிக்கத்தக்கது.

இந்திய செல்வாக்கில் என்பதில் இந்திய ஆளும் வர்க்கத்தின் தேசிய அகங்காரம், விஸ்தரிப்பு என்பவை மிகையாகவே இருந்து வந்தன/ வருகின்றன.

இவ்வாறான ஒரு நீண்ட வரலாற்றுப் பின்னணியுடன்தான் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையிலும் இந்தியாவின் செல்வாக்கு ஆழமாக பதிந்தது.

நேருவின் காலத்திலிருந்து இந்தியாவின் விஸ்தரிப்புவாத நிலையிலேயே இலங்கை விடயம் அணுகப்பட்டது. இந்திரா காந்தியின் காலத்தில் இலங்கை தமிழர்கள் பிரச்சினையில் தமிழ் நாட்டு மக்கள் கொண்டிருந்த அனுதாபமும் அக்கறையும், இலங்கையை தன்பிடிக்குள் வைத்திருக்க வேண்டுமென்ற எண்ணமும், தமிழ்த் தீவிரவாத அமைப்புகளுக்கு பயிற்சி முகாம்களை அமைத்துக் கொடுத்து அவர்களைத் தனது செல்லப்பிள்ளைகளாக வளர்த்தனூடாக இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையீடு செய்தது.

இந்திரா காந்தி காலத்தில் இந்திய அரசியல் முறைமைக்கு - வெஸ்மினிஸ்டர் - முறைமைக்கு - மாறான ஆட்சிமுறைமையை ஜே.ஆர். இலங்கையில் ஏற்படுத்தினார். அவரின் ஜனாதிபதி ஆட்சிமுறையில் ஏற்பட்ட பொருளாதார நடைமுறையில் மாற்றங்களினால் அவர் மேற்குலகு சார்ந்த வெளிநாட்டுக் கொள்கையை கடைப்பிடிக்கலானார். இது, இந்திய அரசின் அன்றைய வெளிநாட்டு கொள்கைக்கு மாறான போக்கை உருவாக்கியது. இந்தியா - இலங்கை தமிழ்த் தீவிரவாதிகளுக்கு ஊக்கமளித்ததால் இந்தியாவிற்கு மாறான நாடுகளுடன் குறிப்பாக பாகிஸ்தான், இஸ்ரேல், அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகள் பக்கம் ஜே.ஆர். அரசாங்கம் சரிந்தது. அவற்றிடமிருந்து தொடர்ந்து இராணுவ உதவிகளை இலங்கை பெற்றது.

இலங்கையின் இப்படியான போக்கினால் இலங்கைக்கு தலையிடியை கொடுக்க இந்தியா நினைத்தது. அதற்கு துரும்பாக இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சினையை பாவித்தது.

இலங்கை அரசாங்கத்தின் தமிழ் மக்களுக்கெதிரான இனவொதுக்கல் கொள்கை நடைமுறைகள் பற்றி சர்வதேச அரங்கில் இந்தியா அபிப்பிராயங்களை உருவாக்குவதில் பெரும்பங்கை வகித்தது. இதனால் சர்வதேச அரங்கில் இலங்கை பிரசித்தி பெற்றது.

ராஜிவ் காந்தியின் காலத்தில் வடமராட்சி தாக்குதலை அடுத்து இந்திய விமானங்கள் இலங்கை வான் எல்லையில் பிரவேசித்து உணவுப் பொட்டலங்களைப் போட்டது மட்டுமல்ல, தமிழ்த் தீவிரவாதிகளின் பலதாக்குதல்களுக்கு பக்கமாகவும் மூளையாகவும் கூட இந்தியா செயற்பட்டது என்பது தெரிந்ததே.

ராஜீவ் காலத்தில் ஏற்பட்ட இந்திய நிர்ப்பந்தங்கள் சர்வதேச நிர்ப்பந்தங்கள் என்பவற்றினால் திம்பு பேச்சுவார்த்தை தொடக்கம் மறைமுகமாகவும் வெளிப்படையான பல பேச்சுவார்த்தைகள் நடந்தன. இறுதியில் 1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டது. அதனடிப்படையில் மாகாணசபைகள் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டன.

அமைதிகாக்கும் படைகள் என்ற பேரில் இந்தியப்படைகள் இலங்கையின் வடகிழக்கு பகுதிகளுக்கு வந்தன. அன்றைய நிலையில் சர்வதேச சூழலில் இந்தியாவிற்குத் தேவையான சில விடயங்கள் சாதிக்கப்பட்டன.

இந்தியாவிற்கு மாறான வெளிநாட்டுக் கொள்கையை இலங்கை அரசு முன்னெடுப்பதனை தடுத்து நிறுத்தியமை முக்கியமான சாதனையாகும். மேலும் திருகோணமலையில் அமெரிக்கா படைத்தளம் அமைத்து விடுமோ என்று இந்தியாவிடம் நிலவிய அச்சம் நீக்கப்பட்டது. இலங்கைக்கான இராணுவ உதவிகள் பயிற்சிகள் என்பன இந்தியாவிலேயே முதன்மையாக ஏற்பாடு செய்யப்பட்டன. சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர் தேயிலை வர்த்தகத்தில் கூட இந்தியா இலங்கையை கட்டுப்படுத்தியது எனலாம்.

இதைவிட, பஞ்சாப், காஷ்மீர், நாகலாந்து, மிசோரம் போன்ற தேசிய விடுதலைப் போராட்டங்களை நசுக்கிக் கொண்டிருக்கும் அதே வேளை இலங்கைத் தமிழ் தேசியவிடுதலை இயக்கங்களை இந்திய மண்ணிலிருந்து வெளியேற்றி இலங்கைக்கு அனுப்பியமை இந்தியாவுக்கு வெற்றியே.

அமெரிக்கா, சோவியத்யூனியன் ஆகிய இரண்டு வல்லரசுகள், வார்சோ, நேட்டோ இராணுவ அணிகள் என்ற சர்வதேச நிலைமை இருந்த காலத்திலேயே மேற்படி சமாதான ஒப்பந்தமும், அதனால் ஏற்பட்ட விளைவுகளும் ஏற்பட்டன. அப்போது சோவியத் யூனியனின் பக்கம் முழுமையாக நின்று இந்தியா இப்பிராந்தியத்தில் பெரும் வளர்ச்சியை அடைய முடிந்தது. சோவியத்தின் அனுசரணையுடன் பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா ஆகியவற்றுக்கு எதிரான நிலைப்பாட்டையே இந்தியா கொண்டிருக்க வேண்டியிருந்தது.

அவ்வேளை இப்பிராந்தியத்தில் இந்தியாவுக்கு எதிரான போக்கை இலங்கை முழுமையாக எடுத்துவிடாமல் அதனை தடுப்பதும் இந்தியாவுக்கு தேவையாக இருந்தது.

எனினும், இந்திய அமைதிகாக்கும் படையினருக்கும் தமிழ் மக்களுக்குமிடையே ஏற்பட்ட விரிசல் அவ்வேளை இலங்கையிலிருந்த இந்திய தூதரகத்திற்கும் (தூதுவர் உட்பட நிர்வாகிகளும்) விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட முரண்பாடு என்பன இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை செயலிழக்கச் செய்தது.

அவ்வேளை இலங்கையின் ஜனாதிபதியாகவிருந்த பிரேமதாசவிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேயான உறவும் மேற்படி ஒப்பந்தத்தைச் செயலிழக்கச் செய்தது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் இந்தியப் படைகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் பின்னர் ராஜீவ் காந்தியின் கொலை என்பவற்றால் இந்தியா - இலங்கைத் தமிழ் மக்களுக்கு சார்பான நேரடியான செல்வாக்கு செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டது. ஆனால் வடக்கு கிழக்கில் தொடந்தும் யுத்தத்தை நடத்தி வந்த விடுதலைப் புலிகளுக்கு எதிராக பல நடவடிக்கைகளை இந்தியா தொடர்ந்தும் எடுத்து வந்திருந்தது. குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கம் என்று பிரசாரம் செய்வதில் இந்தியாவின் பங்கை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் கொண்டு வந்த கப்பல்களை இந்தியப் படைகள் தகர்த்தன. விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கையின் தற்போதைய அரசாங்கத்திற்கு ஆயுத உதவிகளையும் செய்து வருகிறது.

ஆக, இன்று விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவிற்குமிடையேயான முரண்பாடு மட்டுமே இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட செல்வாக்குச் செலுத்த காரணமாக இருக்குமோ என்றுதான் வெளிப்படையாக தெரிகிறது. அமெரிக்கா - சோவியத் யூனியன் என்ற சர்வதேச நிலைமை மாறியுள்ள வேளையில் இந்தியா எப்படி இலங்கை விவகாரங்களில் செல்வாக்குச் செலுத்தும்? செல்வாக்குச் செலுத்த தேவை இருக்கிறதா? என்று எண்ணத் தோன்றலாம்.

இன்றைய சர்வதேச சூழ்நிலை இரண்டு முகாம்களாக இல்லை. அமெரிக்கா மட்டுமே தனியொரு முகாமாக இருக்கின்றது. இதனால் பிராந்தியங்களின் பிராந்திய வல்லரசுகள் உருவாகி அல்லது பலமடைந்து உலக வல்லமை பரவலாக்கப்பட்டிருக்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. இருந்தும் சர்வதேச அரங்கில் இன்னுமொரு புதிய ஒழுங்கு ஏற்பட்டிருப்பதையே அவதானிக்க முடிகிறது.

அமெரிக்கா தனியொரு வல்லரசாக இருப்பதுடன் பிராந்தியங்களிலுள்ள சக்திகளின் மீது அமெரிக்காவும் அதன் ஐரோப்பிய நேச நாடுகளும் அவற்றின் மேலாண்மையை செலுத்தி வருகின்றன. அதாவது அமெரிக்காவினதும் அதன் ஐரோப்பிய நேசநாடுகளினதும் மேலாண்மையின் பிடிக்குள் பிராந்திய சக்திகளை கொண்டுவந்து ஒரு புதிய சர்வதேச ஒழுங்கு முறையை உருவாக்கி வருவதில் அமெரிக்க - ஐரோப்பிய நேச அணிகள் பிரயத்தனப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் ஆசிய தென்னாசிய பிராந்திய வலயத்தினுள் இந்தியா குறித்த கவனம் பிரதானமான இடத்தைப் பெற்றுள்ளது. மேற்குறித்தவாறு அமெரிக்க - ஐரோப்பிய அணியினரின் பிடிக்குள் இழுபட்டு பிராந்தியத்தினுள் அதன் நலன்களை முன்னெடுத்துச் செல்லும் சக்தியாக இருப்பதா? இப்பிராந்தியத்தினுள் இந்தியா தனியான பிராந்திய சக்தியாக இருப்பதா என்ற இரண்டிற்குமிடையில் இந்தியா தற்போது இழுபட்டுக் கொண்டிருக்கிறது. இந்த இரண்டு நிலைப்பாடுகளுக்கும் மாறிமாறி தாவிக்கொண்டிருப்பதை அவதானிக்க முடியும்.

இந்தியா இப்பிராந்தியத்தினுள் தனியான சக்தியாக இருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுக்கும் போதும் சரி, அமெரிக்க - ஐரோப்பிய நேச அணியினது பக்கத்தினின்று நிலைப்பாட்டை எடுக்கும் போதும் சரி இலங்கை விவகாரங்களில் இந்தியாவின் பிடி இறுகுவதையே காணலாம்.

எனவே மாறியுள்ள சர்வதேச சூழ்நிலையிலும் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் தலையீடு இருக்கத்தான் செய்யும். இது விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவிற்குமிடையிலான முரண்பாட்டினால் மட்டுமன்றி மாறியுள்ள சர்வதேச சூழ்நிலையிலும் இந்தியாவின் அக்கறைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற இந்திய நிலைப்பாட்டிலிருந்து எழுகிறது.

அமெரிக்க - ஐரோப்பிய நேச அணிக்கு ஏற்ற பிராந்தியமாக வல்லரசாக இந்தியா இருக்க வேண்டும் என்பதால் இந்தியாவை மீறி அல்லது பகைத்துக்கொண்டு அல்லது இந்தியாவிற்கு மாறாக அமெரிக்காவோ ஐரோப்பிய நாடுகளோ இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடமாட்டாது என்பது தெளிவாகின்றது. அமெரிக்க ஐரோப்பிய நேச அணிகள் இந்தியாவின் நலன்களை கருத்திற் கொண்டே செயற்படும். திறந்த பொருளாதாரம் சந்தைவாய்ப்புகள் என்பவற்றின் அடிப்படையில் மட்டுமே மேற்கண்டவாறு இந்தியா முக்கியத்துவம் பெறுகிறது என்று கூறமுடியாது. புதிய சர்வதேச ஒழுங்கில் இந்தியாவின் பங்கு இப்பகுதியில் முக்கியமானதாகும். சீனா, பாகிஸ்தான் என்பவற்றை விட அமெரிக்க - ஐரோப்பிய அணிகளுக்கு இந்தியாவே அதிக வாய்ப்பானதாகும். சீனா, பாகிஸ்தானுடன் என்பவற்றுடன் அமெரிக்காவிற்குள்ள முரண்பாடு இந்தியாவின் உள்நாட்டில் நிலவும் பிரச்சினைகள் என்பனவே அவ்வாய்ப்பிற்கு அடிப்படை எனலாம்.

எனவே இலங்கையின் இனப்பிரச்சினையில் கூட இந்திய தமிழ்நாட்டு அழுத்தங்கள் என்பன இருந்தபோதும் இலங்கை அரசின் பக்கம் இந்தியா நிற்க இந்த புதிய சர்வதேச ஒழுங்கு காரணமாகிறது. இந்தியாவுக்கு ஏற்றவாறு இலங்கையை வைத்திருப்பதிலும் அமெரிக்க - ஐரோப்பிய அணிகள் கவனம் செலுத்தும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய போராட்டத்தின் நிலை நின்று பார்க்கின்ற போது இந்தியாவின் தலையீடு அல்லது செல்வாக்கு தமிழ் மக்களுக்கு பாதகமாக இருப்பதாகவே கொள்ளப்படுகிறது. அத்தலையீடு எவ்வாறு பாதகமாக இருக்கிறது? அப்பாதகங்களை தவிர்ப்பது எப்படி அல்லது சீர்செய்வது எப்படி என்றெல்லாம் நாம் சிந்திப்பது அவசியமாகும்.

— ராம்பிரசாத் —

*இனப்பிரச்சினைத் தீர்வில் அரசு, புலிகள், தமிழ்க்கட்சிகள் ஆகியவற்றின் அரசியல் வங்குரோத்து நிலை, இதனால் மூன்றாவது தரப்பொன்றின் சாத்தியம்-சாத்தியமின்மை*

*பற்றி கடந்த இரு இதழ்களில் எழுதி வந்த ராம்பிரசாத் இம்முறை இந்தியத் தலையீட்டின் சாத்தியம் பற்றி ஆராய்கிறார்.*

*அடுத்து வரும் இதழ்களில்;இந்தியத் தலையீடு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு எவ்வாறு பாதகமாக இருக்கிறது? அதனைத் தவிர்ப்பது எப்படி என்றும் ஐ.நா வின் தலையீட்டின் சாத்தியம் பற்றியும் எழுதுவார்.*

*ஆ-ர்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







கீர்த்தி

# ரிவிசா 2: அரசின் தந்திரோபாயம் இது தான்!

இலங்கை இராணுவம் மேற்கொண்ட ரிவிரச இரண்டு நடவடிக்கை பிரதானமாக ஒரு அரசியல் நோக்கினையும், அடுத்ததாக இராணுவ நோக்கினையும் கொண்டதாகும். ரிவிரச இரண்டின் அரசியல் நோக்கு எதிர்பார்த்ததை விட வெற்றியை ஈட்டியுள்ளது போற் தெரிகிறது. ரிவிரச இரண்டின் அரசியல் நோக்கு என்ன? மக்களைப் பிடிப்பது.

ரிவிரச ஒன்றின் வெற்றியைச் சர்வதேச ரீதியாகப் பெரிதாகப் பிரச்சாரப்படுத்த முடியாமற் போனமைக்கு முக்கிய காரணம் வலிகாமத்திலிருந்து மக்கள் வெளியேறியமையாகும். ஒரு இராணுவ வெற்றியினை இறுதியாகத் தீர்மானிப்பது அதன் அரசியற் பரிமாணமாகும். ரிவிரச ஒன்றின் அரசியற் பரிமாணம் புலிகளால் அரசிடமிருந்து பறித்தெடுக்கப்பட்டது. சிங்கக் கொடியை யாழ்நகரில் ஏற்றிய வேளையில் உண்டாகிய பெருமிதம் அடங்கிப் போன கையோடு இதை அரசும் இராணுவமும் தெட்டத் தெளிவாக உணர்ந்து கொண்டன.

அத்துடன் புலிகள் தம்மிடமிருந்த அனைத்து இராணுவ வளங்களையும் மிகக் கவனமாக வலிகாமத்திலிருந்து அகற்றுவதற்கு ரிவிரச ஒன்று வாய்ப்பளித்ததால் அதை ஒரு முழுமையான இராணுவ வெற்றி என்று கூடச் சொல்ல முடியாது எனப் பலரும் சுட்டிக் காட்ட முற்பட்ட பின்னர் குடாநாட்டினுள்ளான அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கை தொடர்பாக இரு விடயங்களைக் கருத்திற் கொண்டு செயற்பட்டது சந்திரிகா அரசு.

1. தென்மராட்சியில் இடம்பெயர்ந்து வாழும் மக்களைப் பிரதானமாக வளைத்துப் பிடிக்கக் கூடிய ஒரு திடீர்ப் படை நகர்வு.
2. புலிகள் தம் வளங்களைக் குடாநாட்டில் பேணுவதற்கு அத்தியாவசியமான யாழ் கடலேரியினூடான தொடர்புகளை முற்றாகக் கட்டுப்படுத்துவது.

இரண்டாவது விடயத்தின் மூலம் மக்கள் இடப்பெயர்வையும் தடுத்து விடுவதோடு புலிகளின் ஒரு முக்கிய வருவாய் மையத்தையும் இல்லாதொழிக்கலாம் என்பது இராணுவத்தின் கணக்கு.

ரிவிரசவின் அடுத்த கட்டம் கேந்திர - இராணுவ நோக்கம் கொண்டதாக அமையும், அது தவிர்க்கப்பட முடியாதது என எதிர்பார்த்தனர் புலிகள். கேந்திர - இராணுவ நோக்கில் யாழ் குடாநாட்டினை நோக்கினால் மிக முக்கியத்துவம் பெறுவது வடமராட்சியின் கரைப் பிரதேசம். வலிகாமம் தென்மராட்சியைப் போலன்றி மிக அதிகமான கடற்துறைகளைக் கொண்ட கரை இதுவாகும். இராணுவம் குடாநாட்டில் இன்று எதிர்நோக்கும் மிக முக்கிய பிரச்சினை தளபாடங்கள், எரிபொருள், உணவு என்பவற்றை கடல்வழியாக கொண்டு போய்ச் சேர்ப்பதாகும்.

இதற்குச் சவாலாக அமைந்துள்ளவர்கள் கடற்புலிகள். வல்வெட்டித் துறையிலிருந்து செம்பியன்பற்று வரை காணப்படும் பல பாரம்பரியத் துறைகளே வட கடற்பிராந்தியத்தில் கடற்புலிகளின் புவியியற்பலம் எனில் மிகையாகாது. எனவே இக் கரையைக் கட்டுப்படுத்தி வடமராட்சியின் பாரம்பரியத் துறைகளையோ அவற்றை அண்டிய தோதான இடங்களையோ கடற்புலிகள் அண்ட முடியாத அளவிற்கு இராணுவ - கடற்படைத் தளங்களையும், நிலைகளையும் உண்டாக்குவது அரசின் உடனடிக் கேந்திர - இராணுவ தேவை போற் தென்பட்டது. புலிகளும் இந்த நோக்கிலேயே அரசின் அடுத்த கட்டப் படை நகர்வை நோக்கியுள்ளனர் போற் தெரிகிறது. அவர்கள் இவ்வாறு எதிர்பார்க்க வேண்டும் என்பதையே இராணுவமும் விரும்பிற்று.

எனவே ரிவிரச இரண்டு தொடங்குவதாக அரசு அதிகார பூர்வமாக அறிவித்த பின்னர் இராணுவம் தொண்டைமானாற்றினூடாக முன்னேற முற்படுவது போல் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இது ஒரு திசைதிருப்பு நடவடிக்கையே. இந் நடவடிக்கையின் மீது புலிகளின் கவனம் திருப்பப்பட்டதாக எண்ணிய இராணுவம் புத்தூர் - வாதரவத்தையூடாக மட்டுவில் பகுதியை நோக்கி மிகத் துரிதமாக முன்னேறியது. வாதரவத்தைக்கு அப்பால் வெளியாக இருப்பது இம்முன்னேற்றத்திற்கு சாதகமாயிற்று. மட்டுவில் ஊடாக கொடிகாமத்தை நோக்கி நகர்ந்து பின் சடுதியாக தெற்கை நோக்கித் திரும்பிய ரிவிரச இரண்டு படை நகர்வானது சங்கத்தானையூடாக கச்சாய் பகுதியில் அரியாலை, தனங்கிளப்பு வழியாக வந்த ஒரு படையணியுடன் இணைந்ததாகத் தெரிகிறது. இப்படைநகர்வு வலிகாமத்திலிருந்து வெளியேறிய அகதிகள் தங்கியிருந்த அனைத்துப் பகுதிகளையும் தன் எல்லைக்குள் கொண்டு வந்து விட்டது.

> "அரசு அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கையை குடாநாட்டினுள் விரைவில் ஆரம்பிக்கவுள்ளது. இது தென்மராட்சியை நோக்கிய ஒரு பெரிய படைநகர்வாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
>
> ............
>
> ரிவிரச இராணுவ நடவடிக்கையினால் செய்து முடிக்க முடியாமற்போன ஒரு முக்கிய காரியத்தை நிறைவேற்றும் நோக்கிலேயே தென்மராட்சியை நோக்கிய நடவடிக்கை மேற்கொள்ளப்படப்போகின்றது. யாழ் மக்களிற் பெரும்பகுதியினரை அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதே ரிவிரசவின் பிரதான அரசியல் நோக்கம். புலிகளால் ஒரு தனி அரசை இராணுவ ரீதியாக தக்கவைத்துக் கொள்ள முடியாது என உலகிற்கு எடுத்துக் காட்டுவது ரிவிரசவின் இரண்டாவது அரசியல் குறி.
>
> ..................
>
> ஆகவே தற்போது தென்மராட்சி - வன்னித் தொடர்பைத் துண்டிக்கக் கூடிய ஒரு பெரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டால், ஒன்று சாவகச்சேரியில் இடம் பெயர்ந்து வாழும் மக்கள் வலிகாமத்துள் செல்வர். அல்லது கிளாலிப் பாதை துண்டிக்கப்படுகையில் புலிகளால் பெரிதாகக் கட்டுப்படுத்தப்பட முடியாத ஒரு நிலையை எய்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது."
>
> தென்மராட்சி தாக்குதல் பற்றி இதழ் அல்...

இதேவேளை புலிகள் தமது ஆதரவாளர்களையும் போராளிகளையும் ஏனைய தளபாடங்களையும் கச்சாயிலிருந்து ஐநதே மைல் தொலைவிலிருந்த கிளாலியூடாக வன்னியை நோக்கி நகர்த்திய வண்ணம் இருந்தனர்.

ஆனால் கடந்த வெள்ளி கிளாலியும் புலிகளிடமிருந்து பெரிய எதிர்ப்பேதும் இல்லாத நிலையில் படைகள் வசமாயிற்று. இத்துடன் குடாநாட்டிற்கும் வன்னிக்குமிடையிலான புலிகளது அனைத்துத் தொடர்பும் துண்டிக்கப்பட்டு விட்டதாக நினைக்கிறது இராணுவம். இவ்வாறான தொடர்பற்ற நிலையில் புலிகளால் குடாநாட்டினுள் பெரிய அளவில் இராணுவத்தின் தளங்கள் மீதோ சிறிய முகாம்கள் மற்றும் நிலைகள் மீதோ தாக்குதல்களை மேற்கொள்ள முடியாது என்றும் அரச படைத் தலைமை திடமாக நம்புகிறது. முகாம்களை அழிக்கக்கூடிய தாக்குதல்களுக்கான தயாரிப்புகளில் ஈடுபடுவதற்கும், அவற்றிற்கான போராளிகளை வன்னியிலிருக்கும் புலித் தளங்களிலிருந்து குடாநாட்டினுள் கொண்டு வந்து சேர்ப்பதற்கும் தாக்குதல் முடிந்த பின்னர் பின்வாங்கி வன்னியை நோக்கிப் பாதுகாப்பாகச் செல்வதற்கும் புலிகளால் இனி முடியாது. எனவே அவர்கள் கிழக்கில் இயங்குவது போல் கெரில்லாக் குழுக்களாகவே இயங்க முடியும் எனவும் இப்படியான ஒரு சூழல் தோன்றினால் மட்டக்களப்பில் உள்ளது போல் சிறிய முகாம்களையும் குறைந்தளவு படையினரையும் கொண்டே குடாநாட்டையும் கட்டுப்படுத்தலாம் எனவும் கணக்குப் போடுகிறது அரசு.

இதன் அடுத்த பிரதான கட்டமாக யாழ். குடாநாட்டிற்கும் தெற்கிற்குமான ஒரு தரைவழிப்பாதையைத் திறப்பதில் அரசு மும்முரமாக ஈடுபடப்போகிறது எனத் தெரிகிறது. மேற்கூறிய ஒரு சூழ்நிலையை யாழ் குடாநாட்டினுள் அரசால் எய்த முடியுமெனில் அங்கிருந்து கணிசமான படைகளை எடுத்து அவற்றை தரைவழிப்பாதையொன்றைத் திறப்பதில் ஈடுபடுத்த வாய்ப்பேற்படும்.

புலிகள் நினைப்பதைப் போலன்றி அரசு சாவகச்சேரி கேரதீவு - சங்குப்பிட்டி, பூநகரி, முழங்காவில், தள்ளாடி, முருங்கன், மதவாச்சி பாதையையே தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் எனவும் தெரிகிறது. ஒரு பக்கம் கடல் இருப்பதால் இப்பாதை மீது புலிகள் தாக்குதல் தொடுப்பது பெரிய அளவில் வெற்றியளிக்கமுடியாது. கடல் மூலமாயினும் பாதையைக் கட்டுப்படுத்தும் முகாம்கள் காப்பாற்றப்புடலாம்.

தரைவழிப்பாதை திறக்கப்பட்டால் கடற்புலிகள் ஒரு பயனற்ற சக்தியாகி விடுவர் எனவும், கடற்படையை வடக்கிற்கான வழங்கல் வேலையில் பிரதானமாக ஈடுபடுத்துவதை விடுத்து புலிகளின் ஆயுதக் கப்பல்களைக் கண்காணிக்கவும், மேற்குக் கரையை பாதுகாக்கவும் ஈடுபடுத்தலாம் எனவும் அரசு எதிர்பார்ப்பதாக அறியப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வேலை நிறுததப் போராட்டம்:

## 14அம்சத்திட்டமும் மலையக மக்கள் முன்னணியின் காட்டிக் கொடுப்பும்

–சிவலிங்கம்–

சம்பள உயர்வு கூடுதல் வேலைநாட்கள் என்பவற்றைக் கோரி தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதனை முறியடிப்பதற்காக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் பாராளுமன்ற விவகார தோட்டத்துறை அமைச்சினால் 14அம்சத்திட்டம் என்றொரு திட்டம் முன்வைக்கப்பட்டது. அதனைப் பற்றி தோட்டத்துறை அமைச்சர் பிரதியமைச்சர் என்போர் பேசினார்கள். வேலைநிறுத்தத்தை கைவிடும்படி கேட்டுக் கொண்டார்கள். அவற்றுக்கு தொழிலாளர்கள் செவிசாய்க்கவில்லை.

இந்த 14 அம்சத்திட்டம் மேலோட்டமாகப் பார்ப்பதற்கு சிறந்த திட்டம் போலத் தோன்றலாம். ஆனால், அது முன்மொழியப்பட்ட தருணம் வேலைநிறுத்தம் பற்றி அறிவிக்கப்பட்டு தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்திற்கு தயாராகிவிட்ட தருணமாகும். இந்த அரசாங்கம் பதவியேற்று இரண்டு வருடங்களுக்குப் பின்னர் இந்த வேலைநிறுத்த வேளையில் அது முன்வைக்கப்பட்டதால் அது வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்காகவே முன்மொழியப்பட்டது என்பது தெளிவாகின்றது.

இத்திட்டத்தில் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த அரசாங்கம் அதனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இவ்வாறான வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தது. அவற்றுக்கு என்ன நடந்தது? அவை வெறும் வாக்குறுதிகளாகவே இருக்கும் போது மேலதிகமாக இன்னும் வாக்குறுதிகள் கொடுபடுவதேன்? இன்னும் ஏமாற்றுவதற்காகவன்றி வேறு எதற்கு?

இந்த 14 அம்சத்திட்டத்தின் 13வது பந்தி பின்வருமாறு கூறுகின்றது. ''வேலைநிறுத்தம் செய்வதற்குப் பதிலாக இந்த வேலைத் திட்டத்தைப் பற்றி மேலும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதாக இருந்தால் மாத்திரமே மேற்குறிப்பிட்ட அடிப்படைக் காரணங்களுடன் சேர்ந்த பொதுவான உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்படும்.''

இதன்படி வேலைநிறுத்தம் கைவிடப்படாவின் மேற்படி திட்டம் பற்றி பேச்சுவார்த்தை நடத்த (நடைமுறைப்படுத்த வல்ல) அரசாங்கம் முன்வராது. இது எப்படி இருக்கிறது? பயமுறுத்தலா? நிபந்தனையா?

இத்திட்டத்தின்படி கிராமசேவகர் நியமனம் பிறப்பு, இறப்பு, பதிவாளர் விவாகப்பதிவாளர், சமுர்த்தி உத்தியோகத்தர் நியமனங்களை வழங்குவது பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதைவழங்குவதற்கு கூட முதலில் வேலை நிறுத்தம் கைவிடப்படவேண்டுமாம். பிறகு தொழிற்சங்கங்களிடம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமாம். அதைச் செய்யவும் 12 மாதக்காலக்கெடுவும் வேண்டுமாம்.

இலங்கையிலுள்ள ஏனைய சமூகத்தவர்களுக்கு கிராமசேவகர் போன்ற நியமனங்களை வழங்குவதற்கு பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறதா? சமுர்த்தி உதவியை வழங்குவதற்கும் பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறதா? வேலைநிறுத்தம் செய்யவேண்டாம் என்று நிபந்தனை விதிக்கப்படுகிறதா? காலக்கெடு விதிக்கப்படுகிறதா?

மலையகமெங்கும் கிராமசேவகர்களை நியமிப்பது என்ற அடிப்படையில் பிரேமதாச ஆட்சிக்காலத்திலேயே நேர்முகப்பரீட்சைகள் முடிவடைந்தன. நியமனங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகளே செய்யப்படவிருந்தன! அதற்கு என்ன நடந்தது? விஜேதுங்க ஜனாதிபதியாக வந்தவுடன் அவர் வழங்க விரும்பவில்லை.

தோட்டப்பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கவும் இந்த வேலைநிறுத்தம் பேரம் பேசலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தளவுக்கு மலையகத்தின் படித்தவர்கள் கேவலமாக நடத்தப்பட வேண்டுமா?

மலையக மக்கள் சமமாக நடத்தப்படுகிறார்கள், சமமாக நடத்தப்படுவார்கள் என்றால் அரசாங்கம் நியமனங்களை வழங்குவதில் வித்தியாசமான நடைமுறையைக் கைக்கொள்வதேன்?

தோட்டத் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கும் இந்த வேலைநிறுத்தம் பேரம் பேசலாகக் கொள்ளப்படுவதும், அதற்கும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்று கூறுவது வேடிக்கையாக இல்லையா?

இதுவரை அதிகரிக்கப்படாத சம்பளம் 14 அம்சத்திட்டத்தில் குறிப்பிட்டது போன்று 12 மாதங்களுக்குள் எப்படிக் கூட்டப்படும்?

தோட்ட லயன் அறைகளில் கூரைகளை பழுதுபார்ப்பது பற்றியும் அத்திட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அந்த வீடுகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் பராமரிக்கப்படுமாம். இது ஐ.தே.கவின் திட்டம். அதுபற்றி கடந்த பொதுத்தேர்தலின் போது கதைக்கப்பட்ட போது எல்லோரும் அத்திட்டத்தை எதிர்த்தனர். தோட்டலயன்களில் வசிப்போருக்கு ஒரேயடியாக சொந்தமாக்கப்பட வேண்டும் என்பதே பொதுக்கோரிக்கையாக இருந்தது. (இ.தொ.க., இ. தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கம் தவிர) பொதுஜன ஐக்கிய முன்னணியும் அக்கோரிக்கை பற்றிக் கதைத்தது.

அந்த லயன் அறைகளைக் கூட தொழிலாளருக்கு சொந்தமாக்க தைரியமில்லாத அரசாங்கம் வேறு எதைத்தான் செய்யப்போகிறது.

> இந்த 14 அம்சத்திட்டம் மேலோட்டமாகப் பார்ப்பதற்கு சிறந்த திட்டம் போலத் தோன்றலாம். ஆனால், அது முன்மொழியப்பட்ட தருணம் வேலை நிறுத்தம் பற்றி அறிவிக்கப்பட்டு தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்திற்கு தயாராகிவிட்ட தருணமாகும். இந்த வேலைநிறுத்த வேளையில் அது முன்வைக்கப்பட்டதால் அது வேலைநிறுத்தத்தை முறியடிப்பதற்காகவே முன்மொழியப்பட்டது என்பது தெளிவாகின்றது.



வேலைவாய்ப்பு குறைந்த தோட்டங்களிலிருந்து வேலைவாய்ப்பு கூடிய தோட்டங்களுக்கு தொழிலாளர்களை குடிபெயரச் செய்வது பற்றியும் அத்திட்டம் கூறுவது நினைத்த மாத்திரத்தில் குடிபெயரச் செய்யக் கூடிய அடிமை மனப்பான்மையை தொழிலாளர்கள் கொண்டிருக்கிறார்கள் என்று நினைப்பதாகாதா?

அத்திட்டத்தின்படி தோட்ட இளைஞர்களுக்காக தொழில்சார் பயிற்சி நிறுவனங்கள் அமைக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது. ஏற்கெனவே ஏற்றுக்கொண்டபடி (ஐ.தே.க, பொ.ஜ.ஐ.மு. அரசாங்கங்கள்) ஹட்டனில் ஒரு தொழிற்பயிற்சி நிறுவனத்தை அமைக்க நடைமுறையில் அனுமதித்தால் தற்போதைக்கு போதுமானதாகும் என்றுஅரசிற்கு எண்ணத்தோன்றவில்லையா!

சிறிபாத கல்வியற் கல்லூரியை ஒழுங்காக நடத்த ஏற்பாடு செய்து அதனை பிரத்தியேகமாக்கினாலே கோடி புண்ணியம் கிடைக்குமே!

தோட்டப் பாடசாலைகள், ஏனைய மலையக பாடசாலைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியை முழுமையாகப் பயன்படுத்த இடமளித்தால் போதாதா?

இவற்றையெல்லாம் செய்ய வேண்டியதை விட்டு விட்டு ஏன் இன்னும் பல புதிய வாக்குறுதிகள்?

இத்திட்டம் பல வாக்குறுதிகளைக் கொண்டிருந்தாலும் நடைமுறைப்படுத்துவதை விட்டு விட்டு, அது பற்றி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றே அரசாங்கம் சொல்கிறது. பேச்சுவார்த்தை என்று சொல்கிற போது மலையக தொழிற்சங்கங்கள் ஒவ்வொன்றிடமும் பேச்சுவார்த்தை நடத்தி பொதுமுடிவுக்கு வர எவ்வளவு காலம் எடுக்கும்? சுமார் ஒரு வருடம் (பொது முடிவு காணப்படுவது சாத்தியமற்றும் போகலாம்)

பிறகு அக்கோரிக்கைகள் பற்றி அரசாங்க நிறுவனங்கள் தோட்டக் கம்பெனிகள் என்பவற்றுடன் பேசி முடிவுக்கு வர மேலும் ஒரு வருடமாவது எடுக்கும். (முடிவெடுக்க முடியாது கூடப் போகலாம்)

அதன்பிறகு ஒரு உடன்பாட்டிற்கு வர இன்னும் ஒரு வருடம் செல்லலாம். உடன்பாடு ஏற்பட்டால் உடன்பட்ட வியடங்களை நடைமுறைப்படுத்த எத்தனை வருடங்கள் தேவை? அதற்கிடையில் அடுத்த தேர்தல் வந்து விடும்.

எனவே இந்த 14 அம்சத்திட்டத்தில் இவ்வளவு ஓட்டைகளும் இருக்கின்ற போது இந்த 14அம்சத்திட்டத்திற்கு பின்னணியில் தொழிலாளர்கள், மலையக மக்கள் மீது உண்மையான நேசமுள்ள யாராவது இருப்பார்களா?

நேர்மையான அமைப்புகளும், ஆட்களும் இருக்க முடியாதுதான். ஆனால், மலையக மக்கள் முன்னணியின் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள்.

வேலைநிறுத்தத்திற்கு ஆதரவளிப்பதாக ஆரம்பத்தில் முடிவெடுத்தார்கள். பின்னர் அவர்களது அங்கத்தவர்களை வேலைக்கு போகுமாறு கேட்டுக்கொண்டார்கள். தலவாக்கொல்லையில் சிறிய தொகையினரை தவிர ஏனைய இடங்களில் மலையக மக்கள் முன்னணி தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

எனவே மலையக மக்கள் முன்னணி வேலை நிறுத்தம் செய்யவில்லையென்று அரசாங்கத்திற்கு காட்டுவதற்கு வேறுவழியிருக்கவில்லை. வேலைநிறுத்தத்தை வாபஸ் பெறுவதாக அறிக்கை விடப்பட்டது. பிரதி அமைச்சர் பேட்டியும் கொடுத்தார்.

சந்திரசேகரன் குறிப்பிட்டது போன்று ''மலையக மக்களின் நூற்றாண்டுகால கோரிக்கைகளை'' இன்னும் எத்தனை நூற்றாண்டிற்கு அவற்றை கோரிக்கைகளாகவே வைத்திருக்க ம.ம.முன்னணி விரும்புகிறது.

மலையக மக்கள் முன்னணி வேலைநிறுத்தக் கோரிக்கையை கூலிக்கோரிக்கையென்றும் அது அரசியல் கோரிக்கையை வென்றெடுக்கப் போவதாகக் கூறித்தான் வேலைநிறுத்தத்தை காட்டிக்கொடுத்த 'பல்டியை' அடித்தது.

மலையக மக்கள் முன்னணி அரசியல் கோரிக்கை என்று எதனைக் கூறுகின்றது. தொழிலாளர்களின் தொழிலுரிமைக் கோரிக்கை என்பது அரசியல் கோரிக்கையின் பகுதி என்பது மலையக மக்கள் முன்னணி தலைவர்களுக்கு விளங்குவதில்லையா? தொழிலாளர்களின் தொழிலுரிமை கோரிக்கைகளை வென்றெடுக்க தொழிற்சங்கப் போராட்டம் நடத்துவதை பிழை என்கிறார்களா?

அவர்கள் இ.தொ.கா. விற்கு மாற்றுத் தலைமையைக் கொடுப்பதாகக் கூறிக்கொண்டு வந்தவர்களாயிற்றே: இவர்கள் இவ்வாறு பம்மாத்து பண்ணுவதை தொழிலாளர்கள் அறியமாட்டார்கள் என்று யோசித்து விடலாகாது.

இதுவரையும் தொண்டமான் செய்து வந்த வித்தைகளை மிகவும் புத்திசாலித்தனமாக செய்யமுற்பட்டுள்ளனர் மலையக மக்கள் முன்னணி தலைவர்கள். மலையக மக்களை 'நவீன அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்கப் போவதாகக் கூறிக்கொண்டவர்கள் இவ்வாறு அப்பட்டமான காட்டிக் கொடுப்பைச் செய்வதன் மூலம் மலையக மக்களை நவீன அடிமைகளாக வைத்திருப்பதற்கு புத்திசாலித்தனமாக துணைபுரிகிறார்கள். நியாயமான ஜீவாதாரப் பிரச்சினைகளை முன்வைத்து நடத்தப்படும் போராட்டத்தை முறியடித்து அரசிற்கும் தனியார் கம்பெனிகளுக்கும் உதவுவது மலையக மக்களை நவீன அடிமைகளாக தொடர்ந்து வைத்திருப்பதற்கான புத்திஜீவித்தனமன்றி வேறென்ன?

மலையக மக்கள் முன்னணி பிழைவிடக் கூடாது பிழைவிடமாட்டாது அதனை விட்டால் மலையக மக்களுக்கு வேறு ஒரு ஸ்தாபனம் இல்லையென்பதல்ல நிலைமை. மலையக மக்கள் முன்னணிதலைவர்களிடம் மலையக மக்களின் விடுதலையை வேண்டி நிற்க வேண்டுமென்பதல்ல. 60 வருட தொழிற்சங்க வரலாற்றில் தொண்டமான் செய்த காட்டிக்கொடுப்புகள் ஒப்பீட்டளவில் கடந்த 8 வருடங்களாக மலையக மக்கள் முன்னணி தலைவர்கள் செய்த தில்லுமுல்லுகள், காட்டிக்கொடுப்புகள், வேலைநிறுத்தக் காட்டிக் கொடுப்பு என்பவற்றை விட குறைவானவையே என்று சொல்லத் தோன்றுகிறது.

தொண்டமானினதும் இ.தொ.கா.வினதும் தொழிற்சங்கப் போராட்டங்களில் பேரம் பேசி பெற்ற சிற்சில சலுகைகள் பிரசாவுரிமை உட்பட பெறப்பட்ட சில உரிமைகள் மலையக மக்களின் வளர்ச்சிக்கு உதவவில்லையென்றோ அவை அவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தவில்லையென்றோ கூறமுடியாது. மலையக மக்கள் முன்னணியில் பல உறுப்பினர்கள், தலைவர்கள் முன்னர் தொண்டமானின் தயவிலேயே உத்தியோகங்கள் பெற்றமையையும் மறந்து விடமுடியாது.

இப்படிக் கூறுவதன் மூலம் இ.தொ.காவோ தொண்டமானின் தலைமையோ தான் மலையக மக்களின் விமோசனத்திற்கு வழிசமைக்கும் என்ற முடிவுக்கு யாரும் வந்துவிடக்கூடாது. இ.தொ.கா. தலைமையின் தேவை காலம் கடந்து விட்டது. மலையக மக்களுக்கு இ.தொ.கா. போன்ற அமைப்புக்களினால் தலைமைதாங்க முடியாது. அது வரலாற்றில் நிரூபிக்கப்பட்ட விடயம்.

ஆனால், மாற்றுத் தலைமைகள், மாற்று அரசியல் என்று கூறிக்கொண்டு மலையகத்தில் வெளிப்பட்டவர்களின் இயலாமையாலும், மக்கள் விரோத நடவடிக்கைகளாலும் அவ்வக்காலத்து அரசாங்கங்களின் மலையக மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளாலும் மலையக மக்கள் இ.தொ.காவிடம் சரணடைய நேர்கிறது.

அவ்வாறு சரணடைய செய்யும் வேலையை மிகவும் விரைவாக மலையக மக்கள் முன்னணி செய்துவிட்டது. இ.தொ.கா வினதும் தொண்டமானினதும் மாதிரியை பின்பற்றி அதே வழியில் அரசியல் நடத்த முற்படும் போது அது மாற்றுத்தலைமையாக இருக்காது. மாற்று அரசியல் வழிமுறையாகவும் இருக்காது.

தேர்தலில் போட்டியிட டிக்கற் கிடைக்காததால் மலையக மக்கள் முன்னணியை அமைத்த வரலாற்றுடன் தொடர்ச்சியாக மலையக மக்கள் முன்னணியின் நடவடிக்கைகளை அவதானித்தால் அவர்கள் அரசியலை செய்யவில்லை என்பதும் அவர்கள் மாற்றுத் தொண்டமானையும், மாற்று இ.தொ.காவையும் கட்டி வளர்ப்பதிலேயே அக்கறை கொண்டுள்ளனர் என்பது புரியும். அந்த வழியிலேயே மலையக அரசியல் தொழிற்சங்க வரலாற்றில் வேலைநிறுத்த வாபஸ் மூலம் மிகவும் கீழ்தரமான காட்டிக் கொடுத்தலை செய்துள்ளனர் எனலாம்.

இ.தொ.காவினது குறைபாடு தொழிற்சங்க அரசியலின் குறைபாடு என்பவற்றை நிவர்த்தி செய்வதற்கான மாற்று தலைமையாக வளராது தொழிற்சங்கப்போட்டி, பதவிப் போட்டி என்ற அதே பழைய சாக்கடைகளில் மூழ்கி (பேரப்பேச்சில் குறைந்த சலுகைகளை வாங்கினாலும் பிழையில்லை) மக்களை நவீனமுறையில் காட்டிக் கொடுக்கும் சாதுரியத்தைக் கொண்டிருப்பதற்கு என்ன தான் நியாயமான விளக்கம் கொடுக்க முடியும்?

இ.தொ.கா உட்பட வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட, ஆதரித்த அமைப்புகள் தனித்தனியே பல நோக்கங்களை கொண்டு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கலாம். அவைகாட்டியும் கொடுக்கலாம். ஆனால், பொதுப் போராட்டத்தில் எல்லோரும் ஈடுபட்டிருக்கும் போது அதனைப் பல வீனப்படுத்துவது எவ்வகையில் முற்போக்கானது?

மலையக மக்கள் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கவே தற்போது சக்தியுள்ளவர்களாக இருக்கலாம். அவற்றினூடாக சக்திமிக்க ஒரு சமூகமாக வளரமுடியும். வளரவேண்டும். தொழிற்சங்க வரையறைகளை உணர்ந்து தேவையான கட்டத்தில் அந்த தொழிற்சங்க விலங்குளை உடைத்தெறியவும், சரியான அரசியல் வழிகாட்டலை செய்யவும் சரியான புதிய அரசியல் தலைமை ஒன்றை மலையக மக்களின் வரலாறு வேண்டிநிற்கிறது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "இப்பொழுதாயினும் அரசு புலிகளுடன் பேச வேண்டும்"

## ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம





**இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பொ.ஐ.மு. அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு யோசனைகள் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் என்பன எம்முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனை ஆராய்வதற்காக நோர்வேயில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. நீங்கள் அக்கருத்தரங்கினை பிரதிநிதித்துவப்படுத்திய ஒரே ஒரு தென்னிலங்கை அரசியல்வாதி. அக்கருத்தரங்கு எப்படி இருந்தது என்பதனைக் கூறமுடியுமா?**

நோர்வே நாட்டின் நிக்கல்சன் நிறுவனம் மூலம் தான் இக்கருத்தரங்கு ஒழுங்கு படுத்தப்பட்டது. நோர்வே நாட்டு வெளிநாட்டு அமைச்சரகத்துக்கும் இந்நிறுவனத்துக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது.

குறிப்பாக பலஸ்தீன மற்றும் பொஸ்னியப் பிரச்சினைகளில் தலையிட்டு புகழைப் பெற்றுக்கொண்டநாடு நோர்வே. அதைப்போலவே அவர்கள் இலங்கையின் இனப்பிரச்சினையின் பால் அக்கறை கொண்டவர்கள். இதற்கு ஒரே காரணம் இலங்கை அகதிகளில் பெரும்பாலானோர் நோர்வே நாட்டில் தஞ்சமடைந்துள்ளனர். மற்றும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் நோர்வே பிரதான இடத்தை வகிக்கின்றது. இதனால் இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி யாவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற வகையில் பிரதான கருத்தரங்கு ஒன்றை அவர்கள் ஒழுங்கு செய்தனர். அதன்படி 7 பேச்சாளர்களை அழைத்தனர். எழுவரில் நால்வர் இலங்கையர். மூவர் ஐரோப்பியர். இலங்கையர்களில் நான் ஐ.தே.கவைப் பிரதிநிதித்துவப்படுத்தினேன். மற்றவர்களில் அரசசார்பற்ற நிறுவனங்களை ஜெஹான் பெரேரா பிரதிநிதித்துவப்படுத்தினார். பல்கலைக்கழக விரிவுரையாளர் சோமசுந்தரம் தோட்டத்துறையையும் வீ. ருத்திரகுமாரன் புலிகள் அமைப்பையும் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களாகக் கலந்து கொண்டனர்.

ஐரோப்பியர்களில் நோர்வே நாட்டின் பிரதி வெளிநாட்டு அமைச்சர் எக்லண்ட், நோர்வே அமைச்சரும் இலங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள, இலங்கைக்கான அரச சார்பற்ற நிறுவன செயலாளரும் இதில் கலந்து கொண்டனர். 300 பேர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். இவ்வெண்ணிக்கையில் அரைவாசிப்பேர் ஐரோப்பியர்கள். மிகுதி அரைவாசிப் பேர் இலங்கைத் தமிழர்கள்.

இக்கருத்தரங்கில் புலிகளின் பங்குபற்றுதலும் காணப்படுவதால், இக்கருத்தரங்கு புலிகளுக்கு ஆதரவானது என்ற எதிர்ப்பு, நாம் கொழும்பிலிருந்து பயணிப்பதற்கு முன் வலுவடைந்தது. அவர்கள் அனைவரும் இக்கருத்தரங்கு மூலம் புலிகளின் கருத்துக்கள் யாவும் வலுவடையும் என்று குறிப்பிட்டனர்.

**உங்கள் கட்சி உறுப்பினர்கள் கூட மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினரே?**

இது குறிக்கோளற்ற தர்க்கம் அல்ல. நான் முதலில் குறிப்பிட்ட எழுவரில் அறுவர் புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. ஆனால், அவர்களிடம் வேறுபட்ட பார்வைகள் இருந்தன. இலங்கையை பிரிவினை செய்வதனை பலர் எதிர்த்தனர். இனங்களைப் பாதுகாக்கின்றோம் எனக் கூறுபவர்களிடம் வேறு எதனைப் பற்றிய அறிவும் இல்லை. ஒரு சிலரைத் தவிர மற்றவர்களுக்கு ஆங்கிலம் பேசத் தெரியாது. கருத்தரங்கின் அழைப்பிதழில் இருக்கும் குறிப்புக்களைப் படிக்க தெளிவு இல்லை. தாமாகக் குழம்பிக் கொள்கின்றார்கள். வெளிநாட்டு தூதுவராலயங்கள் முன் போராட்டம் நடத்தி தூதுவர்களை மிரட்டி இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. அறிவற்ற, சமூகத்தினால் ஒதுக்கப்பட்டவர்களின் குரல் மட்டுமே அது.

**யாழ்ப்பாணத்தில் இருக்கும் புலிகள் அமைப்பின் தலைவர்கள் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தமாட்டோம் எனக் குறிப்பிட்டுள்ள வேளையில், புலிகள் அமைப்பின் உத்தியோகபூர்வ உறுப்பினர் வீ.உருத்திரகுமாரன் அதிகாரப் பரவலாக்கலுக்கு ஆதரவாக பேசினார் எனக் கூறப்படுகிறது. இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

மிகத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பான புலிகளின் நிலைப்பாடு வெளிப்பட்டு இருக்கும் சந்தர்ப்பம் இதுதான் என்று நான் நினைக்கின்றேன். இப் பேச்சுவார்த்தை நடைபெற்ற திகதி வரையில் அரசாங்கத்தின் யோசனைகள் உத்தியோகபூர்வமாக புலிகளுக்கு தெரிவிக்கப்படவில்லை. அது ஒரு குறைபாடு. அதே பிரச்சினையாகவும் மாறியது. அரசாங்கத்தின் தீர்வு யோசனைகளை புலிகளுக்கு அனுப்ப பாராளுமன்றத் தெரிவுக் குழு ஏகமனதாகத் தீர்மானித்தது இக்கருத்தரங்கின் பின்னராகும். புலிகள் அவ்வரசியல் நிலைப்பாட்டை வெளியிட்டமையைக் குறைத்து மதிப்பிட முடியாது. ஏனெனில், நோர்வே புலிகளுக்கு முக்கியமான ஒரு நாடு. புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட நேரங்களில் ''சமாதானம் செயற்படுத்தப்படுவது தொடர்பாக ஆராய'' மூன்று நாடுகளைக் குறிப்பிட்டனர். அதில் பிரதான நாடு நோர்வே, பிறநாடுகள் கனடா, மற்றும் நெதர்லாந்து. இதனால் நோர்வே நாட்டின் வெளிநாட்டு அமைச்சரின் முன்னால் அவர்கள் வெளியிட்ட அறிக்கை முக்கியமான அறிக்கை என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

நாம் விரும்பியோ, விரும்பாமலோ அவ்வாறான உத்தியோகபூர்வ அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வது அவசியம்.

திம்பு பேச்சுவார்த்தையின் போதும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் போதும் புலிகளின் நிலைப்பாடு வெளிவந்தது. இன்றைய உலகில் தன்னுடைய எதிரியின் நிலைப்பாட்டை ஆராய்வதைத்தான் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றார்கள். ஆனால, யாரும் அவர்களை ஆராயவில்லை. அவர்களின் நிலைப்பாடு பரிணாமம் அடைந்ததா இல்லை. தோல்வி அடைந்ததா என்பதை யாரும் தேடிப்பார்க்கவும் இல்லை. அவர்களைப் பற்றி கற்கவேண்டியது அவசியம்.

நாம் பேச்சுவார்த்தைய்யை விரும்பவில்லை என்று அவர்கள் கூறமாட்டாகள்.எனவே கெரில்லா அமைப்பு என்ற ரீதியில் அது முக்கியமான ஓர் அறிக்கை. ஏனெனில் பேச்சுவார்த்தையை விரும்பிய கெரில்லா அமைப்புகளும் உள்ளன.

அவர்கள் திம்பு பேச்சுவார்த்தை தொடக்கம் கூறுவது ''தேசியவாதம்'' தொடர்பான பிரச்சினையை ஆகும். இது மார்க்ஸிய வாத கலைச்சொல்லில் இருந்து வந்தது. ஆனால், அவ்வடிப்படையில் இருந்துதான் நாம் திம்புவிலிருந்து பேச்சுவார்த்தை நடத்தினோம். இதன்படி அனைத்து இலங்கை அரசாங்கமும் இத்தேசியவாத கருத்தியலில் இருந்து முதல் தீர்வை கண்டுபிடிக்க வேண்டும்.

புலிகள் இக்கருத்தரங்கில், சந்திரிகா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் கூட தமது தேசியவாதம் தொடர்பான பிரச்சினை காணப்பட்டது என்பதைத் தெரிவித்தனர். பேச்சுவார்த்தை மேற்கொண்ட குழுவினால் தோல்வியடைந்தது என்பதை விட, தமிழ் மக்களின் தேசியவாதம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் இல்லாததன் காரணமாகவே பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். நாம் அவ் எண்ணக் கருவை கவனிக்க வேண்டும். முக்கியமான கருத்து என்னவெனில், மத்திய அரசாங்கத்தின் கேந்திர அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும் யோசனை. இதுவரை மாகாண சபைகள் மூலம் அதிகாரப் பரவலாக்கம் பற்றியே நாம் கதைத்தோம். இது பொன்னம்பலம் காலத்திலிருந்து தோற்றம் பெற்ற தமிழ் மக்களின் கோரிக்கையாகும். ஆனால், இனப்பிரச்சினையின் மத்தியில் இது மறக்கப்பட்டுவிட்டது.

நேர்மையாக பார்ப்பின் அனைத்து அரசாங்கங்களும் தமிழ் மக்களின் வசதிவாய்ப்பு நிலைமைகளை தவிர்த்து வந்துள்ளன. முதலில் செனட் சபையை கலைக்கப்பட்டது. அதன்பின் சோல்பரி ஆணைக்குழு மூலம் வழங்கப்பட்ட சிறுபான்மையினரைப் பாதுகாக்கும் ஷரத்துக்களை கொல்வின் ஆர். டி. சில்வா தயாரித்த 1972 அரசியலமைப்பு நீக்கியது.

ஜயவர்த்தன காலப்பகுதியில் ''ஒற்றையாட்சி முறைக்கு ஆதரவு தெரிவிக்க மாட்டோம்'' என்று கூறி தமிழ் உறுப்பினர்கள் பாராளுமன்ற வெளிநடப்புச் செய்தனர். தமிழ்ப் பிரதிநிதிகள் மத்திய அரசினுள் செயற்படுவது மிகக் குறைந்துள்ளது. அது மிகப் பெரிய தவறு. அரசு அவர்களின் பங்குபற்றுதல் தொடர்பாக கூடிய கவனம் எடுத்திருக்கலாம்.

நிறைவேற்றதிகாரம் மட்டுமே அவர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். இது முழு நாட்டுக்குமான தேர்தலாக அமைவதால் தமிழ் மக்கள் ஓரளவு அமுக்கத்தை வழங்கலாம்.

இந்நிலையை புலிகள் குறிப்பிட்டாலும் குறிப்பிடாவிட்டாலும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

**அரசியல் விமர்சகர்கள் புலிகள் மத்திய அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் பற்றி கதைத்தது ஓர் தந்திரத்தோடுதான் என்று குறிப்பிட்டனர். அப்படியெனில், எந்தவொரு மத்திய அரசாங்கமும் அதிகாரத்தைப் பரவலாக்க விரும்பாது என்பது அவர்களுக்குத் தெரியும். இக்கருத்தைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

எந்தக் காரணத்துக்காக அவர்கள் இந்த யோசனையை முன்வைத்தார்கள் எனத் தெரியாது.

**அவ்வாறெனில் இதன்மூலம் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்த முடியும் தானே?**

ஓரளவினை, ஓரினத்திற்கு வழங்கும் முறையொன்று உள்ளது. இதைத்தான் பொஸ்னியா கடைப்பிடிக்கின்றது. சிலவேளைகளில் இப்பிரிப்பு மக்களின் விகிதாசாரத்தினை விட கூடிய அதிகாரப் பிரிப்பாகவும் இருக்கும். அதைப்போலவே சில பிரதேசங்களில் அப்பிரிவினருக்கு தாக்கம் செலுத்தும் சட்டதிட்டங்களை அமுல்படுத்துவதாயின் (நாட்டின் பிற பகுதிகளை விட) வாக்கடிப்படையில் குறைவாயினும், அப்பிரிவினரிடம் இருந்து பெறக்கூடிய அதிக வாக்குகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதிகாரப் பரவலாக்கல் முறைகளில் இதுவும் ஒன்றாகும். அதிகாரப் பரவலாக்கத்தின் போது, கைதவறிய பல வரப்பிரசாதங்களை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

அப்படி விருப்பம் தெரிவித்த பின்னா அதில் இருக்கும் தந்திரங்களை ஆராய்ந்தறியலாம். நமக்கு அங்கு பேச்சுவார்த்தை நடத்தவேண்டிய தேவை ஒன்று உள்ளது.

**இதைத் தவிர நோர்வே அறிக்கையின் மூலம் புலிகள் வடக்கு - கிழக்கை "விசேட ஒன்றியமாக்கி" அதிகாரத்தை பரவலாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர் தானே?**

மாகாண சபைகளில் அதிகாரம் பிரிக்கப்பட்டது சமமாக என அவர்கள் குறிப்பிடுகின்றனர். அப்படிச் செய்யாது வடக்கு - கிழக்கை மட்டும் விசேட ஒன்றியமாக கருதி விசேட அதிகாரத்தை தருமாறு கேட்டனர். ''அசாதாரண அதிகாரப் பிரிப்பு'' பற்றி அவர்கள் அக் கோரிக்கையை விடுத்தனர்.

இதில் பாதகமான பக்கமும் உண்டு. ஜயவர்த்தனாவின் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் செய்தது ''சமமான அதிகாரப் பிரிப்பாகும்'' எப்படியாயினும் இவ் அசாதாரண அதிகாரப் பிரிவு தொடர்பாக வாதப் பிரதிவாதங்கள் இடம் பெறுதல் அவசியமாகும்

**ஐ.தே.கவின் அமைச்சர்கள் வெளியிடும் அறிக்கைகள் முரணானவையாக உள்ளன. உதாரணத்துக்கு ஐ.தே.கவின் நிழல் மந்திரி சபையின் பாதுகாப்பு அமைச்சரான தயாரத்ன அவர்கள் இவ்வாறு ஓர் அறிக்கையொன்றை விடுத்தார். "நாம் வடக்கு - கிழக்கை இணைப்பது தொடர்பாக ஆதரவு தெரிவிக்க மாட்டோம். அதிகாரப்பரவலாக்கலை மேற்கொள்வதில் ஆதரவு தெரிவிப்போம்" என்று குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான அறிக்கைகள் மூலம் தெளிவாவது அக்கறையின்மை தானே?**

முதலில் நான் கூறவேண்டியது. ஐ.தே.க. ஓர் ஜனநாயகக் கட்சி. வெவ்வேறுபட்ட கருத்துக்கள் அதனுள் உண்டு. ஆனால், நாம் அனைவரும் பேச்சுவார்த்தை நடத்தி ஓர் நிலைப்பாட்டுக்கு வருவோம்.

**வட -கிழக்கு, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் தற்காலிகமாக ஒன்று படுத்தப் பட்டுள்ளது. அப்படியெனில் ஏன் இவ்வாறான அறிக்கைகள் வெளியிடப்பட வேண்டும்?**

எவ்வேளையிலும் தற்காலிக இணைப்பு என்பதனை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்? மக்கள் அபிப்பிராயம் தான் ஒன்றுபட வேண்டுமா, இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டும். நம்மிடம் மிகப் பெரிய நம்பிக்கை இருந்தது. சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் கிழக்கு மக்கள் தனியே ஓர் மாகாண சபையை ஏற்படுத்திக் கொள்வார்கள் என்றாகும். அதனையே ஜயவர்த்தன கூறினார்; அச்சந்தர்ப்பத்தில் ஐ.தே.க. கிழக்கு பகுதியினரின் சுயாதீனத் தன்மையை பாதுகாக்க தலையிடும் என்று. அதை மேற்கொள்ள முடியாமல் போனதற்கு காரணம் ஸ்ரீ.ல.சுவும் ம.வி.முவும் ஆகும். பரஸ்பர விரோதம் இருப்பின் அது, ஸ்ரீ.ல.சு.கவிடமே. நம்மிடம் விரோதம் இல்லை.

**தமிழ்க்கட்சிகளும் புலிகள் அமைப்பும் வட - கிழக்கை இணைக்க வேண்டும் என்றே கோருகின்றனவே?**

வட - கிழக்கை இணைப்பது அல்லது பிரிப்பது என்பது சர்வஜன வாக்கெடுப்பு மூலம் என்பதனை நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டோம். அது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. புலிகளும் இதற்கு உடந்தையாகினர். அவர்கள் என்ன கூறினாலும் எங்கள் நிலவரத்தை மாற்ற முடியாது. அது நாம் அனைவரும் எடுத்த முடிவு.

**இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கம் புலிகளுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனச்சிலர் குறிப்பிடுகின்றனர். இதைப்பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

இது முக்கியமான கேள்வி. இப்பொழுது யுத்த நிலவரமே காணப்படுகிறது. அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துமா இல்லையா? என்பது எங்களுக்குத் தெரியாது. எனக்கு யுத்தநிலைமைகள் தெரியாததனால் தெளிவான விடையை வழங்க முடியாது.

ஆனால், சாதாரணமாக யுத்தம் நடைபெறும் நாடுகளில் கூட எதிர்த்தரப்பினருடன் இரகசிய பேச்சுவார்த்தை மேற்கொள்ளப் படுகின்றது. பிணக்கு இருக்கும் பொழுது தொடர்பும் மிகவும் அவசியம். ஏனெனில், இருதரப்பினரும் என்ன நினைக்கின்றனர் என்பதை இருதரப்பினரும் அறிந்து கொள்ள வேண்டும். நான் நினைக்கின்றேன்; பகிரங்கமாகவோ அல்லது இரகசியமாகவோ தொடர்பு இருக்க வேண்டும்.

**இலங்கையின் அரசாங்கங்கள் தமிழ் மக்களின் ஆதரவினைப் பெற்றுக் கொள்ளவில்லை என நீங்கள் குறிப்பிட்டீர்கள். சென்றகிழமை இந்தக் காரணத்தை கருத்திற்கொண்டு சிவசிதம்பரம் பின்வருமாறு அறிக்கை விடுத்தார். "தமிழர்களை கடவுளால் மட்டுமே பாதுகாக்க முடியும்" என்றாகும். இக்கூற்று செல்வநாயகத்தாலும் வெளியிடப்பட்டது. இதன் மூலம் தெளிவாகுவது 1940களின் நிலைமை 1990களிலும் நிலவுகிறது என்பதா?**

சிவசிதம்பரத்தின் கூற்று சரியானது என நான் நினைக்கவில்லை. ஏனெனில், இந் நாட்டு அரசாங்கங்கள் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஏதோவொரு செயற்பாட்டை மேற்கொண்டுள்ளன. ஏதோ ஒரு குறைபாட்டின் காரணமாக சரியான பிரதிபலனை மேற்கொள்ள முடியாமல் போய்விட்டது. சிலவேளை அவர் இவ்வாறு கூறக் காரணம்; அரசாங்கத்தை மட்டுமன்றி புலிகளையும் கருத்திற் கொண்டதாகவும் இருக்கலாம். நோர்வே கருத்தரங்கின்போது புலிகள் தம்மை தமிழ் மக்களின் ஒரேயொரு பிரதிநிதியாக கருதும்படி கேட்டிருந்தனர்.

அப்படியெனில், கடவுள் இரக்கமில்லாமல் இருப்பது பிற, அரசியல் தலைவர்கள் மீதாகும். இலங்கை அரசாங்கத்துடன் தமிழ்க் கட்சிகள் பேச்சுவார்த்தை மேற்கொள்ள முடியும். பேரம் பேச முடியும். ஆனால், புலிகளுடன் இவை ஒன்றையும் மேற்கொள்ள முடியாது. இதை நான் கேவலமான நிலை என்றே நினைக்கின்றேன். இவர்களால் தான் இருதரப்பினரையும் சமாதானத்திற்கு உட்படுத்த முடியும்.

புலிகள் தாம் தமிழ் மக்களின் ஒரேயொரு பிரதிநிதி என்ற மனோபாவத்தை நீக்க வேண்டியதே தமிழ்க் கட்சிகளுக்கு உள்ள பிரதான பிரச்சினை. எப்பொழுதும் தமிழ்க் கட்சிகள், தீர்வு யோசனைகள் வழங்கினால், நாம் தமிழ் மக்கள் முன் சென்று தீர்வுக்கு ஆதரவை பெற்றுக் கொள்ளுவோம் என்று கூறுவார்கள். படிப்படியாக தமிழ்க்கட்சிகளின் இக்கூற்று மறைந்து செல்கின்றது என்பதையே காணக் கூடியதாகவுள்ளது. எவ்வாறாயினும் இன்று நாட்டின் முக்கிய பிரச்சினை இனப்பிரச்சினையாகும். தெற்கில் குரல் கொடுத்தாலும் வடகிழக்கில் இதைச் செயற்படுத்த வாய்ப்பு இல்லை. இது தீர்க்க வேண்டிய பிரச்சினையாகும்.

பொ.ஐ.மு. அரசாங்கமும் புலிகள் இயக்கமும் இச் செயற்பாட்டிலிருந்து விலகி இருக்கும் வரை இக்காரியம் கடினமானதாகவே இருக்கும். அதேபோல் தமிழ்க் கட்சிகள் விலகியிருக்கும் வரை இத்தீர்வு யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் சாதகமான நிலைமையைத் தோற்றுவிக்க முடியாது போய்விடும். அதைத்தவிர பிற தமிழ்க்கட்சிகள் மூலம் தமிழ் மக்கள் பிரதிநிதித்துவப்பட மாட்டார்கள் என புலிகள் கூறுகின்றனர். இவையெல்லாவற்றையும் ஒன்றாக்கிப் பார்ப்பின் இவ் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விட புலிகளின் நிலைப்பாடு உயர்வாக உள்ளது என்பது தெளிவாகும். அவர்களின் சக்தி குறைவடையவில்லை என்று நான் கூறமாட்டேன். அவர்களின் சக்தி குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளது, மிக முக்கியமாக மத்தியஸ்தம் வகிக்கக்கூடிய தமிழ் மக்கள் இல்லையென்றே கூறலாம்.

எல்லாம் செய்தும், யுத்தத்தை நிறுத்த முடியவில்லையாயின் அதில், அர்த்தம் இல்லை. யுத்தத்தை நிறுத்த இருக்கும் ஒரேயொரு காரணிதான் சுயாதீனமான தமிழ்க்கட்சி. அவ்வாறன ஓர் பிரிவு இல்லையாயின் அவர்களின் பக்கச்சார்பு எந்தவொரு காரணத்துக்காகவோ புலிகளுடன் இணைந்து இருப்பின் தீர்வு யோசனைகள் மூலம் நாம் எதிர்பார்க்கும் பிரதிபலனை பெற்றுக்கொள்ள முடியாது. அதுதான் ஜீரணிக்கமுடியாத யதார்த்தம்.

நேர்காணல்- அங்கதன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"...பிற்போக்கு காரர்களால்
பின்தள்ளப்பட்டீர்கள்
முற்போக்குக் காரர்நாம்
முறியடிப்போம் இன்னல் என்றார்
எப்போக்குக் காரர் வந்தும்
இன்னல் களையவில்லை - துன்பம் தொலையவில்லை
துயர்கதையோ முடியவில்லை...".

"...எத்தனையோ பேர்கள் வந்தார்கள்
எதையெதையோ சொன்னர்கள்
மெத்தையிலே உன்னை வைத்து
மேன்மையுறச் செய்வோமென்று
அத்தனையும் நம்பியுள்ளம்
ஆசையுடன் தொலையவில்லை..."

"...மண்ணதிர விண்ணதிர வாய்ச்சிலம்பமாடி
மாண்டொழிந்த பழமையினை இன்னுமிங்குகூறி
கண்ணெதிரே கொடுமை கண்டும்
கற்சிலையாய் மாறி
காரேறிப் பவனி வரும் கனவான்கள் கூட்டம்
உன்னுதிரம் உறிஞ்சியுடல் உப்புகின்றதை நீ
ஓர் நிமிடம் சிந்தித்தால் உன் வாழ்வு மலரும்.
புண்ணதனில் வேல்பாய்ச்சப் பொறுத்திருப்பதோடா?
பொங்கியெழு சிங்கமென எந்தன் மலைத்தோழா!..."
- குறிஞ்சித் தென்னவன் கவிதை
(ஒரு கனவு நினைவாகிறதிலிருந்து...)

மலையகத் தொழிலாளர்களின் பொங்கியெழுகின்ற போராட்டங்களின் போதெல்லாம், கூடச் சேர்ந்து தலைமைக் கொடுப்பதாகக் கூறிக் கொண்டு சென்று, இடையில் பிரேக் போட்டு நிறுத்தி நகர விடாது செய்கின்ற பாத்திரத்தை காலாகாலமாக மலையக தொழிற்சங்கங்கள் செய்து வந்திருக்கின்றன. அப்படியான தொழிற்சங்கங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கும் அதன் தலைவர் தொண்டமானுக்கும் நிறையவே பங்குண்டு.

ஏப். 22ம் திகதியிலிருந்து ஏப். 27ம்திகதி வரை நடந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தின் போதும் இதுவே நடந்தது. தொழிலாளர்களின் கோரிக்கைகள் தொடர்பாக இறுதிவரை தோட்டக் கம்பனிகள் உடன்படாத போதும் வேலைநிறுத்தத்தை அநாயசமாக கைவிட்டன தொழிற்சங்கங்கள். உண்மையிலேயே 'செத்தவனுக்கு தான் சுடுகாடு தெரியும்' என்பது போல இத்தனை காலமும் துன்பப்பட்ட தொழிலாளர்களுக்கே இப்போராட்டத்தின் வலிமை தெரியும்.

வேலைநிறுத்தத்தின் இறுதி நாளன்று பல தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை தொடரும்படி தொழிற்சங்கங்களை நோக்கிப்படையெடுத்தபோதும் அவை நழுவிச் சென்றன. இறுதியில் போராட்டம் தொழிலாளர்களின் பலத்தைக் காட்ட மட்டுமே பயன்பட்டதேயொழிய தமது கோரிக்கைகளை வென்றெடுக்க முடியவில்லை. உண்மையில் இதன் மூலம் வெற்றிபெற்றது ஆளும் வர்க்கமும் கம்பனி முதலாளிமார்களுமே என்பதுதான் உண்மை. இப்போராட்டத்தின் ஆரம்பத்திலிருந்து மீள்பார்வையொன்றை செலுத்துவது இங்கு பொருத்தமானது.

### போராட்டத்தின் பின்னணி:

இலங்கையில் ஏனைய துறைகளை விட தோட்டத் தொழிற்துறையைச் சார்ந்த தொழிலாளர்களே கடந்த பல வருடங்களாக குறைந்த சம்பளத்தைப் பெற்று வந்திருக்கிறார்கள். அதற்காகப் போராடியும் வந்திருக்கிறார்கள். 1984இலும் இதற்காகவே 12 நாள் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டது. குறிப்பாக சம்பள உயர்வு குறித்தும், சம சம்பள உயர்வு குறித்தும் இவ்வேலை நிறுத்தப்போராட்டம் நடந்திருக்கிறது.

அன்று ஆட்சியிலிருந்த ஜே. ஆர் அரசாங்கம் 'கிழமைக்கு ஆறு நாள் வேலையையும், தோட்டத்துறை ஆண் தொழிலாளர்களுக்கும், பெண் தொழிலாளர்களுக்குமான சம சம்பளமாக 23.74 சதத்தையும்' வழங்குவதாக ஒப்புக்கொண்டது.

அதன் பின்னர் அவ்வப்போது தொழிலாளர்களின் நிறைவேற்றப்படாத கோரிக்கைகளுக்காகவும் சம்பள உயர்வு குறித்தும் போராட்டங்கள் நடத்தி, ஒரு சில உரிமைகளை மாத்திரம் பெற்றுக்கொண்டார்கள்.

1987ஆம் ஆண்டின் போதும் ஜே.வி.பியின் தொழிற் சங்கம்; தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் மாதச் சம்பளமாக ஆக்க வேண்டுமென்றும், அது 2500ரூபாவாக இருக்கவேண்டுமென்றும் அப்போது கோரிக்கை விடுத்துமிருந்தது.

1992ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தின்போது அரசாங்க ஊழியர்களுக்கு 20% சம்பள உயர்வு வழங்கிய போது தோட்டத் தொழிலாளர்களுக்கும் 20/=ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டது. அதன்படி முதற் கட்டமாக ஜனவரியிலிருந்து 12 ரூபா வழங்கப்பட்டதுடன், 1993 ஜுலையிலிருந்து மிகுதி எட்டு ரூபாவையும் சேர்த்துக் கொடுப்பதாக அன்றைய பிரேமதாச அரசாங்கம் ஒப்புக்கொண்டது. எனினும் இன்று வரை அந்த 8 ரூபா வழங்கப்படவில்லை. அதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று தோட்டத்துறை தனியார் மயமாக்கப்பட்டதே. 1992 ஜுலையில் அரச கம்பனிகளில் பல, தனியார் மயமாக்கப்பட்டு அரசுக்கும், கம்பனி துரைமார்களுக்கும் இடையில் ஏற்பட்ட சமரச உடன்பாடுகளின் விளைவே தொழிலாளர்களின் வயிற்றில் ஏற்பட்ட இந்த அடி. அன்றைய அந்த 8ரூபாவுக்குப் போராடியவர்களே இன்றும் அதை தொடர்கிறார்கள். இன்று 1996 ஆம் ஆண்டு நடந்துகொண்டிருக்கிறது. வருடாந்தம் சகல துறையினருக்கும் வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்படுகின்றது. வாழ்க்கைச் செலவுப்புள்ளி மாதாமாதம் உயர்ந்து கொண்டுதான் சென்றிருக்கின்றன. ஆனால் இவ் அப்பாவி தொழிலாளர் 1993ம் ஆண்டின் போது கேட்டிருந்த 8ரூபாவையே இன்றும் கேட்கின்றனர். 1994இன் சம்பள உயர்வையோ 1995இன் சம்பள உயர்வையோ 1996இனதோ அல்லது நியாயமாக அத்தனை வருடங்களினதோ சம்பள உயர்வைக் கேட்கவில்லை அவர்கள். ஆனால், அந்த 8ரூபாவைக் கூட வழங்க மறுத்துவிட்டன கம்பனிகள். எட்டு ரூபா என்ன மூன்று ரூபாவைக்கூட தரமறுத்துவிட்ட நிலையில் தொழிலாளர்களின் போராட்டத்தையும் தொழிற்சங்கங்கள் இடைநிறுத்திவிட்டன. மலையக மக்கள் முன்னணியோ இன்னும் ஒரு படிமேலே போய் அரசு ரூபா 2.76சதம் தருவதாக ஒத்துக்கொண்டுவிட்டதே இன்னும் என்ன என்று சிங்கள பேரினவாத அரசு கேள்வி எழுப்புவது போல் கேட்டுள்ளது.

### ஆரம்பித்தது எப்படி?

தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்திற்கு உந்துசக்தியாக இருந்தது, மார்ச் மாதம் பூண்டுலோயா சீன், மடகும்புர, வட்டகொட ஆகிய தோட்டங்களில் தொழிலாளர் மேற்கொண்ட போராட்டமே அவ்வேலைநிறுத்தம் சில தொழிற்சங்கங்களினால் காட்டிக் கொடுப்புக்கு உள்ளாக்கப்பட்ட தோட்டக்கமிட்டித் தலைவர்கள் பலர் முன் நீதிமன்றத்தின் நிறுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர். நீதிகோரி கிளர்ந்தெழுந்த இத்தொழிலாளர்களின் பிரச்சினையை தொடர்ந்தே ஏனைய தொழிலாளர்களும் தன்னிச்சையாகவே வேலைநிறுத்தத்தல் ஈடுபட காரணமாகியது. இதைத்தொடர்ந்தே மார்ச் மாதம் 18ம் திகதி இ.தொ.கா. உத்தியோகத்தர் சபைகூடி ஏப். 22 - 27 வரை அடையாள வேலைநிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்தது. பிரதானமாக,

* 8ரூபா சம்பள உயர்வு
* வருடத்தில் 300 நாள் வேலை.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தது. அதனைத் தொடர்ந்து மார்ச் 26ம்திகதியன்று '' தொழிற்சங்கங்களின் கூட்டான 'பெருந்தோட்டத் தொழிலாளர் கூட்டுக் கமிட்டி' கூடி இ.தொ.கா. முன்வைத்த அதே கோரிக்கையை முன்வைத்ததுடன் அவ்விரு கோரிக்கைகளையோ அல்லது தொழிலாளர்களுக்கு மாதாந்த சம்பளமாக 2000 ரூபாவை வழங்கும்படியும் கோரியது. ஒன்றிணைந்த போராட்டமாக நடத்தவேண்டும் எனக்கூறி இ.தொ.கா. அறிவித்த அதேதிகதியில் தாமும் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்தது. ஆனால், கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக காலவரையறையற்ற வேலை நிறுத்தம் என அறிவித்தாலும் முதலில் பின்னர் அதிலிருந்து பின்வாங்கி இ.தொ.கா. போன்றே '27ம் திகதி வரை' அடையாள வேலைநிறுத்தம் என அறிவித்தது.

இதற்கிடையில் போராட்டத்துக்காக ஓரணியில் திரள முன்வராத இ.தொ.கா. கூட்டுக்கமிட்டி தாம் அறிவித்திருந்த 22ம் திகதியை தேர்ந்தெடுத்தற்காக கண்டித்தது. வேலைநிறுத்தத்தின் வெற்றி தமக்கு மட்டுமே சொந்மானது என உரிமை கோருவதற்காகவே இதிலும் தனது பிழைப்பு வாதத்தைக் காட்டியது. இவ்வேலை நிறுத்த அறிவித்தலைத் தொடர்ந்து அரசாங்கம் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஆசைகளைக் காட்டி விலைபேசியது. ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையை தொடர்ந்து, சில தொழிற் சங்கங்கள் அரசிடம் சரணடைந்தன. காட்டிக்கொடுத்தன.

அதைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா மக்கள் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் சூரியப்பெரும இப்படித் தெரிவித்தார்.

''எமது ஜனாதிபதி சிறுபான்மையினங்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்த முயற்சி செய்து வரும் இவ்வேளை வேலை நிறுத்தம் செய்வது முறையல்ல..... இதனால் இந்த அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்த மேற்கொள்ளும் இந்த நடவடிக்கையை நாங்கள் எதிர்க்கிறோம், நாங்கள் இதில் பங்குபற்ற மாட்டோம்.''

மலையக மக்கள் முன்னணியோ ''நாங்கள் தொழிலாளர்களை வேலைநிறுத்தத்தில் ஈடுபடச் சொல்லவுமில்லை. ஈடுபடவேண்டாமென்றும் சொல்லவுமில்லை.'' என்று நழுவியது. அக் கூற்றை மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் கூறியிருந்த அதேநேரம் அதன் செயலாளர் காதர் தொழிலாளர்களிடமிருந்து அறிக்கைக்கு எதிராக கேள்வி எழுப்பட்டதனைத் தொடர்ந்து '' தொழிலாளர்கள் அல்லாத ஏனையோரையும் பங்குகொள்ளச் செய்து அதனை ஒரு அரசியல் போராட்டமாகவே மாற்றப்போகிறோம். 22ம்திகதி நடக்கவிருந்த வேலைநிறுத்தத்தில் முழு வீச்சுடனும் ம.ம.மு. ஈடுபடும். அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து முழு மலையக மக்களையும் அணிதிரட்டி அரசியல் போராட்டமாக மலையகமெங்கும் நடத்தும்'' என்று அறிக்கை விடுத்தார்.

ஆனால், மீண்டும் சந்திரசேகரன் 'லங்காதீப பத்திரிகைக்கு பேட்டியளித்தபோது ஏற்கெனவே தாம் சொன்னதைத் திருப்பிச் சொன்னதன் மூலம் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு வெளியில் தாம் இருக்கபோவ உறுதியாக நிரூபித்தார். மலையக மக்கள் முன்னணி துரோகமிழைக்கப்போகிறது என்ற அச்சம் பரவலாகப் பரவியது.

அப்போதுதான் சில தொழிற்சங்கங்கள் அத்தியட்சகர் பதவிக்கு மலையக மக்கள் முன்னணி, அமைச்சர் பதவிக்கும் விலைபோய் விட்டதாக கதைகள் பரவின. அவர்கள் விட்ட சுத்துமாத்து கதைகள் உண்மையிலேயே விலை போய்விட்டனவோ என சிந்திக்கச் செய்தது.

இவ்வேலைநிறுத்தத்திற்கு இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, நவலங்கா சமசமாஜக்கட்சி என்பவை ஆதரவு வழங்கி அறிக்கை வெளியிட்டதுடன், தொழிற்சங்க நடவடிக்கையை முறியடிக்க அவசரகால சட்டம் பயன்படுத்தப்படக்கூடாது என அரசைக் கோரியன.

ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட, ரெலோ, ஈரோஸ் ஆகிய ஐந்து தமிழ் இயக்கங்களும் கூட்டாக இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தன.


ஏப். 11ம்திகதி ஜனாதிபதிக்கும் இ.தொ.காவுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடந்தது. இறுதியில் 16ம் திகதி கம்பனிகளுடன் கதைத்துவிட்டு பதில் சொல்வதாக தொண்டமானுக்கு உறுதியளிக்கப்பட்டது.

இதேவேளை 23 கம்பனிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முதலாளிமார் சம்மேளனமும் சமரசத்துக்கு அழைத்துப் பேசியது. சிறிதுகூட விட்டுக்கொடுக்க கம்பனிகள் தயாரில்லாத நிலையில் தொழிற்சங்கங்கள் தமது முடிவில் உறுதியாக இருந்தன.

எனவே அரசு 14 அம்ச திட்டமொன்றை முன்வைத்தது.

அத்தீர்வுத்திட்டத்தில் கூறப்பட்டவை எதுவுமே தொழிலாளர்களின் கோரிக்கைகளோடு முழுதும் தொடர்புபட்டவையல்ல அக்கோரிக்கைகள் எல்லாமே பொதுஜன முன்னணி அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னர் தேர்தலின் போது முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் **'மலையகத் தொழிலாளர்'** என்கிற தலைப்பின்கீழ் சொல்லப்பட்டவையே. (பார்க்க பெட்டிச் செய்தி) அதை புதிதாக வழங்கப்படும் மேலதிக சலுகையாக காட்ட அரசு முயற்சித்தது. அதைவிட அவை அம்மக்களின் உரிமைகள், சலுகைகள் அல்ல.

இப் 14 அம்சத்திட்டத்தை எதிர்த்து புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் தம்பையா வெளியிட்டிருந்த அறிக்கையில் ''பெருந்தோட்டத் தொழில் அமைச்சினால் முன்வைக்கப்பட்டுள்ள 14 அம்சத்திட்டம் பற்றி பேசி முடிவெடுக்க முன்நிபந்தனையாக வேலை நிறுத்தத்தைக் கைவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அத்திட்டத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களைப் பற்றிப் பேச வேண்டிய அவசியமில்லை. அவற்றையாவது நடைமுறைப்படுத்தவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அவற்றில் கூறப்பட்டுள்ள வேலைவாய்ப்பு அரசாங்க உத்தியோகம் என்பன மலையக மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள். பிசசைகளையல்ல...!'' என தெரிவித்தார்.




இந்த 14அம்சக் கோரிக்கையில் 13வது பிரிவானது முற்றிலும் தீர்வல்ல. நிபந்தனை, மிரட்டல் என்பதுதான் உண்மை.

இதற்கிடையில் அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி பொலிஸ் இராணுவத்தை அழையுங்கள் என துரைமார்கள் சம்மேளனம் அரசைக் கோரியது.

வேலைநிறுத்தத்தின் மூன்றாவது நாளன்று மலையகத் தொழிலாளர்களின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கு முகமாக தெற்கில் களுத்துறை, காலி, மாத்தறைப் பகுதிகளைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தில் இறங்கினார்கள்.

### போராட்டம் ஆரம்பமானது

திட்டமிட்டபடி தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் 22ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 7லட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். எவரும் வேலைக்குச் செல்லவில்லை. வீட்டிலேயே



இருந்தார்கள். பல இடங்களில் போராட்ட சுலோகங்கள் தாங்கிய பதாகைகளைத் தாங்கிக் கொண்டு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

13ம் திகதியே டில்லி செல்லுவதாக புறப்பட்டுச் சென்றிருந்த தொண்டமான் தனது பேரனும் இ.தொ,க வின் பொதுச்செயலாளருமான ஆறுமுகம் தொண்டமானை தலைமை தாங்க செய்திருந்தார் என்ற போதும் முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்கு முதல் தொண்டமானுடன் தொலைபேசி மூலம் அனுமதி பெறப்பட்டுக்கொண்டிருந்தது.

தொடர்ந்து 23, 24ம் திகதிகளில் சாத்தியமாக நடத்தப்பட்டன. இடையில் ஒரு சில தோட்டங்களில் வெளியிடங்களிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டு வந்து வேலையில் கம்பனிகள் ஈடுபடுத்திய போதும் இரண்டாம் மூன்றாம் நாட்களில் அது அற்றுப் போனது அல்லது மிகக் குறைந்தது.

மூன்றாவது நாள் 24ம் திகதி முக்கிய திருப்பங்கள் ஏற்பட்டன. அந்நாள்தான் மலையக மக்கள் முன்னணி வேலை நிறுத்தத்திலிருந்து வாபஸ் வாங்கியது.

### மலையக மக்கள் முன்னணியின் துரோகத் தனம்:

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் தொலைக்காட்சிக்கு பேட்டி கொடுத்தார். அரசு சந்திரசேகரனின் வாபஸ் வாங்கலை வானொலிச் செய்தியிலும் அறிவித்ததுடன், வானொலியிலும் பேட்டியை ஒலிபரப்பியது.

''ஆறுமுகம் தொண்டமானுக்கு பிரதியமைச்சர் பதவி வழங்குவதற்கு நாங்கள் ஏன் வேலைநிறுத்தம் செய்யவேண்டும்....

அரசாங்கத்துக்கு இதைவிட நல்ல தீர்ப்பு வழங்கமுடியாது. தோட்ட
யும் வீழ்ச்சியடைந்துள்ளது'
எனப் பேட்டியளித்திருந்தா
அஏத தினத்தில் ம.ம.மு. வி
களுக்கு விடுக்கப்பட்ட அ
''நடைமுறைச் சாத்தியமான
மொன்றை அரசு முன்வை

சின் வேண்டுகோளுக்கு ம
காலம் அவகாசம் வழங்கு
வைத்த கோரிக்கைகளில்
னவை ஏற்கப்பட்டிருக்கு
வேலைநிறுத்தத்திற்கு நாம்
ரவை நிறுத்திக்கொள்வதெ
ளோம்...'' எனத் தெரிவிக்க
இது பற்றி மலையக மக்கள்
டன் தொலைபேசி மூலம் தெ
போது அதன் முக்கியஸ்தர்
கூறினார்.
''இந்த தொழிலாளர் வே
மூலம் இ.தொ.கா.வும் ஏ

கங்களுமே லாபமடைகின்
உள்நோக்கங்களே இவ்வே
குக் காரணம். ஆனாலும்
ளின் போராட்டத்தில் நா
கொண்டோம். முதல் மூன்
நிறுத்தத்துக்கு ஆதரவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




ாழிற்துறை

பத்திரிகை
கயில்...
லைத்திட்ட
ள்ளது. அர

ஆனால் அரசு எங்களது கோரிக்கைகளுக்கு செவிசாய்த்ததாலேயே நாங்கள் வாபஸ் வாங்கினோம். எங்களின் பேச்சுவார்த்தைக் குப் பின்தான் 14அம்சக்கோரிக்கையை எங்களுடன் கதைத்து அரசு முன்வைத்தது. மேலும் அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநா

யொன்றுக்காக வெளியில் செல்வதாகவும் இன்னொரு வேளை கதைப்போம்'' என்றும் கூறி விடைபெற்றார்.
உண்மையில் இவர் என்ன சொல்கிறார்? தொழிலாளர் தற்போது எதிர்நோக்கும் பாரிய பொருளாதார நெருக்கடியையும்

கைகளுக்கு இன்று என்ன ஆனது? ஏன் உங்கள் ஆலோசனையின் பேரில் உருவாக்கப்பட்ட 14 அம்சத் தீர்வில் அவை உள்ளடக்கப் படவில்லை? அவை உள்ளடங்காத தீர்வை அரசியல் தீர்வாக ஏற்க எப்படி உங்களாகல் முடிந்தது?






ளித்து சி
ம். தாம் முல
பெரும்பாலா
நிலையில்
ழங்கிய ஆத
ர்மானித்துள்
ட்டிருந்தது.
னணியினரு
ர்பு கொண்ட
வர் இப்படிக்

நிறுத்தத்தின்
தொழிற்சங்

யக்க நல்லவர். அவர் ஒத்துக்கொண்டால் செய்கிற ஆள். இதற்கு முன்னர் கூட தீபாவளி முற்பணம் 1000/= ரூபாவை வழங்குவதாக வாக்குறுதியளித்து நிறைவேற்றினார். அரசாங்கம் தான் 2.76 சதமாக சம்பளத்தை உயர்த்தியிருக்கிறதே! பின் என்ன?
மேலும் அடையாள வேலைநிறுத்தம் என்றால் என்ன? ஒரு நாள் நடத்தினால் போதாதா? ஏன் ஏழு நாட்கள்?'' இப்படியாக இழுத்துக்கொண்டே போனார்.
''அப்படியென்றால் 14அம்சத் தீர்வுத்திட்டத்தில் நீங்களே கூறியிருந்ததைப்போல் 'அரசியல் கோரிக்கைகள்' எதுவுமுண்டா? அது

நியாயமான சம்பளத்துக்காவும் தொழிலாளர்களுடன் நின்று போராட நீங்கள் தயாரில்லையா? நீங்கள் அரசியல் கோரிக்கையாகவும் அரசியல் போராட்டமாகவும் முன்னெடுக்கவேண்டும் என்கிறீர்களே. இந்த 14 அம்சத்தீர்வில் என்ன அரசியல் தீர்வுகள் இருக்கின்றன? சரி, நீங்கள் அரசியல் கோரிக்கைகளைத்தான் இந்த சந்தர்ப்பத்தில் முன்னெடுக்கவேண்டுமாயின் கிராம சேவகர் நியமனமும் சமுர்தி நியமனமும் எப்படி அரசியல் கோரிக்கைகளாகும்? அப்படியென்றால் நீங்கள் அரசுடன் இணையும போது முன்வைத்த 6அம்ச கோரிக்கை என்னவானது? ('லங்கா



நிச்சயமாகத் தெரியும் இவைப்பற்றி எல்லாம் இப்போது பேசமாட்டார்கள் என்று. ஆனால், இ.தொ.கா எந்நேரமும் வேலைநிறுத்தத்தைக் கைவிடக்கூடும் என்று அச்சமுற்றுக்கொண்டிருந்த எல்லோருக்குமே ம.ம.மு. முந்திக்கொண்டு செய்தது என்னவோ கன்னத்தில் பளீர் என அறைந்ததைப் போல்தான் இருந்தது.
உண்மையில் ம.ம.முவினரின் இந்நடவடிக்கை தொண்டமானே கூறியது போல ''எரிகிற வீட்டில் பிடுங்குவது லாபம் என்பது போல் அரசாங்கத்திடம் நல்லபேரெடுபபவர்கள்'' என்பது தான் உண்மை. இவர்கள் இ.தொ.காவிடமிருந்து தான் கற்றுக்கொண்டிருப்பார்கள் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.
மலையக மக்கள் முன்னணி வாபஸ் பெற்ற அதே ஏப். 24ம்திகதிதான் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இப்படி மிரட்டல் செய்திருந்தார்.
''2.76சதம் சம்பள உயர்வும் 300நாள் வேலையும் தரப்படும் ஏற்றுக்கொள்ளுங்கள். கொடுப்பதை ஏற்றுக்கொள்ளாமல் வேலைநிறுத்தம் தொடருமாயிருந்தால் கிடைப்பதையும் இழக்க நேரிடும்'' என்றார்.
அதே தினத்தில் தோட்டத்துரைமார்கள் சம்மேளனத்தின் பிரதித்தலைவர் மகேந்திர அமரசூரிய வீரகேசிரி பத்திரிகைக்கு அளித்த பேட்டியில்,
''ஒரு வார வேலை நிறுத்தத்தினால் 50 கோடி ரூபா நஷ்டமேற்படும். தொழிலாளர்கள் கோருகின்ற 8ரூபா சம்பளம் ஒரு போதும் சாத்தியப்படாது என்றார்.
இதே வேளை இவ் வேலைநிறுத்தம் தொடர்பாக சிங்களப் பத்திரிகைகளும் இனவாத அடிப்படையில் நோக்கின. 'லங்காதீப', 'திவயின' ஆகிய இரு பத்திரிகைளை தொழிலாளர்களின் கோரிக்கைகளை இனவாத கோரிக்கைகளாகவே பிரச்சாரம் செய்தன. தொழிலாளர்களின் கோரிக்கைகளில் எவ்வித நியாயமும் இல்லையென்றும் இது தொண்டமான் யுத்தகாலத்தில் புலிகளுக்கு வால் பிடிப்பதற்காகவும், அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுப்பதற்காகவும் ஏற்படுத்திய ஒன்றே தவிர வேறொன்றும் இல்லையென்பதனை குறிப்பிட்டு கட்டுரைகளை வெளியிட்டன. தொண்டமானை புலியாக வரைந்து காட்டூனும் வெளியிட்டிருந்தனர். தோட்டத் தொழிலாளர்கள் வசதியாக இருக்கின்றார்கள். தோட்டத் துறைதான் நஷ்டம

## பொ.ஐ.முவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மலையக மக்கள் பற்றிய வாக்குறுதிகள்!

1. மலையகத்தில் தொழில் புரிகின்ற தொழிலாள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் சூழல் மற்றும் சுகாதார அபிவிருத்திக்காகவும் விஷேட செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.
2. மலையகத்தில் ஏற்பட்டிருக்கிற இருப்பிப் பிரச்சினைக்காக நிலையான வீட்டுத்திட்டம் உருவாக்கப்படும்.
3. மலையகத்தின் கல்விநிலையை, உயர்த்துவதற்காக விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
4. மலையகத்தில், வீடுகளுக்கு மின்சாரம், நீர்வழங்கல், பாதைவசதிகள், அமைப்பதற்கான செயற்திட்டங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும்.
5. மலையகத் தொழிலாளர்களுக்கான நிலையான மாதாந்த வருமானத்தை உறுதிப்படுத்துவதற்கான, உறுதியான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.
6. மலையகத்தில் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்குமான பராமரிப்பு வசதிகள் அளிக்கக் கூடிய செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.
7. இந்திய வம்சாவளி சிறுபான்மையினம் என அவர்கள் கருதப்பட்டு வருவதால், மலையகத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டு வரும் விசேட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.
8. சகல பிரஜைகளும் சாதாரண பிரஜைகளாக கருதப்படக்கூடிய வகையிலான சட்டதிட்டங்கள் உருவாக்கப்படும்.
9. மலையகத் தொழிலாளர்கள் வாழும் இருப்பிடங்கள், பிரதேச சபை ஆட்சிக்குள் கொண்டு வரப்படும்.
10. மலையகத் தொழிலாளர்களின் தொழிற் சங்க உரிமைகளையும், நலன் புரிவசதிகளையும் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

வரை எல்லாச் 'சலுகைகளும்' செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கென்று ஈ.பி.எப்., ஈ.டி.எப். என்பவற்றுடன் 72ரூபா ஒரு நாள் சம்பளத்துடன் வீடுவசதி, போக்குவரத்து வசதி, இலவச சுகாதார, மருததுவ வசதி என்பவற்றுடன் இலவசமாக பாலும் வழங்கப்பட்டு வருகிறது. விடுமுறைக் கொடுப்பனவு எல்லாம் வழங்கப்பட்டு வருகிறது. இதே போன்ற சலுகைகளை தோட்டத் தொழிலாளர்கள் தவிர்ந்தவேறெந்த தொழிலாளர்களும் பெற்றதில்லை. மறுபக்கம் இப்

இ.தொ.கா. தலைவர்கள் கூடி உரையாடிய போது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் மேலும் ஒரு மாதம் வேலைநிறுத்தத்தை நீடிக்கும் ஆலோசனை ஒரு சில தலைமை உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டிருந்தது. உடனே இந்தியாவிலிருந்த தொண்டமானுடன் தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு அது பற்றி கேட்டபோது, 28ம்திகதி தாம் வந்ததன் பின் அதனைப் பற்றிக் கதைப்போம் என்று பதில் கூறப்பட்டது. ஆக தொழிலாளர்களின் உண்மையான



வேலை நிறுத்தப் போராட்டம் யுத்தத்தை பாதிக்கும் பிரச்சினையாகவும் புலிக்கு வால் பிடிக்கும் போராட்டமாகவும் சித்திரிக்கப்படும் கார்டூன்களில் ஒன்று இது

படியான சலுகைகள் அற்ற மற்ற தொழிலாளர்களது உரிமைப் பற்றிபேச ஒரு அரசியல் வாதியும் இல்லை.''
எவ்வாறிருந்த போதும் இறுதியில் 3ரூபா சம்பள உயர்வு 300நாள் வேலை என்பதற்கப்பால் இறங்கி வர அரசு தயாராக இல்லாத நிலையில் 27ம் திகதி வரை போராட்டம் நடந்து முற்றுப் பெற்றது. இறுதிநாளன்று போராட்டத்தை நீடிக்கக்கோரி தொழிலாளர்

கள் படையெடுத்த போதும் தொழிற்சங்கங்கள் அதனை ஏற்க மறுத்தன.
தொழிலாளர்களின் கோரிக்கைகள் வெற்றி

பிரச்சினைகளை முன்னெடுப்பதற்குப் பதிலாக பெரும்பான்மையான தொழிற்சங்கங்களும் தொழிற்சங்கவாதிகளும் தமது இருப்புக்காகவே வேலைநிறுத்தத்தையும் கையாள முயன்றிருக்கின்றனர்.
தொழிலாளர்களின் கதி....?
அவர்களது போராட்டம்....!?
அவர்களது கோரிக்கைகள்...!?
அவர்களது நம்பிக்கைகள்....!?
எல்லாமே வெறும் கேள்விக்குறிகளாய் எழுந்து நிற்கின்றன.
துன்பம் தொலையவில்லை.
தொடர்கதையோ முடியவில்லை!

# லையக வேலை நிறுத்தப் போராட்டம்:
# ன்பம் தொலையவில்லை!
# யர்க் கதையோ முடியவில்லை!

ன. அவற்றின்
லைநிறுத்தத்துக்
தொழிலாளர்க
களும் கலந்து
ாளும் வேலை
ழங்கினோம்.

என்னவென்பதையும் சொல்லுவீர்களா....? இது எமது கேள்வி.
''சமுர்த்தி நியமனம், கிராம சேவகர் நியமனம்...'' என்றெல்லாம் இருக்கிறதே என கூறிக்கொண்டே சென்ற போது அடுத்தகேள்வியை கேட்பதற்குள் ''தான் முக்கிய வேலை

தீப' வுக்கு அளித்த பேட்டியில் அப்படி எந்த நிபந்தனையும் விதிக்காமலேயே அரசுடன் இணைந்ததற்காக கதை விட்டிருக்கிறார்கள் என்பது வேறுகதை) நீங்கள் அரசியலமைப்பு சீர்திருத்தக் குழுவுக்கு முன்வைத்த பிராந்தியங்கள் உள்ளிட்ட அரசியல் கோரிக்

டைந்திருக்கின்றன என்பதை நிரூபிப்பதற்கான கட்டுரைகளை மிகுந்த பிரயத்தனம் செய்து பொய்யான ஆதாரங்களுடன் கட்டுரைகளை வெளியிட்ட ஏப். 25திகதிய இதழில் 'திவயின' பத்திரிகை இப்படிக் கூறியது.
''தோட்டத் தொழிலாளர்களுக்கென்று இது

யளிக்கவில்லை. மாறாக, வழமையாக 16 தொடக்கம் 18 கிலோ கொழுந்து பறிக்கும் தொழிலாளர்கள் 22 கிலோ கொழுந்து பறிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.
ஏப். 24ம் திகதியன்று கொட்டகலையிலுள்ள ஆறுமுகம் தொண்டமானின் வீட்டில்

என்.எஸ்.குமரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே...5

அது ஒரு திங்கட் கிழமை. வாரமுடிவுக்கு பின்வந்த முதல் நாள். அதிகாலை நேரம். டெலிபோனில் ஒரு பெண்மணியின் குரல். மிகுந்த பரபரப்புடன் அவள் பேசினாள்.

''இதை எப்படி விளங்கப்படுத்தப் போகிறீர்கள்... முடிந்தால் சொல்லுங்கள் பார்க்கலாம்...நாங்கள் காரிலே போய்க்கொண்டிருந்தோம். முழுக் குடும்பமும். பிறிஸ்பேக்கில் இருந்து நியூயோர்க் வரை. 400கிலோ மீற்றர் தூரம் நாம் பயணம் செய்திருந்தோம். காரின் பின் சீற்றில் ஐவன் உட்கார்ந்தபடி வந்து கொண்டிருந்தான். எமது முதல் மகன் மிகவும் அமைதியாகவும் ஆழ்ந்த சிந்தனையுடனும், எந்தவித குழப்படியுமில்லாமல் ஒரு அருமையான பிள்ளையாக அவன் வந்து கொண்டிருந்தான். நாங்கள் லிங்கோ குகையினுள் பிரவேசிக்கையில் அவனை நோக்கித் திரும்பினேன். அவன் இவ்வளவு தூரம் அமைதியாக வந்ததற்காக அவனைப் பாராட்ட வேண்டும் போல எனக்குத் தோன்றியது. நான் சொன்னேன். ''ஐவன் மிகவும் நல்ல பிள்ளையாக நடந்து கொண்டிருக்கிறாய்... உன்னைப்பார்க்க எனக்குப் பெருமையாக இருக்கிறது..''

ஒரு நிமிடம் ஒரே நிமிடம்தான். வானம் தலைகீழாய் புரண்டது? ஐவன் அங்கிருந்த சிகரட் சாம்பல் தட்டை (Ashtray) இழுத்து வீசினான். அதிலிருந்த சாம்பல் எரிந்து சிகரட் துண்டுகளில் கார் முழுவதும் சிந்தின.



## பறந்த சாம்பற் தட்டு

குண்டு வெடித்து புகை எழுவது போல கார் முழுவதும் சிகரட் தூள் புகை கிளம்பியது. நாங்களோ குகைக்குள்ளே போய்க்கொண்டிருக்கிறோம். சரியான வாகன நெரிசலில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தோம். உண்மையில் அவனைக் கொல்ல வேண்டும் போலிருந்தது. அந்த இடத்தில் எமது காரைச் சுற்றி வேறு வாகனங்கள் இல்லாமல் இருந்திருந்தால் நான் அவனைக் கொன்றே இருப்பேன். அவ்வளவு கோபம் எனக்கு. உண்மையில் எனக்கு மிகவும் கவலையாக இருந்தது என்னவென்றால், நான் அவனைப் பாராட்டியபோது அவன் இப்படி நடந்து கொண்டதுதான். குழந்தைகளை இனிமேல் பாராட்டவே கூடாதா... என்ன சொல்கிறீர்கள்....''

ஒரு சில வாரங்களுக்குப் பிறகு ஐவன் தனது இந்தக் கொந்தளிப்புக்கான காரணத்தை விளக்கினான். வீட்டிலிருந்து காரில் புறப்பட்ட நேரத்திலிருந்து காரின் முன்சீற்றில் தகப்பனுக்கும் தாய்க்குமிடையே செல்லமாக உட்கார்ந்து வந்து கொண்டிருக்கும் தனது தம்பியை எப்படி இல்லால் செய்யலாம் என்று யோசித்துக் கொண்டே அவன் வந்தான். கடைசியாகத்தான் அவனுக்கு அந்த யோசனை தோன்றியது. தங்களது காரை நடுவாக ஒரு பலாக்காயை வெட்டுவது போல பெரிய கத்தி ஒன்றினால் இரண்டாக வெட்டிப் பிளந்தால், அந்த வெட்டின் போது தம்பியார் வெட்டப்பட்டு விடுவான். தகப்பனும் தாயும் தப்பிவிடுவார்கள்.. இப்படி அவன் யோசித்துக் கொண்டிருக்கையில் தான் கார் குகைக்குள் நுழைந்து கொண்டிருந்ததும் தாயார் திரும்பிப் பார்த்து அவனைப் புகழ்ந்ததும் நடந்தது. அந்தப் புகழ்ச்சி அவனைக் குற்ற உணர்வுகுள்ளாக்கி விட்டது. இது அவனுக்கு தான் அந்தப் புகழ்ச்சிக்கு உரியவன் அல்ல என்று எப்படியாவது காட்ட வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தியது. அங்குமிங்கும் அவதிப்பட்டு நோக்கினான். கையில் அகப்பட்டது சிகரட் சாம்பல் தட்டுத்தான். அப்புறம் நடந்ததெல்லாம் தாய் விபரித்தவைகள்...

### பாராட்டுவது எதை? செய்கையையா அல்லது செய்தவரையா?

புகழ்ச்சி குழந்தைகளின் தற்றுணிச்சலையும் பாதுகாப்புணர்வையும் வளர்த்து விடுகின்றது என்று பலரும் நம்புகிறார்கள். ஆனால், நடைமுறையில் மன அதிர்ச்சியையும் தவறான நடவடிக்கைகளையும் கூட ஏற்படுத்தக் கூடும். ஏன் பெரும்பாலான குழந்தைகள் தமது குடும்ப அங்கத்தவர்கள் குறித்து சில வேளைகளில் மோசமான அழிவுத்தனமான விருப்பங்களை உடையவர்களாக இருப்பதுண்டு. இவ்வாறான சந்தர்ப்பங்களில், பெற்றோர்கள் ''நீ எவ்வளவு ஒரு நல்லபிள்ளை'' என்றுசொல்லிப் புகழும் போது அந்தக் குழந்தையால் அதை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. ஏனென்றால், தன்னைப்பற்றிய அபிப்பிராயம் அதற்கு வேறானதாக இருக்கிறது. அதன் கண்களில் தான் ஒரு போதும் 'நல்லபிள்ளை'யாக இருக்க முடியாது என்று நினைக்கிறது. கொஞ்ச நாட்களுக்கு முன் தான் தனது தாயின் வாய்க்கு ஒரு ஷிப் (Zip) போடவேண்டுமென்றோ, தனது தமையன் அடுத்த சனி, ஞாயிறு விடுமுறையின் போது ஆஸ்பத்திரியில் இருந்தால் நல்லதென்றோ அது நினைத்திருக்கக் கூடும். உண்மையில் எவ்வளவுக்கு எவ்வளவு குழந்தை புகழப்படுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு தனது உண்மை வடிவைக் காட்டுவதற்காக துடுக்குத்தனமாக நடந்து கொள்கிறது. குழந்தை அதன் நல்ல செயல் ஒன்றுக்காக புகழப்பட்டதும், அந்தப் புகழ்ச்சியை உண்மையல்ல என்று நிரூபிப்பதற்காக செய்வது போல மோசமாக நடந்து கொள்கிறது. இவ்வாறு 'செயலில் காட்டுவதே, தன்னைப் பற்றிய வெளியுலகின் அபிப்பிராயங்கள் குறித்த உடன்பாடின்மைகளை வெளிப்படுத்த குழந்தைகள் பயன்படுத்துகின்ற வழிமுறையாக இருக்கக்கூடும்.

### பொருத்தமான புகழ்ச்சியும் பொருத்தமற்ற புகழ்ச்சியும்

இந்த உண்மை எதைக் காட்டுகிறது? புகழ்ச்சி தேவையில்லை என்பதையா? இல்லை. இது காட்டுவதெல்லாம், புகழ்ச்சியானது, பென்சிலின் ஊசி மருந்தைப் போல, கவனமில்லாமல் செய்யப்படக் கூடாது என்பதைத்தான். சக்திவாய்ந்த மருந்துகளைப் பயன்படுத்துவதற்கு பல விதிமுறைகளும், முன் எச்சரிக்கை ஒழுங்குகளும் இருக்கின்றன. நேர இடைவெளி, மருந்து கொடுக்கப்படும் அளவு, ஒவ்வாமை ஏற்படக்கூடிய வாய்ப்பு என்பன குறித்து இறுக்கமான விதிமுறைகள் உள்ளன. அவற்றில் மிக மிக முக்கியமான விதிதான் புகழ்ச்சி. அது

எப்போதும் முயற்சியையும் செயலையும் பற்றியதாக வேண்டுமே ஒழிய குழந்தையின் இயல்பு குறித்ததாகவோ அதன் ஆளுமை குறித்ததாகவோ இருக்கக்கூடாது. ஒரு சிறுவன் தோட்டத்தை சுத்தம் செய்திருந்தால், அவன் எவ்வளவு கடினமாக வேலை செய்துள்ளான், இப்போது இந்த தோட்டம் எவ்வளவு அழகாக இருக்கிறது என்பன போன்ற பாராட்டுகளை தெரிவிப்பது இயல்பானது. ஆனால், அவன் எவ்வளவு 'நல்லவன்' என்று கூறுவது ஒரு விதத்திலும் பொருத்தமில்லாத, சம்பந்தமில்லாத ஒரு பாராட்டாகும். புகழ்ச்சி வார்த்தை குழந்தைக்கு அதன் செயலை கண்ணாடியில் பார்ப்பது போன்ற ஒரு உண்மையான படத்தை ஏற்படுத்த வேண்டுமே ஒழிய, அதனது ஆளுமை குறித்த ஒரு தெளிவற்ற கற்பனைத் தன்மையானதாக இருக்கக்கூடாது.

கீழுள்ள உதாரணம் ஒரு பொருத்தமான புகழ்ச்சியைக் காட்டுகிறது:

ஜிம் - எட்டுவயதுச் சிறுவன். வீட்டின் பின்புற முற்றத்தை நன்றாக சுத்தம் செய்திருந்தான். இலை குழைகளை பொறுக்கி குப்பைகளை அகற்றியதுடன் அங்கிருந்த பொருட்களையும் புதிய ஒழுங்கில் அடுக்கியிருந்தான். தாயாருக்கு மிகவும் சந்தோஷம். அவனது முயற்சியையும் செயலையும் அவள் பாராட்டினாள்.

தாய்: முற்றம் எவ்வளவு அசிங்கமாக இருந்தது. இவ்வளவு அழகாக அதை சுத்தம் செய்ய முடியும் என்று நான் நினைக்கவே இல்லை.

ஜிம்: நான் செய்தேன்!

தாய்: அது ஒரே இலையும் குழையும் குப்பைக்குவியலுமாய்க் கிடந்தது.

ஜிம்: நான் எல்லாவற்றையும் சுத்தப்படுத்தினேன்.

தாய்: என்ன அருமையான வேலை.

ஜிம்: ஓம்... அருமையான வேலைதான்.

தாய்: இப்ப முற்றம் எவ்வளவு சுத்தமாக இருக்கிறது; பார்க்க சந்தோஷமாக இருக்கிறது.

ஜிம்: நல்லாயிருக்கு.

தாய்: நன்றி, மகனே...

ஜிம்: (கொஞ்சம் பெரிய சிரிப்புடன்) நல்லது...

தாய் இவ்வுரையாடல் மூலம் அவனது வேலை குறித்து சந்தோஷப்படவும், அவன் அதைச் செய்திருந்த நேர்த்தி குறித்து பெருமைப்படவும் செய்துவிட்டாள். அன்றைய மாலை, தகப்பன் வீட்டுக்கு வந்ததும் அதை அவருக்குக் காட்டி தனது வேலையையும் அதன் நேர்த்தியையும் அவர் பாராட்டுவதையும் கேட்க வேண்டும் என்று நினைத்ததில் அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. தான் ஒரு செயலைச் சிறப்பாக செய்ததற்கான பெருமையை தன்னுள் திரும்பவும் அனுபவிக்கவும் அவன் விரும்பினான்.

மாறாக அவனது ஆளுமை தொடர்பாக புகழ்ச்சியை வழங்கும் பின்வரும் சொற்கள் சொல்லப்பட்டால், அவை எந்தப் பயனையும் அளித்திருக்க மாட்டா.

''நீ எவ்வளவு ஒரு அருமையான பிள்ளை''

''நீ உண்மையிலேயே அம்மாவின் செல்லக் குட்டிதான்''

''நீ இல்லாமல் அம்மாவுக்கு என்னதான் செய்ய ஏலும்..''

இந்தப் புகழுரைகள் குழந்தையை மிரட்டி விடுவதுடன் ஒரு வகை அங்கலாய்ப்பையும் ஏற்படுத்திவிடக் கூடும். அது, தான் ஒன்றும் அருமையான பிள்ளையில்லை, இப்படியான ஒரு பெயருடன் தன்னால் இருக்க முடியாது என்று அது உணரக்கூடும். எனவே, இந்தப் பொய்யான நல்ல பெயர் எப்போதாவது உடைந்து தனது உண்மைச் சொரூபம் தெரியவருமோ என்ற ஒரு வகையான அச்சத்துடன் அத்தகைய ஒரு நிலையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை விட, தனது மனச்சுமையை உடனே குறைக்க சுலபமான ஒரு வழியை அது தேடுகிறது. உடனே ஏதாவது துடுக்கான செயலில் ஈடுபடுகிறது.

ஒருவரது ஆளுமை குறித்து நேரடிப் புகழ்ச்சி, நேரடிச் சூரிய ஒளி போல அசௌகரியமானதும், கண்ணைக் குருடாக்குவதும் ஆகும். அற்புதமானவன், கண்ணியமானவன், அடக்கமானவன் போன்ற சொற்களால் ஒருவரை புகழும் போது அவருக்கு அது தர்மசங்கடத்தையே கொடுக்கிறது. அவர் அதில் ஒரு பகுதியையாவது மறுத்துரைக்கவே விரும்புவார். பகிரங்கமாக எழுந்து நின்று 'நன்றி நீங்கள் கூறியவற்றை நான் ஒத்துக்கொள்கிறேன்' என்று கூறி அப்புகழுரையை ஏற்கமுடியாது. தனிப்பட்ட முறையிலும் கூட, அவர் அப்புகழுரையை நிராகரிக்கவே செய்வார். தனக்குத்தானே கூட நேர்மையாக அவரால் 'நான் அற்புதமானவன்' என்று சொல்ல முடியாது.

அவர், புகழ்ச்சியை மறுப்பதுடன் மட்டுமல்ல, தன்னைப் புகழ்பவர்கள் குறித்து ஒரு கணம் மீள்பரிசீலனை செய்யவும் செய்வார்: ''என்னை இவ்வளவு தூரம் சிறப்பாக நினைக்கிறார்கள் என்றால், அவர்கள் அவ்வளவு புத்திசாலிகளாக இல்லாமல் இருக்க வேண்டும்.

(வரும்)




கடந்த 30 ஆண்டுகளில் சிரித்திரன் சஞ்சிகை மூலம் குறிப்பாக அதன் கேலிச் சித்திரங்கள் மூலம் மக்களை மகிழ்வித்தவரான சிரித்திரன் சி.சிவஞானசுந்தரம் அவர்களின் இழப்பு மகாபேரிழப்பு ஆகும். சவாரித்தம்பர், மைனர்மச்சான், ஸ்ரீமான் செல்லக்கிளி, சீனித்தாத்தா, மெயில்வாகனத்தார், மிஸ்டர் -மிஸிஸ் டாமோடிரன், ஒய்யப்பங் கங்காணி ஆகிய பாத்திரக் கடையல்கள் மூலம், அன்றைய தமிழ்ச் சமூகத்தின் பெறுமானங்களைக் கேள்விக்குள்ளாக்கிய கலைஞன் ''சிவா'' என்று அழைக்கப்படும் சிவஞானசுந்தரம் அவர்களே.

''சுந்தர்'' என்ற பெயர் எந்த வீட்டிலும் அடிபடும் ஒரு குடும்பப் பெயர். அந்தப் பெருமைக்கு உரியவர் சி.சிவஞானசுந்தரம் அவர்கள். கேள்வி பதிலில் ஒரு புதுமையைப் புகுத்தி 'மகுடி' என்ற தலைப்பில் அவர் எழுதிய கேள்வி, பதில்கள் தமிழ் இலக்கிய வரலாற்றுக்குப் புதிய அங்கதச் சுவையாகும். அவரின் மறைவுக்குப் பின்பு இதனைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியதும், எடைபோட வேண்டியதும் மிக முக்கியமானது!

கேள்வி என்பது ஒரு கலைவடிவமாகும். கேள்விகளைக் கேட்டுப்பார் என்ற தோரணையில் எவரும் ஆயிரம் கேள்விகள் கேட்கலாம். ஆனால் கேள்வியின் நோக்கத்தைத் திசைதிருப்பும் வல்லமை ஒரு சிலருக்கே உண்டு. அந்த வகையில் இருபத்து ஐந்து வருடங்கள் பெரும்புரட்சி செய்தவர் சிரித்திரன் சி.சிவஞானசுந்தரம்!

பண்டைய கிரேக்கத்தில் சோக்ரட்டீஸ் கேள்விகளுக்குக் கொடுத்த விடைகளே அவருக்கு வரலாற்றிலும் இலக்கியத்திலும் நீங்கா இடத்தைப் பெற்றுக் கொடுத்தது.

விக்கிரமனின் வேதாளம் சொன்ன கதைகள் யாவும் கேள்விக்கு அவன் கொடுத்த கலை வடிவங்களே! விக்கிரமனின் சரியான பதில்களால் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய நிலை கேள்வி இலக்கியத்துக்குக் கிடைத்த வெற்றி எனலாம்!

கேள்வி என்பது ஒரு அதிரடி போன்றது. கேள்வியின் போக்கினைச் சரியாக இனம் காணாதுவிடின் பதிலின் தரத்தில் ஒரு தத்துவக் கலைப்படைப்பைப் பதில் தருபவரால் தர முடியாது.

இந்த ஒரு நோக்கிலேயே சிரித்திரன் மகுடியாரையும் ஆராய்ச்சி என்ற உலைக்களத்தில் இட வேண்டும். பரிவுடைய மனித உணர்வுகளால் உந்தப்பட்டுக் கேள்வி கேட்பவர்கள் சிலரே. பதில் தருபவனின் கொட்டத்தை அடக்க வேண்டும் என்ற மன

நிலையே பல கேள்வி கேட்பவர்களையும் ஆட்டிப் படைக்கும்! இக்காரணம் பற்றியே கேள்வி கேட்பவர்கள் ஆத்திரம் அடையத்தக்கதாக ஓர் ஆங்கில அடி வழங்கி வருகின்றது. ''நிமிர்ந்து நின்று கேள்வி கேட்க முன்பு உங்களிடம் பரிவுடைய மனித உணர்வு உண்டா எனக் காட்டுங்கள்'' என அம்மூதுரை குறிப்பிடுகின்றது.

### சிரித்திரன் சிவஞானசுந்தரத்தின் மறக்கமுடியாத பதில்கள்:

கடந்த 25 வருடங்களாக 'மகுடி' என்ற தலைப்பில் அவரால் கொடுக்கப்பட்ட கேள்வி பதில்கள் சர்வதேச அங்கத இலக்கியத்தில் தமிழுக்குச் சிறப்பு அளிக்கவல்லன. அவ்வாறான புதுமைப் பதில்கள் பல. இதோ சில உதாரணங்கள்.

கே:- இந்த உலகத்திற்கு எத்தனை திசைகள் இருக்கின்றன?
ப:- பல திசைகள்! அதுதான் தமிழன் ஒற்றுமை இன்றிப் பல திசைகள்.

கே:- எதற்கு உயிரில்லை?
ப:- பசிக்கு உயிரில்லை.
கே:- எவன் வாழத் தெரியாதவன்?
ப:- அயலையும், வயலையும் வெறுத்தவன்.

கே:- கற்றதனாலான பயன் என்கொல்?
ப:- அணு அறிவால் கொல்!

கே:- உலகில் உயர்ந்த சங்கீதம் எது?
ப:- அனாதைக் குழந்தையின் சிரிப்பொலி.
கே:- அட்டமி, நவமி பார்த்தோம். எதைக் கண்டோம்?
ப:- அடையாள அட்டையை

கே:- ஹிட்லரின் அகம் எப்படி இருந்திருக்கும்?
ப:- கெந்தகம்
கே:- அயலவனை நாம் எப்போது நினைக்கின்றோம்?
ப:- அவனுக்குத் தொற்றுநோய் வரும்போது!

கே:- இலக்கியத்திற்கு பாய்ச்சப்படும் மை எப்படி இருக்க வேண்டும்?
ப:- மை மாணிக்க கங்கையாகப் பாய வேண்டும். அதில் வாசகன் தீர்த்தமாடிப் பயன்பெற வேண்டும்.

கே:- ஜனநாயகம் எப்படி இருக்க வேண்டும்?
ப:- தாயின் மடிபோல் இருக்க வேண்டும். அங்குதான் உயர்வு, தாழ்வு இல்லையே!

கே:- பெரும்பான்மை, சிறுபான்மை உறவு எப்படி இருக்கவேண்டும்?
ப:- இராமன், பரதன் பாசம் போன்றதாக இருக்க வேண்டும்.

கே:- உலக யுத்தத்தின் முடிவு?
ப:- தோற்றவன் சாம்பல்; வென்றவன் கரி.

கே:- எப்படிப்பட்டவன் தலையில் இடி விழ வேண்டும்?
ப:- கட்டிய மனைவியைக் கள்ளக் கடத்தலுக்கு பயன்படுத்தும் கயவன் தலையில்!

கே:- எது அபசாரம்?
ப:- மதுசாரம், விபசாரம் உள்ள நாடு தனக்குக் கலாசாரம் இருப்பது என்று பேசுவது.

கே:- அரசு எதனை எதிர்பார்க்கக்கூடாது?
ப:- விவசாயிகட்கு மானியம் கொடுக்காது தானியம் எதிர்பார்க்கக்கூடாது.

கே:- மனிதன் எப்போது சிந்திக்கிறான்?
ப:- ஆஸ்பத்திரிக்குப் போகும் போது ஆரோக்கியத்தைச் சிந்திக்கிறான். மயானம் போகும் போது நிலையாமை பற்றிச் சிந்திக்கிறான்.

கே:- மகுடியாரே கொடியது எது?
ப:-விளைச்சல் காலத்தில் வறட்சி. வாலிபத்தில் வறுமை. வயோதிபத்தில் வாதம்.

தமிழக ஏடுகள் பரீட்சார்த்தம் செய்யும் கேள்வி பதிலில் ஒரு புதுமையைப் படைக்க முடியவில்லை. ஒரு தத்துவ இழையோட்டத்தைப் புகுத்த முடியவில்லை. ஆனால் சிரித்திரன் சஞ்சிகையும் அதன் ஆயிரக்கணக்கான பதில்களும் உயிர்த்துடிப்புமிக்க பதில்களை விட்டுப் போயுள்ளது.

வயோதிபத்தில் வாதம் கொடிது எனச்சொன்ன மகுடியாருக்கு வயோதிபத்தில் வாதம் வந்தமை பெரிய கொடுமைதான்! இந்த வாத காலத்திலும் விவாதம் இல்லாத இலக்கியக் கோட்பாட்டை அளித்த சிரித்திரன் ஆசிரியர் எவரிடமும் பொன்னாடைக் கௌரவம் பெற்றதில்லை! இதுவும் சாதனையில் மிகப் பெரும் சாதனை தான்!

இணுவயல் தர்மகுலசிங்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யார் யார் வாய் தேடினும் மெய்ப் பொருள் காண்பது அரிது!

## மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) விடுத்த அறிக்கை

''எவராவது, தமது சூழலைக் கவ்விக் கொண்டுள்ள பயங்கரத்தின் முழு அளவிளான செயற்பாடுகளை இனங்காண வேண்டி, அவர் எப்போதும் மிகவும் விழிப்பாக இருத்தல் வேண்டும். புத்திஜீவி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அச்செயற்பாடுகளை எல்லாம் இனங் கண்டு கொண்டிருப்பார்கள் என ஒருவர் எண்ணலாம். ஆனால் பொதுவில் அது உண்மையல்ல. அரசியல் விடயங்களில் கல்வி அறிவினதும், புத்திக்கூர்மையினதும் பங்கு பற்றி எனது முடிவுகளை அன்றைய இருண்ட காலகட்டத்தில் நான் மறுபரிசீலனை செய்ய வேண்டியேற்பட்டது. உண்மை என்னவெனில், புத்திக் கூர்மையுள்ள ஒருவர் தன்னைப் பீதியுறச் செய்யும் ஒன்று உண்மையானதல்ல, என தன்னையே திருப்திப்படுத்திக்கொள்ளக்கூடிய பலவித விளக்கங்களையும் வியாக்கியானங்களையும் எப்போதும் கைவசம் வைத்திருப்பார். மேலும் இவர் அப்பாவிகளைப்போல் அல்லாது சந்தர்ப்பவாத வழிமுறைகளை இனங் கண்டு அவற்றைப் பயன்படுத்தி தன் குறுகிய நலனை முன்னிறுத்திச் செயற்படுவதிலும் சமர்த்தராய் இருப்பர். எனவே புத்திஜீவி வர்க்கத்தில் தான் மிகவும் கவலைக்கொள்ளத்தக்கதான குணாம்சப் பிறழ்வுகளும் (Character Failure), ஏமாற்றுத்தனங்களும் மலிந்து காணப்படும். ஒருவனது உயர்ந்த மானுடப் பண்புகளை சமூகம் வேண்டிநிற்கும் இக்கட்டான காலகட்டங்களில், வெறுமனே புத்திஜீவித்தனம் என்பது பெரிதும் பயனற்றதாகவே காணப்படுகின்றது. எனவே சமூகப் பொறுப்புணர்வற்றவர்கள், மிக உயர்வான கல்வியறிவைக் கொண்டவர்களாகவோ அல்லது பேராசிரியர் பட்டங்களால் அலங்கரிக்கப்பட்டவர்களாகவே இருப்பினும், அநீதிகளைக் கண்டும் எதிர்ப்புக் காட்டாத நிலைக்கு மிக இலகுவில் சென்றுவிடுவார்கள். அதேவேளை தன்னைச் சூழவுள்ள பயங்கரத்தின் மத்தியிலும் தனது சுயமரியாதையை இழக்க விரும்பாமலும், பயங்கர பட்டினி வதைமுகாம்கள் போன்றவற்றை எதிர்கொள்ளவேண்டிய நிலையிலும் கூட, தான் அவமதிப்பிற்கு உட்படுத்தப்படும் ஒரு பொருளாக மாற விரும்பாது இருப்பதற்கு ஒருவன் 'கல்வித்தகைமை' கொண்டவனாக இருக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால், அவனிற்கு உள்ளார்ந்த நெஞ்சுறுதியும் சமூகத்தின் பால் பொறுப்புணர்வுமே அவசியம்.''

*-ஹெல்மட் தியலெக்கி*
*'சொக்கமும் பூமியும்'*

மேற்கூறிய கூற்று அமெரிக்கர்கள் மத்தியில் நடைபெற்ற இசைமேதை பிதோவனையும் (BETHOVAN) மனிதகுல நாகரிகத்திற்கு பல பங்களிப்புக்களையும் செய்த ஜேர்மனி, ஹிட்லரையும் நாஜி அரசையும் எவ்வாறு உருவாக்கியது என்ற கேள்விக்கு ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த கிறிஸ்துவ தத்துவியலாளர் ஹெல்மட் தியலெக்கி ஆற்றிய உரையில் இருந்து எடுக்கப்பட்டது.

''ஒரு பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக துப்பாக்கியின் நீண்டதொரு நிழலின் கீழ் எவ்விதமான அர்த்தமோ நோக்கமோ இல்லாமல் சகல முனைகளிலிருந்தும் எழும் வன்முறையின் ஆதிக்கத்திலிருந்து நம் குழந்தைகளைக் காப்பாற்றிக்கொண்டு விடுவதற்காக நம்பிக்கைக்கு மேல் நம்பிக்கை வைத்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்னொரு பக்கத்தில் ஒதுங்கி நின்று இவையெல்லாவற்றையும் சகித்துக்கொண்டு விட்ட மக்கள் முகங்களையும் நாம் பார்க்க முடிகிறது. மோசமாகிக் கொண்டிருக்கும் நோய்வாய்ப்பட்ட நிலையில் எதையாவது உடல்ரீதியில் செய்து பார்ப்பதை முயற்சிப்பதைப் போலவே, இன்றைய சூழ்நிலையில் தெளிவான பார்வையுடனேயோ அல்லது ஆராய்ச்சி மனப்பாங்குடனேயோ நாம் எதையாவது செய்வது என்பது இருக்கின்றது.

எப்போதெல்லாம் நாம் எழுத நினைக்கின்றோமோ அப்போதெல்லாம் இந்த யதார்த்தத்திற்குள் நாமும் புதைந்து போய்விடுகிறோம். புத்திசுவாதீனத்தின் மெல்லிழையையும் இழந்து எந்தவிதமான எதிர்ப்புணர்வுமின்றி இந்தப் பயங்கரவாத வன்முறைப் புதைகுழிக்கு சமூகம் இடங்கொடுத்துவிடப் போகிறதோ என்றும் நாம் அஞ்சுகின்றோம். மனித ஆளுமைகள், ஆற்றல்களை எல்லாம் பறிகொடுத்து விட்ட நிலையில் நமது சமூகம் இருக்கிறது. ஒவ்வொரு புத்தியுள்ள மனிதனும் எரிந்து கொண்டிருக்கும் இந்த தேசத்தை விட்டு ஓடிக்கொண்டிருக்கிறான்....''

''....எமது முன்னைய விவரணங்கள் ஏதோ ஒரு கருத்தை முன்தள்ள முனைவதாக யாராவது கருதினால் அது எமது பகுப்பாய்வில் ஒருங்கிணைந்த பூரணத்துவத்தை வெளிக்கொணரவும், ஒரு புரிதலைத் தேடிக்கொள்ளவும். ஒதுங்கிப்போய் நிற்கும் நிலைமைக்குள் அமிழ்ந்து கொண்டிருக்கும் எமது சமூகத்திற்கு மீண்டும் புத்துயிரூட்டவும், அதனை ஒழுங்குறச் செய்வதற்கான சில வழிவகைகளைத் தேடவும் இது முக்கியமாகிறது. புறநிலை ஆய்வு என்பதை வெறும் கல்விவளாக ஆராய்ச்சிக்கான ஒரு பயிற்சியாக மட்டுமே நாம் கருதவில்லை. புறநிலை நோக்கும் சத்தியத் தேடலும், விமர்சன பூர்வமான நேர்மையான நிலைப்பாடுகளை எடுத்து விளக்கும் எமது சமூகத்திற்கு இன்று மிக அவசியமாக உள்ளது. இதற்கு விலையாக எம்மில் சிலரின் உயிரும் பறிபோகலாம். இதனைவிட்டால் நமது சமூகத்திற்கு வேறுமார்க்கமில்லை என்ற ரீதியிலேயே நாம் இதைக் கைக்கொண்டுள்ளோம்....''

*-ராஜனி திரணகம*
*'முறிந்த பனை'*

மேற்கூறிய இரு மேற்கோள்களும் யாழ் குடாநாட்டு மக்களின் இன்றைய பரிதாப நிலையையும் அங்குள்ள புத்திஜீவிகளின் செயற்பாட்டையும் மிகத் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய பின்னணியில் தான் 21.02.96 அன்று வீரகேசரி பத்திரிகையில் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் 27 பேர் கையொப்பமிட்டு வெளியிட்டிருந்த அறிக்கையின் உள்ளடக்கத்தை ஆராய்தல் வேண்டும். இவ் அறிக்கையானது மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களின் (UTHR/J) அறிக்கைகளையும் செயற்பாடுகளையும் விமர்சித்தே எழுதப்பட்டிருந்தது. இவ் 27 ஆசிரியர்களும் கையொப்பமிட்டு ஆங்கிலத்தில் வெளியிட்ட வேறோர் அறிக்கை 19.02.96 அன்று 'ஐலண்ட்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால், இவ் இரண்டுமே வெவ்வேறு வகையில் எழுதப்பட்டிருந்தன. குறிப்பாக, தமிழ் வாசகர்களுக்கு சகலதையும் முற்றாக மறைக்க முடியாது என்பதற்காக சில விடயங்களை தாமும் ஏற்றுக்கொள்வது போல் காண்பித்தே தமிழ் அறிக்கை எழுதப்பட்டுள்ளது. இரு அறிக்கைகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்கு இது தெளிவாகப் புரியும்.

'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்
பொருள் காண்பதறிவு'

இக்குறள் யாழ் பல்கலைக்கழக இலச்சினையில் பொறிக்கப்பட்டுள்ள கோட்பாட்டு வாக்கியமாகும். ஆனால் இன்றோ அப்பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் விரிவுரையாளர்களைப் பொறுத்தமட்டில், அவர்களிடம் ''எப்பொருள் யார் யார் வாய் தேடினும் மெய்ப்பொருள் காண்பது அரிது'' என்ற நிலையே காணப்படுகிறது. இவர்கள் அங்குள்ள ஆதிக்க அரசியலுக்குள் தாம் தப்பிப் பிழைத்துக்கொள்ள ஒரு பொய்மைக்குள் வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலேயே உள்ளனர். தமது சக விரிவுரையாளர்களாலேயே வெளியிடப்பட்ட பல அறிக்கைகளில் ஒன்றைக் கூட வாசிக்க முடியாத நிலையிலும் உள்ளனர். ஆனால், அவற்றில் ஒரு அறிக்கை பற்றி பி.பி.சி. தமிழ் ஓசையில் ஒலிபரப்பப்பட்ட குறிப்பு தொடர்பாக கண்டித்து அறிக்கை விடவேண்டிய நிர்பந்தத்துக்கும் உள்ளாகியிருக்கின்றனர். தமது அறிக்கையினை வாசிப்பவர்களுக்கு உணர்ச்சி ஊட்டுவதற்காக அங்கொன்றும் இங்கொன்றுமாக சில வரலாற்றுக் குறிப்புக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இன்றைய சூழலின் பல அம்சங்களை அவர்கள் பார்க்க விரும்பவில்லை. எமது அண்மைய வரலாற்றின் பல உண்மைகள் இவ்வறிக்கையில் முற்றாக இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. இவர்களின் இந்த 'அம்னீசியா' மனோநிலை புரிந்து கொள்ளக் கூடியதே. (அம்னீசியா என்பது ஞாபகமறதி பாரிய அளவில் ஏற்படுதல்)

தமிழ் மக்கள் இன்று இருவிதமான பயங்கரங்களுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். ஒன்று அரச பயங்கரவாதம். மற்றையது அதற்கெதிராக ஆரம்பித்த விடுதலைப் போராட்டம் தனது வளர்ச்சிப் போக்கில் உருவாக்கியுள்ள உள்ளார்ந்த பயங்கரவாதம். முன்னையது மக்களை புறவயமாக அழித்து நொருக்கிய போதும், அதனால் அவர்களின் மானுட விழுமியங்களையும் ஆன்மாவையும் முற்றாக அழித்து விட முடியவில்லை. ஆனால் பின்னையதோ தனது சமூகத்தையே பலவீனமாக்கி, சகல மானுடப் பெறுமானங்களையும் அழித்து, மக்களை சிந்திக்கவே முடியாத மந்தைகளாக்கி ஓர் அழிவுப் பாதையில் இட்டுச் சென்றவண்ணம் உள்ளது. இன்று யாழ்ப்பாணத்தில் வாழும் ஒருவர் தன்னைச் சூழ நடக்கும் நிகழ்வுகளை நேர்மையாக கண்நோக்கினால், அது மிகவும் பயங்கரமானதும் நம்பிக்கையற்றதுமான ஓர் எதிர்காலத்தையே அவர் கண்முன் தோற்றுவிக்கும். இவ்வாறான ஒரு யதார்த்தத்தில் வாழும் தனிநபர்கள் இதனை எதிர்கொள்வது மிகவும் கடினமானது. இதனால் அந்த உண்மைகளைப் பார்க்க மறுத்து அவற்றை மறைத்துக் கொள்வது ஓர் இயல்பான செயற்பாடாகும். இந்நச்சுச் சூழலில் இருந்து ஒவ்வொருவரும் தனித்தனியாக விடுபட்டுக் கொள்ளும் முயற்சியில் அயராது ஈடுபட்டுக்கொண்டே இருப்பார்கள். ஆனால், இவ் யதார்த்தத்தை மாற்றுவது பற்றி அவர்களால் சற்றும் சிந்தித்துப் பார்க்க முடியாது. அங்குள்ள சூழலில் தமது பிள்ளைகளை மட்டும் எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது, பாஸ் எடுப்பது, வெளிநாட்டிற்கு அனுப்புவது... இவைபற்றிய சிந்தனையே மேலோங்கி நிற்கும். அதேவேளை வெளியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் செயற்பாடுகள் தொடர்பாக மௌனத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம், தாம் வீணான பிரச்சினைக்குள் அகப்பட்டுவிடாது இருந்து கொள்வர். அத்துடன் நில்லாது, தாம் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என காண்பித்து மற்றவர்களை சிக்கலுக்குள் தள்ளிவிடுவதிலும் பலர் ஈடுபடுவர். இவ்வாறானதொரு சூழலுக்குள் இவற்றை மறுதலித்து மெய்மையில் வாழ முயற்சிப்பது எவ்வாறு? ஒன்றில் உணர்வுரீதியாக நடப்பது தவறு எனப் புரிந்து முற்றுமுழுதாக மௌனத்தை கடைபிடிப்பது ஒருவகையானது. சூழவுள்ள பயங்கரவாதத்தையும் மீறி சமூகத்தின் எதிர்கால நலனை முன்னிட்டு உண்மைகளை துணிவுடன் வெளிக்கொணர்வதில் ஏதோ ஒரு மட்டத்திற்கு முயற்சிப்பது இன்னொரு வகையானது.

- வசீம்...

# ஈச்சிலம்பற்று: கவனிக்கப்படாத ஒரு கிராமம் பற்றி கருணையுள்ளோனின் குறிப்புகள்!

ஈச்சிலம்பற்று வெருகல் பிரதேச செயலாளர் பிரிவானது பதினொரு கிராமங்களையும், எண்ணாயிரம் தமிழ் மக்களையும் கொண்ட பகுதியாகும் வளர்ந்து வரும் உலகில் அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்ட பிரதேசங்களில் இதுவும் ஒன்று.

ஒரு காலத்தில் நீர் வளத்தாலும் நில வளத்தாலும் செழிப்பில் மிதந்த உழைப்பாளர்கள் பூமியாக இது நிமிர்ந்து நின்றது. தொடர்ந்து வந்த கலவரங்களும் உயிர் உடைமை இழப்புகளும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாராமுகமும் இப்பகுதியையும் அதன் மக்களையும் பரிதாபத்துக்குரியதாக்கி விட்டன. 1985ல் இப்பகுதி காடையர்களால் தாக்கப்பட்டது. இத்தாக்குதலுக்கு தலைமைதாங்கியவர் புள்ளைக் குட்டி சார்ஜன்ட் என அப்பகுதி மக்களால் நன்கறியப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே. உடைமைகள் அழிக்கப்பட்டன. வீடுகள் தீயிடப்பட்டன. மக்கள் நாலாபுறமும் சிதறியோடித் தப்பித்துக் கொண்டார்கள். அது வரை காலமும் அவர்களுக்கும் நோய் தீர்த்த மருந்தகத்தைக் கூட அக்காடையர்கள் விட்டு வைக்காமல் தாக்கியதால் ஈச்சிலம்பற்று மருந்தகம் இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. வைத்தியர் தமிழர் என்பதால் மருந்தகம் தாக்கப்பட்டது. வைத்தியர் அப்போது விடுமுறையில் இருந்ததால் தப்பிவிட்டார்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு 1988ல் இவ் வைத்திய நிலையம் இயங்க ஆரம்பித்தது. அது கூட 90 ஜூன் வரைதான். அதன்பிறகு இன்றுவரை இயங்கவே இல்லை.

இப்பிரதேச மக்களுக்கு அடுத்து கிட்டவுள்ள அலிஒலுவ கிராமத்து மருந்தகத்துக்கு ஐந்து மைல்களாவது கடந்து செல்ல வேண்டியுள்ளது. அதுவும் சீரற்ற பாதை. வண்டில் கட்டிக் கொண்டு தான் நோயாளர்களைக் கொண்டு செல்ல வேண்டும். யுத்த பயத்துடன் செல்லும் இப்பாதையில் நோயாளர் மாத்திரமல்ல நோயாளரைக் கொண்டு செல்வோரும் சாவை எதிர்பார்த்துத் தான் பயணம் செய்ய வேண்டும்.

வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய இரு நாட்களில் செஞ்சிலுவைச் சங்கத்தினர் வந்து மருந்து வழங்கிப் போகிறார்கள். அதுவும் தலையிடி, காய்ச்சல் போன்ற இலேசான நோய்களுக்குத்தான். கடுமையான நோயாளர்களும் அவசர வைத்திய உதவி தேவைப்படுவோரும் வண்டி கட்டித்தான் செல்ல வேண்டும்.

ஈச்சிலம்பற்றைச் சேர்ந்த ஒருவர் மூதூருக்கு வருவதானால் பத்துமைல்கள் வரை நடந்து அல்லது வண்டியிலோ, சைக்கிளிலோ கிளிவெட்டிவரை வந்துதான் பஸ் எடுக்க வேண்டும். அல்லது அதே அளவு தூரம் பிரயாணம் செய்து மகிந்தபுரம் என்ற சிங்களக் கிராமத்துக்குச் செல்லவேண்டும். இப்படித்தான் இம்மக்களின் வெளியுலகத் தொடர்பு நடைபெறுகிறது.

இப்பகுதி மக்களின் முக்கிய வருமானம் விவசாயத்திலும், மீன்பிடித்தலிலும் தங்கியுள்ளது. மழை இன்மை, யுத்தநெருக்கடி என்பவை காரணமாக மூவாயிரம் ஏக்கர் வரை வயல் நிலம் கருகிவிட்டது. கடல் வலயத்தடைகள் காரணமாகக் கரையோர மக்களது மீன்பிடித் தொழிலும் படுத்து விட்டது. அட்டை முறை வைத்து அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்ல இராணுவத்தினர் அனுமதிக்கிறார்கள். சகல பொருட்களும் இராணுவத்தினரால் பரிசோதிக்கப்பட்டு அட்டையில் பதிந்த பின்னரே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். மாதாந்தம் இவ்வளவு என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதால் பொருட்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது.

இவ்வளவு நடந்தும் இந்தப்பகுதிக்கு எந்த அரசியல்வாதியும் தலைவைத்துக் கூடப் படுப்பதில்லையாம். த.வி.கூட்டணி பா.உ. மட்டும்தான் அங்கே சென்றிருக்கிறார். எப்போது? ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சந்திரிகாவுக்கு வாக்குக் கேட்ட போது.....

இந்தப் பகுதிமக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!.

- விவேகி

# திருமலை: பரிதவிக்கும் பாடசாலை

இரண்டு சாராருக்கிடையிலான அதிகாரப் போட்டியால் ஒருபாலர் பாடசாலை பரிதவித்துப் போய் நிற்கிறது. திருகோணமலை காந்திநகர் என்ற இடத்தில் அமைந்துள்ள பாலர் பாடசாலையுடன் கூடிய சனசமூக நிலையக் கட்டிடம் திருக்கோணமலை நகராட்சி மன்றத்துக்கா, ஈ.பி.டி.பிக்காக உரிமை கூடியது என்ற பிரச்சினையில் எழுந்த இழுபறியில் கதவுகள் உடைக்கப்பட்டு பொன்மொழிகளில் மை பூசி அழிக்கப்பட்டு பரிதாபகரமாகப் போயுள்ளது.

கடந்த 17ம் திகதி ஏற்பட்ட இந்த உச்ச உரிமை கோரலில் வன்முறைகள் தாராளமாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன. தமது அனுமதியின்றி ஈ.பி.டி.பியினர் தங்கள் பெயர் பதித்து விட்டனர் என்பது நகரசபையின் குற்றச்சாட்டு. எங்களைக் கலந்தாலோசிக்காது பாடசாலையின் கதவுகளை உடைத்தமை, அங்குள்ள பொன் மொழிகளை அழித்தமை, பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரால் திறந்து வைக்கப்பட்ட பெயர்க் கல்லை சிதைத்தமை என்பன நகராட்சி மன்றத்தின் பிழைகள் என்பது ஈ.பி.டி.பியின் நியாயம்.

காணி நகரசபையுடையது. ஏற்கெனவே அவ்விடத்தில் சனசமூக நிலையம் ஒன்று இருந்து வன்செயலில் பழுதடைந்து போயிருந்தது. ஈ.பி.டி.பியினர் இரண்டரை லட்ச ரூபாவில் தங்கள் கட்சிப் பணத்தை போட்டுக் கட்டிடத்தைத் திருத்தியதாகக் கூறுகின்றனர். ஆனால், நகராட்சி மன்றத் தலைவரோ அதில் போடப்பட்டுள்ள கூரைகள் எங்கள் பணத்தினதே என்று அடித்துச் சொல்கிறார்கள்.

நகரசபைத் தலைவர் டெலோ சார்பானவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர்களது உரிமைப் பிரச்சினை வன்முறை வரை வளர்ந்து விட்டதால் கலங்கிப் போனவர்கள் காந்திநகர் மக்கள் மாத்திரமல்ல; திருகோணமலைத் தமிழ் மக்களும்தான்.

உடைக்கப்பட்டவற்றைத் திருத்தித் தருவதாக சூரியமூர்த்தி அறிவித்திருக்கிறார், என்றாலும் அடுத்த நாள் காந்திநகர் வாழ் நகரசுத்தித் தொழிலாளர்கள் தங்கள் வெறுப்பை வெளிநடப்பு ஒன்றின் மூலம் காட்டப்போக, அவர்களது தொழில் உபகரணங்கள் நகரசபையினரால் எடுத்துச் செல்லப்பட்டதையடுத்து அது முழுநாள் வேலைப் பகிஷ்கரிப்பாக மாற்றமடைந்து அடுத்த நாளும் தொடர்ந்தது.

நிலைமை தற்போது சுமூகமடைந்துள்ளது போல் தோன்றினாலும் மனங்களில் அமைதி ஏற்படவில்லை என்பது இரு சாராரது கருத்துப்பரிமாற்றங்கள் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

- விவேகி


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரங்காடிகளின் "-1" நாடகம்

## யாரை நியாயப்படுத்துகிறார் நெறியாளர்?



அரங்காடிகள் ஆரம்பிக்கும் போது மாதம் ஒரு நாடகம் என்று ஆரம்பித்தார்கள். ஆரம்பத்தில் அமர்க்களமாக ஐந்து பழைய நாடகங்கள் மீள் நெறியாள்கை செய்து பல இடங்களிலும் மேடையேற்றினார்கள். பின்னர் பத்து மாதங்களாகக் காணாமல் போனார்கள். அதன் பின்னர் "கொள்கரி" என்னும் புதிய (அரங்காடிகளின் முதல் படைப்பு) நாடகத்தை மேடையேற்றினார்கள். இதன் பின்னர் இவ்வமைப்பு எப்போதாவது வசதி வாய்த்தால் நாடகத்தை மேடையேற்றுவது என்னும் அடிப்படையில் இயங்கி வருகிறது போல் தோன்றுகிறது.

இந்த வகையில் தமது இருப்பை உறுதி செய்யும் வகையில் பூச்சியம் கலை வட்டத்திடம் கடன் வாங்கி '-1' நாடகத்தை ஏப்.04 அன்று மேடையேற்றினார்கள். சரிநிகர் பத்திரிகையில் மாலை 6.00மணிக்கு ஆரம்பமாவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அரங்காடிகளுக்கு கடந்த கால வரலாற்றில் கால ஒழுங்கை முறையாகக் கடைபிடிப்பவர்கள் என்ற புகழ் இருந்தது. இதனால் தானோ என்னவோ மாலை 6.01இற்கு ஜெயசிங்ஹ மண்டபத்திற்கு வந்த ரசிகர் தாம் வந்த வாகனத்தின் கதவுகளைக் கூட சரியான முறையில் பூட்டாது விழுந்தடித்து அரங்கிற்கு ஓடினர். ஆனால், சிறிது நேரத்தில் அவர் போன வேகத்தில் ஏமாற்றத்துடன் திரும்பி வந்து கார்க் கதவை பூட்டியதை எனது நண்பர் ஒருவர் அவதானித்ததாகக் குறிப்பிட்டார். ஒருவழியாக 6.30மணிக்கு நாடகம் ஆரம்பமானது. ஆனால், அரங்கத்துள் இருந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை சற்று ஏமாற்றமானதாக இருந்தது. உண்மையில் நாடகத்திற்கு உரிய முறையில் விளம்பரம் செய்யப்படவில்லை என்பதுகவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. இறுதிவரை மண்டபத்தின் முன்பாகக் கூட ஒரு 'பதாகை' கட்டப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பல கலா ரசிகர்கட்கு இந்நாடகம் மேடையேறுவது பற்றி தெரிந்திருக்கவில்லை. இந்நாடகத்தை தவற விட்டதையிட்டு பல இரசிகர்கள் மனம் வருத்தப்பட்டதும் உண்மை.

இன்றைய நிலையில் நாடகம் ஒன்றைத் தயாரிப்பது எவ்வளவு கடினம் என்பது அனுபவித்து உணர்ந்தால் தான் புரியும் என்பதும் உண்மை. ஆனால், நாடகம் தயாரிப்பதற்கான முடிவு எடுக்கும் போதே இவற்றைக் கடந்து தான் முடிவெடுக்க வேண்டும். எனவே உரிய முறையில் விளம்பரப்படுத்தாமைக்கு உரிய காரணங்களை அரங்காடிகள் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதுடன் கால ஒழுங்கையும் கடைப்பிடிப்பார்கள் என்று ரசிகர்கள் எதிர்பார்ப்பதில் தவறு இருக்கமுடியாது.

இனி நாடகம் பற்றி:மாற்றுக் கருத்துக்களுக்கு மத்தியில் அல்லது அடக்கு முறையை எதிர்க்கும் சக்திகளுக்கு மத்தியில் ஒரு கூட்டத்தை தமது அதிகாரத்தின் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க முற்பட்டு அதில் வெற்றி காண்பவர் மேடையில் இருந்து காணாமல் போன பின், அவரது அடியாள் ஒருவர் அதே ஒடுக்கு முறையை மிகக் குறுகிய காலத்தில் தொடர முற்படுகிறார் என்பதைக் காட்டுவதுடன் நாடகம் முடிகிறது.

நாடக நடிகர்கள் வசனங்களை அனுபவித்துப் பேசியதைக் காணக் கூடியதாக இருந்தது. வசனங்களின் காத்திரத் தன்மை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. நாடகம் முற்று முழுதாக வசனங்களிலேயே தங்கியிருந்தது என்பதும் அதையுணர்ந்து நடிகர்கள் ஏற்ற இறக்கங்களுடன் பேசினர் என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

அரங்காடிகள் இம்முறை மேடையமைப்பை சற்றுக் கவனத்தில் எடுத்திருந்தார்கள். (கோடையுடன் ஒப்பிட முடியாது என்பது வேறு) இதனால் மேடைச் சூழ்நிலையும் பேணப்பட்டு இருந்தது.

நாடகத்தின் போக்கில் என்போன்ற சாதாரண ரசிகர்களுக்கு குழப்பங்கள் இருந்தாலும் நெறியாளரின் வித்தியாசமான அணுகு முறையை காணக்கூடியதாக இருந்தது.

நாடகம் தொடர்ந்தும் இருண்ட சூழலிலே பயணித்தது. நாடகத்திற்கு இருண்டு சூழல் மெருகூட்டினாலும் தொடர்ச்சியாக காட்சிகளை இருட்டினுள் நிகழ்த்துவது தேவைதானா? நடிகர்களின் முகபாவங்கள் எதனையும் அவதானிக்க முடியவில்லை. பெரும்பாலும் நடிகர்கள் ஒரே இடத்தில் அமர்ந்து வசனங்களைப் பேசினார்கள். இசையும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒத்திசைய மறுத்திருக்கிறது.இங்கே நாடக மொழி பற்றிக் கேள்வி எழுகிறது. வெறும் வசனங்கள் மாத்திரம் நாடக மொழியை முழுமையாகப் பேசுவதற்கு போதுமானதா? முகபாவங்கள் செய்துகாட்டல் அசைவுகள் ஒளியமைப்பு உத்திகள் இவையெல்லாம் நாடக மொழியைப் பேசுவதற்கு தேவையற்றதா? நெறியாளர் இவ்விடயங்களைக் கருத்தில் கொள்வாரா? ஒரு விடயத்தை ஒரு முறை சொல்லும் போது அது சாதாரண விடயமாக இருக்கும். இரண்டாம் முறை அதே பாணியில் சொல்லப்படும் போது அது குறியீடு ஆகிறது. மூன்றாம் முறை சொல்லப்படும் போது அக்குறியீடு வலியுறுத்தப்படுகிறது. நான்காம் முறை, ஐந்தாம் முறை சொல்லும் போது பொருளிழந்து சலிப்பை ஏற்படுத்துகிறது. நாடகத்தில் பெரும்பாலான வசனங்கள் - அவை எவ்வளவுதான் காத்திரமானவையாக இருந்தாலும் - திரும்பத் திரும்ப பல முறை சொல்லப்படுவதால் ஒரு வித சலிப்பை ஏற்படுத்தியது என்பதும் உண்மை.

நாடகத்தில் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு அம்சம் 'பலே' நடனம் . காட்சி மாற்றங்களுக்கான ஒரு உத்தியாகவும் அதே நேரத்தில் அதனை ஒரு குறியீடாகவும் நெறியாளர் பயன்படுத்தியிருந்தது, நடனத்துடன் இசை பல சந்தர்ப்பங்களில் ஒத்திசைந்ததையும் குறிப்பிட்டேயாக வேண்டும். பலே நடன அசைவுகளை நெறியாளர் சிறப்பான முறையில் கையாண்டிருப்பதாகவே படுகிறது. ஆனால், பெரும்பாலான நடனம் மேடைக்கு கீழேயே நடைபெற்றதாலும் நடனத்தை நோக்கி பார்வையாளரின் கவனம் கவரப்படாமையாலும் அது எப்போது தொடங்குகிறது என்பது தெரியாமல் போகிறது. இதனால் நடனம் தொடங்கி சில நிமிட நேரத்தின் பின்பே அது பார்வையாளரின் கவனத்தைப் பெறுகிறது. நடனத்தின் போது மேடை நடிகர்கள் அசைவற்று நிற்பதால் ஒரு தேக்க நிலை தோன்றுகிறது.

இனி நாடகத்தின் போக்கில் ஏற்பட்ட குழப்பங்களைப் பார்ப்போம்.

1. நாடகத்தின் ஆரம்பத்தில் கணவனைத் தேடி (தொலைத்து) மேடைக்கு (பொது வாழ்வுக்கு) வரும் அந்தப் பெண்மணி யார்? இவர் அவர் தானா? அவர் தான் என்றால் ஏன் அந்த அராஜக வாதிக்கும் மாற்று சக்திக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்கிறார்??

2. அராஜகவாதியுடன் அவரது அடியாள் முரண்படும் போதெல்லாம் அவர் அடக்கத்திற்கு செல்வது போல் கை; கால் கட்டப்பட்டு கையுறை காலுறை அணிவிக்கப்படுகிறது. அப்படி என்றால் அவர் புத்துயிர் பெற்று எழுவது எவ்வாறு?. இறுதியில் ஏன் அந்தக் கையுறைகளை அவர் களைந்தெறிகிறார்.

3. '-1' என்பதன் அர்த்தம் என்ன. இறுதியாக ஏற்பட்ட சூழ்நிலை. பூச்சியம் அல்ல அதனிலும் குறைவான '-1' என்று வலியுறுத்துவதா அல்லது அராஜகவாதிகளில் ஒருவர் குறைந்து விட்டார் அடுத்தவர் வந்து விட்டார் என்பதை வலியுறுத்துவதா?


இந்தக் குழப்பங்கள் நாடகத்தை எந்தப் பரிமாணத்தில் பார்ப்பது என்ற குழப்பத்தை ஏற்படுத்துகிறது. கூறப்பட்ட செய்தி உள்முரண்பாடா அல்லது இனப்பிரச்சினை பற்றியதா என்ற குழப்பமும் ஏற்படுகிறது. எனது நண்பனின் ஆதங்கமான கேள்வி **குறியீட்டு நாடகங்களிற்கு பல தனங்களில் நின்று விளக்கம் கூறமுடியும். எனவே ஒரு தளத்தில் நின்று கேள்வி கேட்கும் போது நெறியாளர் மற்றைய தளத்தில் வசதியாக ஒளிந்து கொள்ள முடியும். அப்படியென்றால் ஒரு தவறான செய்தியை பார்வையாளருக்கு வேறோர் தளத்தில் நின்று அதை நியாயப்படுத்திக்கொண்டே - வழங்க முடிகிறது என்றால் நச்சு இலக்கிய நாடகங்களை இனம் காண்பது எப்படி? இந்த நியாயமான கேள்விக்கு யாராவது விடை பகர்வார்களா?**

இறுதியாக இங்கே - 1 நாடகத்தில் நெறியாளர் யாரையோ வலிந்து யதார்த்தத்திற்கு அப்பால் சென்று நியாயப்படுத்த முற்படுகிறாரா? அம்மையாரை நியாயப்படுத்த முற்படுகிறாரா? அல்லது கைகட்டி வாய்பொத்தப்பட்டிருக்கும் அந்த சக்தியை நியாயப்படுத்துகிறாரா? அல்லது இருவரையுமே நியாயப்படுத்த முற்படுகிறாரா? மாற்றுக் கருத்துக்களை முன்வைப்பதற்கு நாடகம் பயன்படுத்தப்படல் அவசியமாக இருக்கலாம். எனினும், வலிந்து நியாயப்படுத்தல் எந்தளவுக்கு வெற்றிபெறும்? யதார்த்தத்துடன் இணையாத படைப்பு வெற்றி பெறுமா?

***ரி.வி.ஆர்.எஸ்.***
**பேராதனை**

---

# உரவு







இன்றைய ஈழத்து இலக்கியப் போக்குகளில் பல புதிய பரிமாணங்கள் ஏற்பட்டுள்ளதைக் காணலாம். அவற்றில் முக்கியமானவை புலம் பெயர் இலக்கியமும், மலையக இலக்கியமும் என்ற இரு கூறுகளாகும்.இவையிரண்டும் பொதுப்போக்கிலிருந்து தனியான அடையாளமிட்டு வளர்ந்து வருகின்றன என்பது இலக்கிய விமர்சகர்களது கருத்தாகும். மலையக மக்களின் இருப்பு, வாழ்நிலை, பொருளாதார, கல்வி நிலைகள் பற்றிப் பேசுகின்றப் புத்தகங்கள், பல்வடிவ ஊடகங்களாக - அண்மைக்காலமாக அதிகளவில் வெளிவந்துக் கொண்டிருக்கின்றன. இந்தத் தொடரில் அண்மையில் வெளிவந்தவற்றில் மாத்தளை சோமுவின் "எல்லை தாண்டா அகதிகள்" என்ற நாவலும் ( இதே தலைப்பில் ஒரு சிறுகதையும் அடக்கம்) "அவர்களின் தேசம்" என்ற சிறுகதைத் தொகுப்பும் இடம் பெறுகின்றன.

இந்த நூல்களைப் பொறுத்தவரை இதற்கு இன்னொரு விஷேசமும் இருக்கிறது. புலம் பெயர்ந்த ஒருவரால் மலையக மக்கள் பற்றி ஆக்கப்பட்டிருக்கிறது இந்த நூல்கள். இது தனியே புலம் பெயர் இலக்கியத்துள் கணிக்கப்படுமா, அல்லது மலையக இலக்கியத்துள் கணிக்கப்படுமா..அல்லது புதிதாய் புலம்பெயர் மலையக இலக்கியம் என்ற தோற்றத்தை ஏற்படுத்துமா என்பது இலக்கிய விமர்சகர்களின் கணிப்பிற்குட்பட வேண்டியது. ஏனெனில், புலம்பெயர் இலக்கியத்தை அடையாளப்படுத்துவதில் பல்வேறு கருத்துச் சிக்கல் தோன்றியுள்ளமை அவதானிக்க முடிகிறது.

1983ல் இலங்கையில் நிகழ்ந்த சிங்கள - தமிழ் இனமோதல்களினால் ஏற்பட்ட நிலைகுலைவை எல்லை தாண்டா அகதிகள் என்ற இந்நாவல் சித்திரிக்கின்றது. ஒரு தோட்டத்து தமிழ் இளைஞனதும் அவனது மனைவியான மாலினி என்ற சிங்களப் பெண்ணினதும் வாழ்நிலைகளைக் கருப்பொருளாகக் கொண்டு, இனக்கலவரம் தோட்டத் தொழிலாள மக்களை பாதித்த விதத்தை கதை இட்டுச் செல்கிறது.

கதையும் வரலாறும் இணைந்த ஒரு புதிய வடிவமாக இந்நாவல் நூலாசிரியராலும் முன்னுரையாளராலும் இனங்காணப்படுகிறது.

"இது இலங்கை நாவல் உலகில் புதிய களத்தை அறிமுகம் செய்கிறது. வழக்கமாக தமிழுக்கு புதிய களத்தை புதிய உலகத்தை அறிமுகம் செய்யவேண்டும் என்று விரும்புகிற எனக்கு இந்த நாவல் ஒரு நம்பிக்கை நட்சத்திரமே" என நூலாசிரியர் என்னுரையிலும்.....'

"இனத்துவத்தின் உணர்வேயில்லாது போகுமளவுக்கு ஒடுக்கப்பட்டு வாழ்ந்த மக்கள் இனத்துவத்தின் பேராலும் ஒடுக்கப்படும் பொழுது. அவர்கள் செயல்முறைகளிலும், சிந்தனையோட்டத்திலும் ஏற்படும் உணர்வு மாற்றங்கள் நாவலில் விரிவாக விவாதிக்கப் பட்டுள்ளன. அந்த அளவில் இந்த நாவல் மிக முக்கிமான ஒரு சமூக வரலாற்று ஆவணமாகியுள்ளது" என முன்னுரையிலும் குறிப்பிடப்படுகிறது.

நாவலுக்கு மலையக தமிழ் இலக்கியம் பற்றிய ஒரு சுருக்க வரலாற்றை முன்னுரையாக வழங்கியுள்ளார் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள். மிகவும் பயனுள்ளதும் நாவலுக்கான பின்புலத்தை மலையக மக்கள் பற்றி அறியாத வாசகர்களுக்கும் புரியச் செய்வதுமாக இருக்கிறது அம் முன்னுரை.

நூலாசிரியரின் ஏனைய நாவல்கள் பற்றிய பிறரின் 'நல்ல' கருத்துக்களை ஆரம்பத்திலேயே தந்திருப்பது இந்நாவல் பற்றிய விமர்சன அபிப்பிராயத்துக்கு ஊறுவிளைவிக்கிறது. இவரின் நாவல்கள் இப்படி இருப்பதாக இவர்களே சொல்கிறார்கள். எனவே இதுவும் இப்படித்தான் இருக்கும்..' என்று திணிப்பதாகவே படுகிறது.

'விமர்சனம் பின்னுரையாகவே இருக்க வேண்டும்.." என முன்னுரையில் சிவத்தம்பி குறிப்பிட்டாலும் வல்லிக் கண்ணனின் பின்னுரை கூட முன் சொன்னமாதிரியே இருக்கிறது.

மற்றையவை வாசகர்களினதும், விமர்சகர்களினதும் கவனத்திற்கு!

### அவர்களின் தேசம்:

ஏற்கெனவே 'நமக்கென்றொரு பூமி', அவன் ஒருவனல்ல' ஆகிய சிறுகதைத் தொகுதிகளைத் தந்த ஆசிரியரின் மூன்றாவது சிறுகதை நூல் இதுவாகும். 'ஆசிரியரின் சிறுகதைகளைப்பற்றி" இவர்கள் பார்வையில்" என்றும் "பத்திரிகைகளின் பார்வையில்" என்றும் முன்பு குறிப்பிட்ட திணிப்பை இத்தொகுதியிலும் காணலாம்.

புலம் பெயர்வு வாழ்வின் குறிப்பிட்ட கால 'எழுத்து மௌனத்தின்' பின்னர் எழுதிய கதைகளின் தொகுப்பாக அடையாளம் காட்டப்பட்டுள்ள இச்சிறுகதைத் தொகுப்பில் பல்வேறு காலப்பகுதிகளில், பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்த 12 கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

கலாநிதி க. அருணாசலம் அவர்களின் நீண்ட முன்னுரை இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. கதைகளைப் படித்த பின்னர் இம்முன்னுரையையும் ஏனையவற்றையும் படிப்பது கதைகளை சுதந்திரமாக உள்வாங்க உதவும் என்பது எனது அபிப்பிராயம்.

"மலையகம், தமிழகம், அவுஸ்திரேலியா என பல்வேறு புலங்களைப் பதிவு செய்திருக்கும் இந்நூல் தனக்கெட்டியவரை 'அகலுலகத்' தொடர்பு கொண்ட முதலாவது சிறுகதை தொகுப்பாகும்" என கலாநிதி க. அருணாசலம் குறிப்பிடுகிறார்.

இரண்டு நூல்களின் அட்டைப்படங்களை அழகுற வரைந்திருக்கிறார் ஓவியர் ஜீவா. படங்களில் ஓவியர் மருது அப்படியே தெரிகிறார்.

கதைகள் வாசிக்கப்படலாம். விமர்சிக்கப்படலாம்!

***நில்ஷா***

---

## சிறுகதைப் போட்டி

வடக்கு கிழக்கு தமிழ் கலை இலக்கிய வட்டம் அகில இலங்கை ரீதியான சிறுகதைப் போட்டியொன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

கதைகள் சமகால நடைமுறை வாழ்வைப் பிரதிபலிக்கும் சுய ஆக்கமாக இருப்பதுடன் தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதப்பட்டதாகவும் இருக்க வேண்டும். எழுதியவரின் பெயரும் முகவரியும் தனியாக எழுதப்பட வேண்டும்.

இப்போட்டியில் தெரிவாகும் முதல் மூன்று கதைகளுக்கும் முறையே 50, 30, 20 ஸ்ரேலிங் பவுண்கள் பரிசாக வழங்கப்படும்.

ஆறுதல் பரிசாக 10ஸ்ரேலிங் பவுண் வீதம் ஐந்து கதைகளுக்கு வழங்கப்படும். போட்டிகள் முடிவுத் திகதி-30-06-1996. கதைகளை (பதிவுத்தபாலில்) அனுப்ப வேண்டிய முகவரி:


பிரதம அமைப்பாளர்
வடக்கு - கிழக்கு தமிழ்கலை
இலக்கிய வட்டம்,
கமலகம் வீதி,
அக்கரைப்பற்று - 7

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## விறைத்துப் போனவை



நீ உறுதியுடன் நீட்டிய கரம்
அக்கரத்தில் என்னை நோக்கி
பிடித்திருந்த அப்பழுப்பு மஞ்சள்
பழம்;
வார்த்தை யொன்றில்லாத
கண்களில்;
நானும் உன்னைப் போன்று தான்
அத்தனை உறுதியுடையவன்
என் இரவுகள் எதிலும்
தெரிவன அழிவுகள் மட்டுமே
நீயும் நானும்
ஆறுதல் அளிக்கும்
அக்கடல் விடுதியை நோக்கிய
பயணத்தில்
விறைத்துப்போன புல்வெளிகளின்
பச்சை நிற விஷத்துடன்;
இரைச்சல் எதுவுமில்லாத
இரப்பர் சில்லுகளுடன்
அத்துடன்,
கை தட்டி அழைக்கும்
புதை குழிக் கற்களுடன்;
தகரங்களிலான இவ்வாகாயத்தை
சுவைக்க முடிகிறது
உலோகங்களின் நிறத்தில்
வசந்தம் புலர்கிறது.
தடித்துக் கெட்டியாகிப் போன
நரம்புகளாக
மரங்களும் கொடிகளும்.

அதிர்ந்து கொள்கின்றன
மேல் தளங்கள்
எதிர் எதிரே இணையாத எலும்புகளை
மண்டை ஓடுகளை
சூரியன் கொழுத்திச் செல்கிறது
இதயத்துப் புண்ணொன்றை
மூடி மறைப்பதும், நீ
சடுதியில் காணாமல் போவதும்
அறைகள் பற்றி
புன்னகைகள் பற்றி
அழகான ரப்பர் செடிகள் பற்றி
அல்லது,
கடலைப் பற்றி
இரக்க மற்ற விருந்தினர்களே
திருப்தி அடைந்து கொள்ளுங்கள்

செயல் எதுவு மில்லாத
ஒரு வகைத் தொண்டு
வெய்யிலில் ஒரு மனிதனை
தூங்க வைக்க முடியுமா
முடியு மெனில்,
என்னை எப்போதும்
கிடத்திப் பார்க்கும் இடமும் அதுதான்
ஒரு பிணத்தைப் போல
ஒரு பல்லியைப் போல
ஒரு கல்லைப் போல

நல்லாரன்


ரீ.வீயில் நியூஸ் வாசிக்கிற பெட்டை அடிக்கடி தேவையில்லாமல், பல்லைக் காட்டியது எனக்கு விசரேத்தியது. இவளவைக்கு ஏன் இந்தத் தேவையில்லாத வேலை. நியூஸ் வாசிக்க வந்தால், நியூஸை வாசித்து விட்டு போறதுக்கு சும்மா போலித்தனமாக நடித்துக்கொண்டு.... போலி நாய்கள். எல்லோருமே போலிகள்.

இண்டைக்கு எனக்கு பொன்னான நாளாய் அமையப்போகுது என்று ராத்திரி படுக்கேக்கை நினைத்துக் கொண்டனான். ஆனால், விடியக் காலத்தாலை இந்தப் பெட்டை நாய் பல்லைக் காட்டி விசரேத்துது. இண்டைக்குத்தான் தேவகியை ஆறேழு மாதத்திற்குப் பிறகு பார்க்கப் போகிறேன். நான் அனுப்பின காசிலதான் கனடாவுக்கு வந்தவள். இங்கே வந்த பிறகு, நாலு ஐந்து வருசமாய் தேவி அக்காவோட பக்கத்து பில்டிங்கில இருந்தவள் பிறகு, ஒரு நாள் சொல்லாமல் கொள்ளாமல் வெளிக்கிட்டு வேறெங்கேயோ இருக்கப் போயிட்டாள். இத்தனைக்கும், அடுத்த வருஷமளவில எனக்கும் அவளுக்கும் கலியாணம் என்று நிச்சயித்தாச்சு. இப்படிப் போனால் என்ன அர்த்தம்? என்னைப் பிடிக்காமல் தான் போனாள் என்று அவளின்டை சொந்தங்கள் சொல்லிச்சினமாம். எனக்கு நம்பிக்கையில்லை. இவர்கள் தான் அவளின்டை மனசை மாத்திக் கொண்டு போய் வைத்திருக்கிறாங்கள் என்று நினைத்தேன்.

பிறகொரு நாள் அவளின்டை ஃபோன் நம்பரை ஒருத்தர் மூலமாக எடுத்து, அவளைப் பிடிச்சிட்டேன். ''ஏன் தேவகி என்னைப் பிடிக்காமல் தான் போனியா?'' என்று நான் கேட்டேன்.

''ம்'' என்றாள். பன்ரெண்டாயிரம் ஏஜென்டுக்கும் இவளுக்கு செலவுக்கென்று மேலே இரண்டோ மூன்றோ அனுப்பினதுக்கும், அவள் தருகிற பதில் ஒரு சொல், ஒரு எழுத்து.

''ஏன் என்னைப் பிடிக்கேலை?''




''.....''

''ஏன்டி என்னைப் பிடிக்கேலை?''

"I dont know... I have to go now. bye."என்று போட்டு ஃபோனை வைத்து விட்டாள். எனக்கு பொல்லாத கோபம். திரும்பத் திரும்ப அவளுக்கு ஃபோன் அடித்தேன். ஒருத்தரும் எடுக்கேலை. ஆனால், அடுத்த நாள் ஆளைப் பிடித்திட்டேன்.

''ஏன்டி உனக்காக நாய் போல உழைத்து காசு அனுப்பிக் கூப்பிட்டதிற்கு, நீ காட்டுகிற நன்றியோடி இது.? நான் என்னடி, உன்னட்டை காரணம் தானே கேட்கிறேன். காசோடி கேட்டனான்? ஏன்டி உனக்கு என்னைப் பிடிக்கேலை?''

"listen!I will pay your money back in ...this months. O.k.! now dont call me back here again. I dont want to hear your voice again...."

''என்னடி நானும் பார்க்கிறேன் நீ ஆகத்தான் ஏறுகிறாய்...?''

என்று நான் என்னுடைய கோபத்தை காட்டி முடிக்க முதலே அவள் ஃபோனை வைத்திட்டாள். திரும்பத் திரும்ப ஒரு வெறியில் அவளுக்கு போன் அடித்தேன். பதில் இல்லை. இரண்டு மூன்று நாளில் ஃபோன் நம்பரை மாத்திட்டாள். பிறகு அவளுக்கும் எனக்கும் தொடர்பில்லால் போய்விட்டது.

பிறகு நேற்றுத்தான் சிவா தான் சொன்னான். இவள் ஏதோ கொம்பியூட்டர் கோர்ஸ் எடுக்கிறாளாம்... இந்த இடத்திற்கு போனால் சந்திக்கலாம் என்றான். அவன் மேலேயும் ஏதேதோ சொன்னான். அவள் வெள்ளைகளோட எல்லாம் திரிகிறாளாம். கொஞ்ச நாள் யாரோ ஒரு வெள்ளையன்டை வீட்டிலே தான் ஒன்றாக இருந்தவளாம்; இப்ப பழையபடி தனிய வந்து இருக்கிறாளாம். ஆனால், இப் வேறையொரு வெள்ளையோட சுத்தி திரியிறாள் என்றான். நான் எப்பவும் அரைப் போத்தல் அடித்தாலே ஸ்டெடியாக இருப்பவன் அண்டைக்கு ரெண்டாவது கிளாசிலேயே ஏறிட்டுது. அண்டைக்கே இவளை வெட்டிப் போடுகிறதென்று முடிவெடுத்திட்டேன்.

இண்டைக்கே அவள் கிளாஸ் முடிந்து வரேக்கை குத்திவிடுகிறதென்று, ப்ளான் போட்டுத்தான் படுத்தனான். இரவு முழுக்க யோசித்தேன். எப்படி இவள் ஊரிலே இருந்தவள்.... இப்ப இங்க வந்து ஐந்து வருஷத்துக்குள்ளே ஆள் மாறி நாடகம் போடுகிறாள். இத்தனைக்கும் இவள் அந்த மாட்டுக்கு விடுகிற கந்தையாண்ணைன்டை மோள். அந்தாள் எங்கடை காணிக்கை, அல்லது வயலுக்கை வேலையென்றால், எங்கடை அப்பரிட்டை சம்பளத்துக்கு வேலை செய்கிறது..அவருடைய மோளுக்கு இவ்வளவு திமிர்.

இவள் என்னோட ஊரிலே டியூசனுக்கு வருகிறவள் ஆனால், எனக்கு அங்கே இவளோட அவ்வளவு பழக்கமில்லை. எங்கடை சிவப்பியை ஒருக்கா மாட்டுக்கு விட கந்தையாண்ணை வீட்டை போனது போது தான் இவளோட பழக்கமாச்சு. அப்போது தான் இவள் கந்தையாண்ணைன்டை மகள் என்று எனக்குத் தெரியும். ஏனென்றால், டியூசனில் ராணி மாதிரி திரிகிறவள்.

அன்றைக்கு சிகப்பியை மாட்டுக்கு விடப் போன போது, நடந்ததை வைத்தே எனக்கு அவள் எவ்வளவு ஆட்டக்காரி என்று தெரிந்திருக்க வேணும். ஆனால், எனக்கு அப்ப

அவளுடைய வடிவுதான் திரும்பத் திரும்ப தெரிந்தது.

சிகப்பியோட படலையை திறந்து கொண்டு அவையளின்ரை வளவுக்கை போன உடனே நாய் குரைத்தது. உடனே இவள் கொட்டிலுக்கை இருந்து வந்து, ''ப்ரவுனி குரைக்காமல் இரு. இங்கே வா! வா இங்கே!'' என்று நாயோடு கதைத்தாள். பிறகு என்னைப் பார்த்து ''என்ன வேணும் உங்களுக்கு?'' என்று கேட்டாள்.

இந்த கேள்வியிலேயே தெரிந்திருக்க வேணும் இவளைப் பற்றி. பின்னே என்ன? படலைக்குப் பக்கத்திலே பெரிதாக இங்கு மாட்டுக்கு விடப்படும் என்று போர்ட் போட்டிருக்கினம்; நான் பசு மாட்டோட வந்திருக்கிறன்; இவள் என்ன வேணும் என்று கேட்கிறாள். அதெப்படி மாட்டுக்கு விட வந்திருக்கிறேன் என்று இவளிட்டை சொல்கிறது....

''கந்தயாண்ணை இல்லையோ என்றேன் நான்.

''அவர் படுத்திருக்கிறார். என்ன விஷயம் என்று சொன்னீங்கள் என்றால், தேவையோ என்று பார்த்து எழுப்பலாம்.''

''இல்லை... என்னென்றால்... கன்றுகுட்டி வேணும் எண்டு...'

''உங்களுடைய கன்றுக்குட்டி எங்கடை காணிக்குள்ளே வந்திட்டுதோ? எந்தப் பக்கம் போனது?''

''சீச்சீ... எங்கடை மாட்டுக்கு கன்றுக்குட்டி வேணுமெண்டு ... உங்களிட்டை வந்தால் கிடைக்கும் என்று அப்பா சொன்னார். அதான்...'

''நாங்கள் கன்டுக்குட்டி ஒண்டும் விக்கிறேல்லையே.''

''இல்லை உங்கடை நாம்பன் மாட்டோடை எங்கடை மாட்டை ... போட்டிலே கூட போட்டிருக்கிகுது... விட்டு ...சினைக்கட்ட வேணும்.''

''ஓ! மாட்டுக்கு விட வந்திருக்கிறியளோ? இருங்கோ அப்பாவைக் கூட்டிக் கொண்டு வாறன்'' என்று போட்டு கொட்டிலுக்குள் புகுந்தாள். நாய் என்னைப் பார்த்து ''உர்ர்'' என்றது. சிகப்பி பயந்து பின்வாங்கியது.

கந்தையாண்ணை சந்தேகப் பார்வையோடு வந்தார். ''அட தம்பியோ? என்ன விஷயம்?'' கள்ளு வாசனை கேள்விக்கு முதல் வந்தது. மத்தியானத்திற்குளேயே வடித்திட்டார். ''இல்லை கந்தையாண்ணை உங்கடை நாம்பன் மாட்டுக்கு.. விட்டு... சினைகட்ட வேண்டும்.''

தேவகி சிரித்தது போல் இருந்தது.

''சரி. வீட்டுக்குப் பின்னால் தான் நாம்பன் நிக்குது. பின்னாலே வா.''

சிகப்பி, நான் இழுக்க நாய்க்குப் பயந்தோ, அல்லது விஷயம் தெரிந்தோ வரப் பஞ்சிப்பட்டது. நான் படங்களில் வரும் வில்லன் போல் இழுத்துக் கொண்டு போனேன்.

பின்னால் நாம்பன் கறுப்பாக, கொழு, கொழுவென்று படுத்துக்கிடந்தது. கந்தையாண்ணை நாம்பனை எழுப்பினார். நாம்பன் மணந்து பார்த்தது மூடில்லை.

''தம்பி! கோவிக்காமல் கொஞ்ச நேரம் இரு. காத்தாலை இருந்து எனக்கு பைப்பிலே தண்ணி ஒழுகிற மாதிரிப் போகுது. இரு இந்தா வந்திர்றேன்.... எடி பிள்ளை! அந்த வாளியிலே கொஞ்சம் தண்ணி கொண்டோடி வா! என்றபடி கந்தையாண்ணை அவசரத்தில் ஓடினார்.

நான் நாம்பனைப் பொறாமையாக பார்த்துக் கொண்டிருந்தேன். வாழ்க்கையென்றால் இது வாழ்க்கை. இருந்த இடத்தில் படுத்த இடத்தில் சாப்பாடு, விதம் விதமான பசு மாடுகள். எல்லாம் அவன் செயல்!

''நீங்கள் என்னோட டியூசன் எடுக்கிறீங்கள், இல்லையோ?'' தேவகி திடீர்க் கேள்வியை எழுப்பி பயப்படுத்தினாள்.

''ஓம்''

''அண்டைக்கு மத்ஸிலே படிப்பிச்சது விளங்கினதோ? எனக்குத் துப்பரவாக விளங்கேலை.'' அவள் கொஞ்சம் சிரித்தபடி கேட்டாள். அவள் சிரிக்கும் போது கன்னத்தில் குழி விழுந்தது நல்ல வடிவாக இருந்தது.

அது கணக்குத் தெரிய கேட்ட கேள்வி இல்லை என்று கனநாளைக்கப்புறம் தெரிந்தது. அன்று கணக்கில் தொடங்கி, நான் கணக்கில்லாமல் இவளுக்கு காசு அனுப்பிய வரைக்கும் எங்கள் காதல் வளர்ந்தது. பிறகு தான் ஏதோ நடந்தது.....

T.V.இல் இப்ப அதே பெட்டை - முதல் தேவையில்லால் பல்லைக்காட்டிய அதே பெட்டை - பொஸ்னியாவில் சண்டை காரணமாக சிலர் செத்து விட்டனர் என்று படு சோகமாக சொன்னாள். போலி நாய். உலகம் கிட்டடியிலேயே அழியப்போகுது, ஏனென்றால், உலகம் முழுக்க போலிகள்.

தேவகி படிக்கிற நைட் ஸ்கூலிற்கு வெளியிலேயே அவள் வெளியே வருவதற்காக நின்றேன்.

குளிரில் கோட் பொக்கெட்டிற்குள் இருந்த இறைச்சி வெட்டுகிற கத்தி. ஐஸ் போல குளிர்ந்தது. வெள்ளையன்டை காரிலேதான் போகிறவள் என்று சிவத்தான் சொன்னான். கார் பார்க்கிற்கு போய் காருக்குள் ஏறேக்கை குத்திவிட வேண்டும். அங்கே தான் இருட்டு வயிற்றிலே இரண்டு குத்து, நெஞ்சிலே இரண்டு... பிறகு முகத்திலே நாலஞ்சு தரம் கீறி விடவேண்டும்.

இரவு 10.30. கொஞ்சம் கொஞ்சமாக சனம் ஸ்கூலில் இருந்து வந்தது. அவளைக் காணேலை. ஒரு சப்பட்டைப் பெட்டை ஒண்டு சொண்டு முழுக்க லிப்ஸ்டிக் பூசிக்கொண்டு Take it easy ...have a nice weekend..

Take care என்று அவளுடைய பிரண்ஸிற்கு சொல்லிக் கொண்டிருந்தது அவங்களுடைய வீக் எண்ட் நைஸாக இல்லாட்டி இவளிற்கு நித்திரையே வராது தானே. போலிச்சனியன்!

கடைசியாக தேவகியும், அவனும் கிட்டத்தட்ட கட்டியணைத்தபடி கார் பார்க்கை நோக்கி நடந்திச்சினம். நிமிஷத்திற்கொரு தரம் ஊரில மாடு பனங்கொட்டை சூப்புற மாதிரி, அவன் அவளைக் கொஞ்சினான். அந்தக் குளிரிலும் எனக்கு வியர்த்தது.

முதல் அவன் டிரைவர் சீட் பக்கம் ஏறினான். இவள் அவன் கதவைத் திறப்பதற்காக காத்திருக்க, நான் அவளை நெருங்கி பொக்கெட்டில் கையை விட்டு கத்தியை தொட்டு - அவள் திடீரெனத் திரும்பி என்னைப் பார்த்தாள். முதலில் கொஞ்சம் திடுக்கிட்டாள். பிறகு என்னைப் பார்த்து சிரித்தாள் - இல்லை புன்னகைத்தாள்.

புன்னகைத்தாள்!

புன்னகைத்தபடியே காரில் ஏறிவிட்டாள். கார் வெளிக்கிட்டு பார்க்கிங் லொட்டில் ஒரு வட்டமடித்து என்னைக் கடந்து சென்றது. நான் கார் நின்றிருந்த இடத்திலேயே நின்றேன். பொக்கெட்டிகுள் என் வலது கை கத்தியை இன்னும் இறுக்கிப் பிடித்திருந்தது. அப்பொழுது தான் எனக்கொரு உண்மை விளங்கியது. அவள் கெட்டவள் இல்லை. அவளில் குறைகள் இருக்கலாம், ஆனால் அவள் கெட்டவள் இல்லை.

பஸ் ஸ்டொப்பிற்கு நடந்து போன போது, பஸ்ஸில் இருந்த போது .... வீடு வரும் வரையில் அவள் என்னைப்பார்த்து சிரித்தது என் கண்முன்னால் வந்து நின்றது. அவள் சிரிக்கும் போது. அவள் கன்னத்தில் குழி விழுவது ரொம்ப அழகு.

சுரேஸ் சுப்ரமணியம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நற்பிட்டிமுனை: சேனைக்குடியிருப்பு, குடிநீர்த்திட்டத்தில் குழிபறிப்பு



கல்முனைத் தொகுதியின் கரவாகு மேற்கு; நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, திரவந்தியமேடு, மணல்சேனை ஆகிய கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. இப்பகுதியில் தமிழ், முஸ்லிம் மக்கள் நகமும், சதையும் போல் கடந்த காலங்களில் வாழ்ந்து வந்ததுடன், சோதனையும், வேதனையும் நிறைந்த இக்கால கட்டத்திலும் வாழ்ந்து வருகின்றார்கள். இக்கிராம மக்கள் இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் குடிநீரின்றி பல கஷ்டங்களை அனுபவித்து வந்துள்ளார்கள்.

கல்முனைத் தொகுதியிலுள்ள ஏனைய கிராமங்களை விட நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய இரு கிராமங்களும் மிக உயரமான கற்பாங்கான மேட்டு நிலமாக அமைந்துள்ளது. இதனால் இக்கிராமங்களிலுள்ள கிணறுகளில் நீரைப்பெற்றுக்கொள்ள முடிவதில்லை.

நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குடி தண்ணீருக்காக இரண்டு மைல் தொலைவிலுள்ள பாண்டிருப்புக் கிராமத்திற்கே செல்வார்கள். அங்கிருந்து ஆண்களும், பெண்களுமாக சைக்கிள்களிலும், தலையிலும் நீரைச் சுமந்து கொண்டு வருவார்கள். இங்குள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் குளிப்பதற்கு மட்டக்களப்பு வாவியின் கிட்டங்கிப் பகுதியை நாடுகின்றனர்.

குடிதண்ணீர் பெறுவதில் காலாகாலமாக பல கஷ்டங்களையும் இன்னல்களையும் அனுபவித்து வந்த இக்கிராம மக்கள் அரசியல் விழிப்படைந்த காலம் முதல் காலத்திற்குக் காலம் வரும் அரசியல்வாதிகளிடம் தங்களின் முதலாவது கோரிக்கையாக குடிதண்ணீர் பிரச்சினையை முன்வைத்து வந்தார்கள்.

காலங்கள் உருண்டோடின. குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் வாக்குறுதியளிப்பார்கள். பின்னர் அது நிறைவேற்றப்படுவதில்லை.

இவ்விரண்டு கிராமங்களிலுமுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் குடிநீர்ப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காக 1965ம் ஆண்டளவில் அமரர் டட்லி சேனநாயக்காவின் தலைமையிலிருந்த தேசிய அரசாங்கத்தினால் குழாய் நீர் விநியோகத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அக்கால உள்ளூராட்சி அமைச்சராகவிருந்த எம். திருச்செல்வம் அவர்களால் தண்ணீர்த் தொட்டியும் குழாய்நீர் விநியோகமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குடிதண்ணீர்பெறுவதில் நீண்டகாலமாக பல இன்னல்களை அனுபவித்துவந்த நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்புக் கிராமங்கள் தங்களுக்கு இருந்து வந்த கஷ்டங்கள் குறைந்து விட்டன என்று குதூகலித்தன. நீண்ட கால கனவு நனவாகிவிட்டதென்று ஆண்களும், பெண்களும் ஆனந்தமடைந்தனர். ஆனால் காலம் செல்லச் செல்ல மக்கள் சனத்தொகை பெருக குழாய் நீர் விநியோகம் போதாமையேற்பட்டது.

நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு கிராமங்களில் 36 தண்ணீர்த் தூண்களுடன் ஆரம்பிக்கப்பட்ட குழாய்நீர்த் திட்டம் சிலர் மேலதிகமான தண்ணீர்த் தூண்களை எழுப்பியதால் குழாய்களுக்குத் தண்ணீர்வரும் வேகம் குறைந்தது. பாதுகாப்பின்மையால் திருடப்பட்டும், பழுதடைந்தும் போனது. இக்கிராம மக்கள் மீண்டும் குடிதண்ணீருக்காக கஷ்டப்படத் தொடங்கினார்கள்.

1977ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கல்முனைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக ஜனாப். ஏ.ஆர். மன்சூர் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்.

நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு பள்ளிவாசல், கோயில் நிர்வாகிகளும் பொது அமைப்புகளும் சென்று குடிதண்ணீர்ப் பிரச்சினையை எடுத்துரைத்தனர். அன்றைய சந்திப்பில் கலந்து கொண்ட இரு கிராமத்தவர்களிடமும் தன்னுடைய பாராளுமன்றப் பதவிக்காலத்துள் இக்குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்துத் தருவதாக ஜனாப். ஏ.ஆர். மன்சூர் அவர்கள் வாக்குறுதியளித்தார்.

ஜனாப். ஏ.ஆர். மன்சூர் அவர்கள் நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு மக்களின் குடிநீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு தன்னால் முடிந்த நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொண்டார். தேசிய நீர்வழங்கல் அதிகார சபையின் உயர் அதிகாரிகளுடன் அடிக்கடி கலந்துரையாடல்களை நடாத்தி அவர்கள் அளித்த ஆலோசனைகளின் பெயரில் இயங்கிக் கொண்டிருந்த குழாய்நீர் விநியோகத் திட்டத்தை புனருத்தாரணம் செய்வதற்கும், பம், மோட்டார் போன்றவற்றை திருத்துவதற்கும் தேவையான அளவு பணத்தினைத் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து கொடுத்தார். இவ்வாறு இக்கிராமங்களின் குடிநீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்கு பலவிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

1989ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐ.தே. கட்சியானது பிரேமதாசா அவர்களின் தலைமையில் இந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றுக்கொண்டது. இவ்வாட்சியில் ஆர். பிரேமதாசா அவர்களின் அன்புக்கு உரியவராக ஜனாப்.ஏ.ஆர்.மன்சூர் அவர்கள் இருந்ததால் இவரை அமைச்சரவை அமைச்சராக்கி உயர்ந்த அந்தஸ்தும் வழங்கப்பட்டது. இவ்வமைச்சர் பதவியைப் பாவித்து ஜனாப். ஏ.ஆர். மன்சூர் அவர்கள் அவுஸ்திரேலியா அரசாங்கத்தினதும், இலங்கை அரசாங்கத்தினதும் நிதியினைக் கொண்டு கிட்டத்தட்ட 49 கோடி ரூபாய் செலவில் கல்முனைக் குடிநீர்த் திட்டம் ஒன்று ஒப்பந்தம் செய்யப்பட்டு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, மணற்சேனை, கல்முனை நகர் ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு 51 கிலோ மீற்றர் தூரம் கொண்டதாக இக்குடிநீர்த் திட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. தங்களின் காலடிக்கு தண்ணீர் வந்து விட்டது. நீண்டகாலமாக குடிதண்ணீருக்காக நாம் பட்டுவந்த கஷ்டங்கள் தீர்ந்து விடப்போகின்றது என்று நினைத்த இக்கிராம மக்களில் சுமார் 25% மானவர்கள் தொடர்ந்து கவலையோடு தற்போது கண்ணீர் வடிக்கின்றார்கள். இக்கிராமங்களிலுள்ள சில முக்கிய வீதிகள் திடீரென வெட்டப்பட்டு அது கல்முனைக்குடி, சாய்ந்தமருது கிராமங்களுக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளது.

நற்பிட்டிமுனை முஸ்லிம் பகுதியில் பழைய தோம்புதோர் வீதி, கிறவல்குழிவீதி, மையவாடி வீதி, லெவ்வை வீதி, ஏ.பி.சி. வீதி, மத்ரஸா வீதி, பழைய விதானையார் வீதி என்பனவும் நற்பிட்டிமுனைத் தமிழ் பகுதியில் , பாடசாலை வீதி, குளக்கட்டு வீதி, கோயில் பின்புற வீதி, என்பனவும் சேனைக்குடியிருப்பில் கிறவல் வீதி, மேட்டுவட்டை வீதி, மனேஜர் வீதி, நாகாத்தை வீதி போன்ற வீதிகளும் நீர் வழங்கல் வடிகால் அபிவிருத்திச் சபையினரால் அளந்து மதிப்பிடப்பட்ட போதிலும், வேலைகள் ஆரம்பமாகும் வேளையில் இவ்வீதிகள் மறைமுகமாக துண்டிக்கப்பட்டு வேறு கிராமங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. இந்த அநியாயத்தைச் செய்தவர்கள் எவராகவிருந்தாலும் கண்டிக்கப்பட வேண்டியவர்களாவர். இக்கிராமங்களிலுள்ள ஒரு பகுதி மக்கள் குடிநீரைப் பெற்று மகிழ்ச்சியோடு வாழ, மற்றைய மக்கள் குடிநீருக்காக கஷ்டப்படுவதை நல் இதயம் படைத்த எந்த மனிதனும் சகித்துக் கொள்ள மாட்டான்.

நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்புக் கிராமங்களில் குடிநீர் பெறுவதில் புறக்கணிக்கப்பட்ட வீதிகளில் வாழும் மக்களின் அவல நிலையைப் பற்றி அமைச்சர்களான நிமல் சிறிபால டீ சில்வா, எம்.எச்.எம். அஷ்ரஃப் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவரப் பட்டுள்ளது.


எனவே நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு கிராமங்களில் தற்போது நடைபெற்று வரும் குழாய்நீர்த் திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ள வீதிகளில் வாழும் ஏழை மக்களின் நலன்கருதி மேற்கூறப்பட்ட வீதிகளிலும் குடிநீர்த் திட்டத்தினை அமுல்படுத்தி இம்மக்களின் தண்ணீர்த் தாகத்தை தீர்க்க அமைச்சர்கள் நடவடிக்கை மேற்கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நடவடிக்கை, கல்முனைக் குடிநீர்த் திட்டக் கொந்தராத்துக்காரர் இத்திட்டத்தினை முடித்து வெளியேறுவதற்கு முன்னர் செயற்படுத்துவது சாலச்சிறந்ததாகும்.

*ஏ.ஏ.கபூர்*
*பிரதேச சபை உறுப்பினர்*
*கல்முனை.*

# ரிஷிமூலம் ,நதிமூலம் பார்க்க வேண்டாம்

அண்மையில் சரிநிகர் ஜன.25 பெப்.07 1996 இதழில் ஓட்டமாவடி நௌபல் அவர்கள் ''கிழக்கு யானைகளிடமிருந்து விடுதலை தேவை'' என்ற தலைப்பிலான சிறு விமர்சனத்தைப் படித்தேன். நன்றாக எழுதியுள்ளார். அஷ்ரஃப் மட்டும் குறுகிய காலத்துக்குள் நடாத்திய சூதாட்டம் மட்டுமே இவரது கண்ணில் பட்டு களிக்கிறது தவிர, அவரால் சொல்லப்பட்ட ஓட்டமாவடி, வாழைச்சேனை, மீராவோடை மக்கள் வாக்களித்து தெரிவுசெய்த அமைச்சர் தேவநாயகம் பல முஸ்லிம் கிராமங்களுக்குச் செய்த சூதாட்டம் அறவே அவருக்குத் தெரியாது. உதாரணம் அக்கரைப்பற்றில் கருங்கொடித்தீவு, ஆலயடிவேம்பு பிரதேச சபைப் பிரிவில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும். ஓட்டமாவடி வாழைச்சேனை மக்கள் ஒரு பாராளுமன்ற பிரதிநிதியை இழந்திருக்கலாம். ஆனால், அக்கரைப்பற்று முஸ்லிம்களோ அவர்களது ஆயுட்கால பொருளாதார வளங்களை இழந்துள்ளதை நௌபல் அறிவாரா? 17 வருடங்களாக ஐ.தே.க. தரகர்களால் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டது ஓட்டமாவடி, வாழைச்சேனை, மீராவோடை முஸ்லிம் கிராமங்கள் மட்டுமல்ல கிழக்கிலுள்ள முழு முஸ்லிம் கிராமக்களும் தான்.

அஷ்ரஃபின் விவாத திறமையால் மூன்று கிராமங்கள் பாதிக்கப்பட்டதாகவும் அதனால்தான் அவருக்கெதிரான நம்பிக்கையில்லாத்தீர்மானத்தன்று ஓட்டமாவடியில் மட்டும் கடையடைப்புச் செய்யவில்லையெனவும் வழமையான அலுவல்கள் நடைபெற்றது என்றும் கூறுகின்றார் நௌபல். இது உங்கள் ஊர் மக்கள் செய்த கெட்டித்தனம் அல்ல. உங்கள் ஊர் மக்களை ஏனைய ஊர் மக்கள் புரிந்து கொள்வதற்காக இடப்பட்ட அடையாளமே ஆகும்.



முஹம்மது தம்பிக்கு மட்டும் வாகனம் வழங்கவில்லை என்பது உங்கள் முடிவு. முஹம்மது தம்பி தனக்கு வாகனம் தேவையென்று தலைவரிடம் சொல்லியிருக்கலாமல்லவா? ஏன் முஹம்மது தம்பிக்கு வாகனம் வழங்கவில்லை என்பதை தெளிவாக அவர் மூலம் அறிந்து கொள்ளுங்கள்.

எதிர்கால சந்ததியினரின் நிம்மதியான வாழ்க்கையின் பெயரால் கேட்கிறோம். எங்கள் கிராமம் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்களால் இன்னமும் சூதாடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதிலிருந்து விடுதலையையும் விமோசனத்தையும் எங்கள் கிராமத்துக்கு பெற்றுத் தாருங்கள். என்று எழுதியுள்ளார் நௌபல்.

கடந்த பிரதேச பொதுத்தேர்தல்களில் உங்கள் பகுதிகளில் ஐ.தே.க. வாக்கு வேட்டையை முன்னாள் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா அவர்களால் அம்பலத்துக்கு கொண்டுவந்ததும் தற்போதைய ஜனாதிபதி, விசாரணைக்காக ஆணைக்குழு நியமித்துள்ளதும் விளக்கிக் காட்டுவது எதனை என்று உங்களுக்குத் தெரியாதா? ஐ.தே.க. வின் கடந்த கால செயற்பாடுகளிலிருந்து தெளிவு கண்டுள்ள நீங்கள் இதை அறியவில்லையா?

கிழட்டு யானைகளுக்காக கூலிக்கு மாரடித்து அஷ்ரஃபுக்கு கரி பூச நினைத்த நீங்கள் அஷ்ரஃப்பின் வாதத் திறமையை மட்டுமல்ல அவரது துணிச்சலான செயற்பாடுகளைக் கண்டும் கிழட்டு யானைகளை விரட்ட சரியான ஆள் அவர்தான் என்பதாக உணர்ந்துள்ளீர்கள். ஆனால் அஷ்ரஃப் 1989ம் ஆண்டே கிழக்கிலிருந்து கிழட்டு யானைகளை விரட்டி விட்டார். உங்கள் பகுதியில் அடைக்கலம் கொடுத்து அனுபவிக்கின்றீர்கள். உங்கள் ஊர் மக்கள் செய்த தவறு அது. கடந்த பிரதேச சபைத் தேர்தல்களிலும் உங்கள் முடிவு அதுவாகவே காணப்பட்டது.

இவ்வளவு காலமும் அஷ்ரஃப்பை விமர்சித்த நீங்கள் இவை அவரால்தான் செய்யப்பட வேண்டுமென்பதை ஒத்துக்கொண்டது உங்களுக்கு காலம் கடந்து பிறந்த ஞானம் மாதிரியே! ஆகவே கிழட்டு யானைகளை விரட்டுவதற்கு ஊர்மக்கள் திரண்டு நடவடிக்கை எடுக்க நீங்கள் உங்களால் இயலுமான பங்களிப்பைச் செய்யுங்கள்.

ரிஷி மூலத்தையோ, நதி மூலத்தையோ திரும்பிப் பார்க்காதீர்கள். அஷ்ரஃப்பின் கடந்தகாலத்தை அசை போட வேண்டாம். நிகழ்காலத்தை அவதானியுங்கள். பிழைகள் காணப்படின் அதைச் சுட்டிக் காட்டி நிவாரணம் கற்றுக் கொடுங்கள். நிச்சயம் உங்கள் ஆலோசனைகள் நல்லதாகக் காணப்பட்டால் அதையும் அஷ்ரஃப் ஏற்பார்.

*எம்.ஐ.எம். கபீர்*
*அக்கரைப்பற்று - 1*

## தேசிய விருது

முட்களின் மேல் நடப்பது போலவும்
வெறிச்சோடிய சூன்யத்திற்குள் இருப்பது போலவும்
வினாடிகள் ஒவ்வொன்றும்
ஒரு பயங்கரம் வந்து நகர்வது போலவும் ஆன
வடபுல வாழ்க்கை!
ஷெல்லடித்த காயங்களில்
கட்டட உடல்கள் சிதைந்து நிற்க
பெண்மை பலாத்காரமாய்ப் பறிக்கப்பட்டும்
வாழ்க்கை எல்லா விதத்திலும் ஒடுக்கப்பட்டும்
இன்னும்-
மனித உணர்வுகள் அடக்கப்பட்டும் இருக்கும்
இதை விட மரணம் மேலானது என
நினைக்க வைக்கும்!

உழைத்துக் களைத்து வியர்த்து
அமைத்த ஆரோக்கியமான மண்ணும்
அதன் மைந்தர்களும் கேள்விக்குறிகளாய்
இது உரிமைப்போராட்டங்களுக்கான
தேசிய விருது என்றால்
நாளை-
மற்றைய சிறுபான்மை இனமும்
கிழக்கில் இருந்து விருதுகள் பெறுவர்!


பாருங்கள்!
வெறும் பார்வையாளர்களாய் நிற்கிறோம்!
நாமும் நாளை
சொந்த மண்ணில் சோகம் சுமப்பதற்காய்!

ஆவா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தத்துவக் கோளாறு

நான் தொடர்ந்து 3,4 வருடங்களாக 'சரிநிகர்' வாசித்து வருபவன். தாங்கள் மாற்றுக் கருத்துக்களுக்கு கொடுக்கும் பண்பு பாராட்டத்தக்கது. டானியலும் சாதியமும் - நினைவரங்கக் குறிப்புகள் என்ற செய்தி தொடர்பாக சில கருத்துக்களை எழுதுகிறேன். இதற்கு முன்பு சி. சிவசேகரம் ''டானியலின் மார்க்ஸியமும், தலித்தியமும்' என்றொரு கட்டுரை எழுதியிருந்தார். அது தொடர்பாக ஏற்கெனவே எழுதிய பதிலுரையையும் இணைத்துள்ளேன். முடியுமாயின் பிரசுரிக்கவும். தெளிவான கருத்துக்களைப் பரிமாற இது உதவலாம். இனி விஷயத்திற்கு வருகிறேன்.

''டானியலும் சாதியமும்'' - டானியல் நினைவரங்கக் குறிப்புக்கள் என்ற தலைப்பில் எம்.எஸ். இங்கர்சால் எழுதிய கட்டுரையில்' 1964ம் ஆண்டு குருஷேவ் தலைமையை நிராகரித்த சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவில் உருவாக்கப்பட்ட தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தில் முக்கிய பங்காற்றினார் டானியல் என்பதை சரியாகக் குறிப்பிட்டு எழுதியது மிகச் சரியானது. அன்தனி ஜீவாவினால் இது 'தவறுதலாக' விடப்பட்டிருக்க நியாயம் இல்லை. அவர் சார்ந்த கட்சியின் தத்துவக் கோளாறு அது.

அடுத்து ந. ரவீந்திரன் என்பவர் ''அவர் சாதியத்திற்கு அளித்த முக்கியத்துவம் வர்க்கச் சிந்தனைக்கு அளிக்கவில்லை....'' என்று பேசியதாக எழுதியுள்ளார் இங்கர்சால். சாதி அமைப்பு என்பது உலகில் எங்கும் காணாத கொடுமையான அமைப்பு முறை. வடபகுதியில் உழைக்கும் மக்களில் பெரும்பாலான மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். (வீதாசார அடிப்படையில்) இவர்கள் எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பது ''சமூக ஆய்வாளர்'' ந.ரவீந்திரனுக்குப் புரியவில்லை என்பதும் சிரிப்புக்குரிய விடயம். வர்க்கப் பார்வை, வர்க்கப்பார்வை என்று கூறும் இந்த ஆய்வாளர்கள் தாங்களே ஒரு நாவல் எழுதிக் காட்டினால் எல்லோருக்கும் உதவியாக இருக்கும்.

டானியல் வர்க்கப் பார்வைக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. சாதியத்திற்கு முக்கியத்துவம் அளித்துள்ளார் என்பதில் இங்கர்சாலுக்கும் உடன்பாடு உண்டு. இக்கருத்துக்களுடன் ஏனையோரும் ஒத்துப்போகக்கூடியவர்களே. இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏற்கெனவே கேட்டு அலுத்துப்போன விஷயங்கள் இவை.

''இன்றைய யாழ்ப்பாண இயக்கங்களின்பலவீனமான போக்கிற்கு டானியலும் படைப்புக்களும் ஒரு காரணம்'' என்று கூறப்பட்டதை வாசித்து சிரிப்புத்தான் வந்தது.

60களில் நடைபெற்ற சாதியப்போராட்டம் தான் தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதம் ஏந்திப் போராடுவது சரியானது என்பதை உணர்த்தியது. அப்போராட்டங்களால் சிறிய அளவு பெற்றுக் கொண்ட உரிமைகள் தான் தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் இன்று ஈழவிடுதலை இயக்கங்களில்சேர உதவியது என்பது வரலாற்று உண்மையாகும். ஆக சாதியப்போராட்டம் தமிழர்கள் மத்தியில் இருந்த கீழ்த்தரமான முரண்பாட்டை ஓரளவு தளர்த்தியது எனலாம்.

சாதித்தமிழர்கள் ஐரோப்பாவில் வந்து மலசலகூடம், கோப்பை கழுவிய பின்பும் நாஜிகளிடம் ஓட, ஓட அடி வாங்கிய பின்னுமாவது இதை உணர்கிறார்களா? இன்னும் ஈழ இயக்கங்களால் திருமண விளம்பரங்களில் சாதி எழுதப்படுவது கண்டிக்கப்படுவதில்லை. இதைப்பற்றி இந்த 'அறிவுஜீவிகள்' சிந்தித்தால் டானியல் எவ்வளவு தூரம் சரியான பார்வையுடையவர் என்பது புரியும். அப்படியும் புரியவில்லை என்றால் இந்த 'அறிவுஜீவிகளுக்கு' உமாதேவி அம்மையாரைக் கொண்டு ''ஞானப்பால்'' கொடுக்க வேண்டும்.

தேசிய இன ஒடுக்குமுறையை பொறுத்தவரையில் யாழ்ப்பாண இடதுசாரிகளின் நிலைப்பாட்டிலிருந்து ஒரு முரண்பட்ட கருத்தினையே அவரது படைப்புக்களில் காணமுடிகிறது.... என்று எழுதும் இங்கர்சால் சிவசேகரத்தின் 'ஆய்வுடன்' ஒத்துப் போகிறார். இது இலங்கை புதிய ஜனநாயகக் கட்சிக்கு இன்னும் வலுசேர்க்கும் ஆய்வு முறை.

அது சரி 'யாழ்ப்பாணத்து இடதுசாரிகளில்' பலர் புலிகளின் ஆதரவாளராகி விட்டனர். சிலர் கொழும்பிலும் ''அரசியல்கடை'' விரித்து உள்ளனர். சிலர் மறைமுகமாக நடுநிலைநாடகம் போட்டு புலிகளை ஆதரிக்கின்றனர்.

'வாழ்க இவர்களது வர்க்கப்பார்வை.
வளர்க இவர்களது முற்போக்கு'

**தங்கரூபன்**
**டென்மார்க்**

## வெட்டப்பட்ட தலை

விமர்சனத்துக்கு விமர்சனம் என்ற கடிதத்தில் குறிப்பிட்ட விடயங்கள் அத்தனையும் உண்மையே என்றாலும் அது தலை வெட்டப்பட்ட உண்மையாகும்.

கட்டுரை அச்சடிக்கப்பட்ட தாள்கள் நான் கண்டிக்குப் புறப்படும் ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தபோதே எனது கைக்குக் கிடைத்தது. சஞ்சிகையின் பிரதி கூட்டம் தொடங்குவதற்கு சற்றுமுன்னர் தான் கிடைத்தது. இதனால் நான் மேலோட்டமாகவே கட்டுரைகளை மேய நேர்ந்தது. எனது பேச்சின் ஆரம்பத்திலேயே விமர்சனம் செய்யக்கூடிய அளவுக்கு கட்டுரைகளை நான் வாசிக்கவில்லை என்பதைக் குறிப்பிட்டு என் மேலோட்டமான மனப்பதிவுகளை மட்டும் கூறவுள்ளேன் என்று குறிப்பிட்டேன். இது தான் வெட்டப்பட்ட தலை. நண்பர் தர்சனின் கடிதத்திற்கு இத்தலையையும் பொருத்தி வாசிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**வ.ஐ.ச.ஜெயபாலன்**
**கொழும்பு.**

# நுனிப்புல் மேய்தல் தகுமோ?

கடந்த சரிநிகர் 92ம் இதழில் ''தமிழ் மக்களே நீங்கள் முட்டாள்கள் என நாம் நினைக்கிறோம்'' என்று கொழும்பு தமிழ்க் கட்சிகள் ஏன் அறிக்கை விடக்கூடாது என வினவி அக்கட்சிகளின் கடந்த கால, நிகழ் கால, செயற்பாடுகளை விமர்சித்திருந்த அரசியல் விமர்சகர் டி.சி. அவர்கட்கு ஓர் சபாஷ்.

அவரது கேள்விக்கணை நியாயமானது. ஆனால் இச்செயற்பாடுகளின் மூலவேர்களை வெகுசாமர்த்தியமாய் மறைத்து வெறும் நுனிப்புல் மேய்வது தகுமோ?

தமிழர் பிரச்சினைக்கு தமிழீழமே தீர்வு என ஐந்து இயக்கங்களும் தீவிரமாய் இயங்கிய வேளையில் இயங்கங்களுக்குள் ஏற்பட்ட உட்கொலைகளின் விளைவே அவை பலவீனமாய்ப் போனதுவும், புலிகள் அவ்வியக்கங்களை சந்தர்ப்பம் பார்த்து அழித்தொழித்து தம்மை தனிக்காட்டு ராஜாவாக்கி கொள்ள கைகொடுத்ததுவும் வரலாறு என்பதும் எல்லோரும் அறிந்தது. இவ்வேற்று இயக்க அழிப்பின் இன்றைய விளைவே கொழும்பு தமிழ்க்கட்சிகளின் பரிதாப தோற்றம் என்பது ஒன்றும் இயக்க இரகசியமல்லவே.

விடுதலையின் பேரால் இயக்கங்களில் இணைந்திருந்த போராளிகள் எதிரியின் முகாமிற்குள்ளேயே சரணடையும் அளவிற்கு துரத்தியடித்தது புலிகள்தான். இயக்கங்களினுள் ஏற்பட்ட உட்கட்சிப் போராட்டம் கொலைக்கரங்களால் அடக்கி ஒடுக்கப்பட்டு இயக்கத்தலைமைகள் தம்மைக் காப்பாற்றிக்கொண்டன. இப்போது புரிகிறதா மக்களை முட்டாள்கள் என யார் முதலில் நினைத்தனர் என்று. புலிகள் நினைத்தனர் உட்கட்சிக் கொலைக்கும்பல்கள் நினைத்தன. இவற்றை எங்கிருந்து தொடங்க வேண்டுமோ அங்கிருந்து தொடங்கி விமர்சிக்க வேண்டும்.

முதலில் அன்றைய புலிகளின் விமர்சனங்களை விமர்சியுங்கள், தொடர்ந்து இயக்கங்களுக்குள்ளிருந்த அராஜக கும்பல்களை விமர்சிப்பதை விடுத்து பேச்சுவார்த்தை தீர்வு பொதி என்று பூச்சாண்டி காட்டவேண்டியதில்லை.

மேலும் இன்றைய போலி ஜனநாயகத் தேர்தல்களையும் அரசியல் பம்மாத்துகளையும் 1989-02-15 அன்று நடந்த இலங்கை இனவாத அரசின் பாராளுமன்றத் தேர்தலில் பங்கெடுத்த தமிழ்க்கட்சிகளே தொடங்கி வைத்தன.

இது கட்டுரையாளருக்கு தெரியாத விடயமாக இருக்கமுடியாது. இறுதியாக ஒரு வார்த்தை இது போன்ற அடிப்படை உண்மைகளை மூடி மறைக்கும் மேதாவித்தனமான அரசியல் விமர்சனக் கட்டுரைகளினால்தான் சரிநிகரின் பக்கங்கள் நிறைய வேண்டுமாயின் பேசாமல் ''ஜோதிட பலன்'' பக்கம் ஒன்றை ஆரம்பித்தால் இதை விட பிரயோசனமாக இருக்கும்.

**ஸ்ராலின் பாரிஸ்.**

## பாராட்டும் தவறும்

தங்கள் ஏப்ரல் 04-17-1996 'சரிநிகர்' இதழில் மு.த. பற்றிய நினைவுக்குறிப்பு கண்டு பெரிதும் மகிழ்வுற்றேன். மு. த இறந்து 28 வருடங்கள் ஆகியும் அவர் பற்றிய நினைவுக்குறிப்பெதுவும் இதுகாலவரை எந்தப்பத்திரிகையிலும் வெளிவந்ததுமில்லை. அவரைப்பற்றி ஈழத்தில் எவரும் எழுதியதுமில்லை. அந்த விதத்தில் முதன் முதலாக அத்தகைய ஒரு தேவையான காரியத்தைச் செய்த சரிநிகருக்கு எனது பாராட்டும் நன்றியும். மேலும் அந்நினைவுக்குறிப்பு எழுதிய நண்பர் மாலிக்கும் எனது நன்றிகள்.

மு.த. இறந்ததற்குப் பின்னர் வெளிவந்த நூல்களில் 'மெட்டிகள்' எனத் தவறுதலாக குறிப்பிடப்பட்டிருந்தது. அது மெட்டிகள் அல்ல. 'மெய்யுள்' என்றே இருக்க வேண்டும். அத்தோடு அவர் 'அருளிமொட்டு' என்றும் வேறொரு சிறுகதைத் தொகுதியும் வெளியிட இருந்தார். அதைத்தான் அவர் மெட்டிகள்' எனத் தவறாகக் குறிப்பிட்டிருந்தாரோ, தெரியாது.

**மு. பொன்னம்பலம்**
**கொழும்பு -06**

# கூவி விற்கும்கூலி உழைப்பு
## பற்றியொரு குறிப்பு

அண்மைக் காலமாக சரிநிகர் தாங்கி வரும் கருத்துக்கள் என்னில் பலமான தாக்கத்தை உண்டு பண்ணுவதை உணர்கிறேன். கொலன்னாவை எரிந்து கொண்டிருந்த போது அதன் எதிரொலியாக ஜெயகாந்தனும், ஸ்ரீகாந்தனும், கண்ணனும் சித்திரவதைப்பட்டுப்போய் இறந்த செய்தி என்னில் இடியெனத் தாக்கியது. அது போல அதற்குப் பிறகு வருகின்ற சரிநிகர் செய்திகள் இலங்கையின் எதிர்காலம் பற்றிய அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

இம்முறை (93வது இதழ்) கூவி விற்கும் கூலியுழைப்பு பற்றிய கட்டுரையொன்று என்னை கவனத்தில் ஆழ்த்தியது. அதன் விளைவாக எழுத முனைகின்ற அனுபவக் குறிப்புகள் இவை.

1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நுவரெலியாவில் ஒரு விவசாய பெருந்தோட்டம். உத்தியோகம் கிடைக்கும் வரை உழைக்கும் நோக்கத்தோடு ஓடிப்போனேன். உண்மையில் எம்மவர்கள் அங்கு எவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள் என்பதைக் காணக்கூடியதாக இருந்தது. காலை எட்டு மணிக்கு தலவாக்கலை, டிக்கோயா, பாமஸ்டன், நுவரெலியா, ராகலை போன்ற இடங்களில் இருந்தெல்லாம் இவ்வாறு நூற்றுக்கணக்கானவர்கள் விவசாய தோட்டங்களுக்கு வேலைக்குச் செல்கிறார்கள். காலை எட்டு மணி முதல் மாலை ஐந்து மணி வரை 150/= ரூபாய்க்காக எருமையை விட கூடுதலாக வேலைசெய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். எனக்கு முதல் நாள் பலவிதக் கனவுகள், கஷ்டமாகயிருக்குமோ எனும் அச்சம். அப்பப்பா அந்த அவஸ்தையை சொல்லவா வேண்டும். நிமிர்ந்து ஐந்து நிமிடம் ஓய்வெடுக்கவோ, உட்காரவோ விடாத முதலாளித்தனத்தை என்னவென்று சொல்வது? நம்பமறுப்பீர்கள், அன்று இரவு காய்ச்சல். வேலை செய்யாமல் இருந்து விட்டு வேலை செய்ததால் இவ்வாறு ஏற்பட்டு இருக்குமோவென எண்ணுவீர்கள். அப்படியல்ல விடயம். நான் ஏற்கெனவே விவசாயம் செய்து கொண்டிருந்தவன். அங்கு உண்மையில் மிகக் கடுமையாக உழைக்க வேண்டியேற்பட்டதன் விளைவேயிது என உணர்கின்றேன்.

பாவம் என்னோடு வேலை செய்த தோட்டத் தொழிலாளத் தோழர்கள். அவர்களின் கல்வியறிவின்மையும், அவர்களின் ஏழ்மையும் என்னைப் பார்க்கின்ற முதலாளியின் பார்வையில் இருந்து வேறுபட்டு இழிந்தவர்களைப் பார்ப்பது போல கவனிக்கின்ற தன்மை யாரையும் துக்கத்தில் ஆழ்த்தும். ஆக, பீடிகுடிக்கவோ, வெற்றிலைபோடவோ கூட அனுமதி மறுக்கப்படுகின்ற நிலை தொடர்கின்றது. அவர்கள் சிறு தவறு விடுகின்ற போது அடிக்கப் பாய்வதும் ஏசுவதுமான அடாவடித்தனங்கள் நடக்கின்றன. வளர்ந்திருக்கும் கிழங்குச் செடிக்கு மருந்து தெளிக்கும் போது ஓர் இலையில்தானும் பட்டிருக்கவில்லையாயின் முதலாளியார் முறைத்துக் கொண்டு பேசுவது கொடூரமாக இருக்கும். ஒரு நாளைக்கு ஏறத்தாழ முப்பத்தைந்து கொள்கலன்களாவது மருந்து தெளித்தல் அவசியமாக இருக்கிறது. ஆனால் தோட்டத்தில் (தேயிலை) எட்டு அல்லது ஒன்பது கொள்கலனே அடிக்க வேண்டியிருக்கும். இவ்வாறு மருந்து தெளிக்கின்ற போது எவ்வித பாதுகாப்பு அணிகலன்களும் வழங்கப்படுவதேயில்லை. இதனால் ஏற்படுகின்ற உடல் ரீதியான பாதிப்புக்களுக்கு எந்த விதமான நஷ்டங்களோ, வேறு நிவாரணங்களோ கொடுக்கப்படுவதற்கான ஏற்பாடுகளும் இல்லை. நான் இப்படி ஒரு நாள் பூராவும் அதேயளவு மருந்தினை தெளித்த போது என்தோள்கள் என்னிடம் இருக்கிறதா என எண்ணும்படியாக இருந்தது. முதலாளியம்மாவுக்கோ கொள்கலனை இறக்கி வைப்பதில் ஏற்படுகின்ற கவலையால் (நேரம் அநியாயமாகப் போகிறதே) தோளில் டாங்கி கிடக்கும் போதே பூவாளியில் மருந்து கொண்டுவந்து ஊற்றுவார். இவ்வாறு கஷ்டப்பட்டும் சாப்பாடு, தேனீரும் பாணும் பருப்புந்தான். சில நேரங்களில் வீட்டில் பயன்படுத்தப்பட்ட தேங்காய்ப் பூவை சம்பலாக்கித் தருவதும் உண்டு.

அது போல தோட்டத்திற்கு தண்ணீர் ஊற்றும் போது ஏறத்தாழ ஆயிரம் அடிகொண்ட நீர் குழாய் இழுத்தெடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்படும். இழுத்துப் பார்த்தவர்களுக்குத் தெரியும்; எவ்வாறு நெஞ்சுவலியேற்படும் என்று. நான் ஒரு மாதிரி கஷ்டங்களில் இருந்து தப்பித்துக்கொண்டேன். ஆனால், என்னோடு வேலை செய்த தோழர்கள், தொழிலாளர்கள் மற்றும் இதையே வாழ்க்கையின் ஆதாரமாகக் கொண்ட ஏனையோரின் நிலையை இவ்வாறே தொடர விடுவதா அல்லது வேறு வழி காண்பதா?

எனது யோசனை இதுதான். இது மலையகத் தலைவர்களுக்கானது. தலைவர்களே, இவர்களிடந்தான் நீங்கள் வாக்குக் கேட்டுப் போகிறீர்கள். இவர்கள் தான் உங்களை உயர்த்தியவர்கள். இவர்கள் தான் உங்கள் டாம்பீக வாழ்க்கைக்கு வழி சமைத்தவர்கள். தயவு செய்து இன்று தொழிற்சங்கங்களை நடத்துவது போல அல்லாமல் இவர்களின் நலன்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க முன் வாருங்கள். இவர்களை ஸ்தாபனப் படுத்தி அவர்களின் சம்பளம், வேலை நேரம், உணவு, போன்றவற்றினைத் தீர்மானிக்க முயல்வதுடன் அவர்களின் உடல் உள நலன்களையும் பாதுகாக்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். அவ்வாறு தவறும் பட்சத்தில் அவர்களுக்கான பாதுகாப்பை அவர்களே தேடிக்கொள்வார்கள். அதன்போது நீங்கள்தான் பாதிக்கப்படுவீர்கள்.

***ச. பன்னீர்***
***கந்தப்பளை***

# இருட்டடிப்பு ஏன்?

கலேவா'; பின்லாந்து இனத்தவரின் பெயர். இவ்வினத்தவர் வாழ்ந்த இடத்தின் பெயர் 'கலேவலா'. கிழக்குப் பின்லாந்தையும் வடமேல் ரஷ்யாவையும் உள்ளடக்கிய 'கரேலியா' என்ற மாநிலத்தில் பல வருடங்களாகவே வாய் மொழியாக இருந்து வந்த பாடல்களை 'எலியாஸ் லொண்றொத்' சேகரித்துத் தொகுத்து வெளியிட்டார். அந்த நாளைய பின்னிஷ் மக்களின் நாகரீகம், சடங்குகள், மாந்திரீகம், போர் முறைகள் ஆகியவற்றை இந்தக் காவியத்தில் காணலாம். இது பின்னிஷ் மக்களின் பெரும் மதிப்பைப் பெற்ற உலக மகா இலக்கியமாகும்.

இதுவரை 36 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இக்காவியத்தை பின்லாந்து ஹெல்சிங்கி பல்கலைக்கழகத்திற்காக திரு. சிவலிங்கம் (உதயணன்) வசன நடையில் மொழிபெயர்த்து இருந்தார். இதை முழுக்க முழுக்க மரபு வழியான அகவல் யாப்பில் கவிதையாக்கியது திமிலைத் துமிலன்.

ஆனால்!

'கலேவலா' தமிழ் மொழிபெயர்ப்பின் அட்டையில் திமிலைத் துமிலனின் பெயர் இல்லை. தமிழ் மொழிபெயர்ப்பு ஆர். சிவலிங்கம் என்றுமட்டுமே உள்ளது. முன்னுரையில் சிவலிங்கத்தின் கவிதைவரிகளை மெருகேற்றியவர் என்று சிலவரிகளில் திமிலைத்துமிலனின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மட்டுமன்றி, சிவலிங்கத்துடனான ரூபவாஹினிப்பேட்டியில், கூட அவர் திமிலைத் துமிலன் பற்றி ஓரிரு வார்த்தை தானும் தப்பித்தவறியும் கூறவில்லை.

இறுதியாக கலேவலா வெளியீட்டு விழாவுக்கு கூட கவிஞர் திமிலைத்துமிலனுக்கு அழைப்பில்லை. அவரை உதயணனுக்குக் காட்டிவிட்ட அன்புமணிக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது.

ஆனாலும், கவிஞர் திமிலைத்துமிலனின் மணிவிழா மலரில் உதயணனே கலேவலாவின் தமிழ் கவிதையாக்கம் திமிலைத் துமிலனுடையது என்றும், இதற்காய் எதிர்கால உலகம் அவரைப் பாராட்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஏனிந்த முரண்பாடு? இந்த இலக்கிய இருட்டடிப்பின் மூலம் உண்மையில் உழைத்த கவிஞரை உதாசீனஞ் செய்து அவரின் உழைப்பை உறிஞ்சிக் கொழுத்த சுயநலத்தனத்தை தமிழ்ச் சங்கம் அறியுமா? பல்கலைக்கழக உயரிடத்தார் அறிவார்களா? இதற்கு என்ன செய்யப் போகிறார்கள்?

***ஈார்வில் - சற்குணம்.***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA.

# பொய்யும், மெய்யும்!

"யாழ் குடாநாட்டுப் பகுதியை பாதுகாப்புப் படையினர் முற்றாக தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விட்டார்கள்" என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. வலிகாமப் பகுதியிலிருந்து "புலிகளால் விரட்டப்பட்ட' மக்களை விடுவிக்கும் பணியில் வெற்றி பெற்ற படையினர் இப்போது அவர்களை அவர்களது சொந்த வீடுகளுக்கு செல்ல வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர் என்றும் பாரிய இழப்புக்கள் எதுவும் இன்றி குடாநாடு கைப்பற்றப்பட்டு விட்டதாகவும் கிளாலியினூடாக தப்பியோட முனைந்த புலிகளது பதினெட்டுப் படகுகள் சேதமாக்கப்பட்டு அதிலிருந்த புலிகள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்றும் அரச செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தத் தாக்குதலின் போது காயமடைந்த, கொல்லப்பட்ட மக்களின் தொகை பற்றிய அமைச்சின் அறிவிப்புகளைப் பார்த்தால், அங்கு ஒரு யுத்தம் நடந்ததாகவே நம்ப முடியாமல் இருக்குமளவுக்கு அவை சொற்பமாக உள்ளன. அதே வேளை, வானத்திலிருந்து குண்டுகள் வீசப்பட்டதும், டாங்கிகளினால் ஷெல் அடிக்கப்பட்டதும் சரமாரியாக நடந்திருப்பதை அச்செய்திகளினூடு ஊகிக்கக் கூடியதாகவுள்ளது. இவ்வளவு பெரியதொரு நடவடிக்கை உயிர் சேதங்கள் அதிகளவில் இல்லாமல் நடந்திருப்பது உண்மைதான் என்றால், இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புக் படைகள் உண்மையில் பாராட்டப்பட வேண்டியவைதான்.

ஆனால், அரசாங்கத்தின் நடவடிக்கைகளோ புத்தி பேதலிக்காத எவராலும் இவற்றை முழுமையாக நம்பிவிட முடியாது என்பதையே காட்டுகின்றன. நாடு பூராவும் அவசரகால சட்டத்தை கொண்டுவந்தது முதல், தொடர்பு சாதனத் தணிக்கையினை மீண்டும் அமுல் செய்தல், யுத்தம் நடக்கும் பிரதேசங்களுக்கு தொடர்பு சாதனவியலாளர்கள் செல்ல அனுமதிக்காமை போன்ற நடவடிக்கைகள் தகவல்களுக்காக முற்றுமுழுதாக அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சிடமே தங்கியிருக்க வேண்டிய நிலை என்பன அரசாங்கம் சொல்லும் விடயங்களை முற்றாக நம்பிவிட முடியாது என்பதையே காட்டுகின்றன.

ஏற்கெனவே நவாலி தேவாலயத் தாக்குதலின் போது அங்கு மக்கள் கொல்லப்படவே இல்லை என்றும், நாகர் கோவிலில் கொல்ப்பட்டவர்கள் புலிகளே என்றும் செய்தி வெளியிட்ட அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களை கடுங்கோபத்துடன் எச்சரிக்கையும் செய்த இந்த அரசாங்கம் இப்போது சொல்வது மட்டும் உண்மையாக இருக்கும் என்று நம்புவது எப்படி? பொய்யான தகவல்களை வெளியிடுகிறார்கள் இங்குள்ள மாற்றுப் பத்திரிகையாளர்கள்' என்று அண்மையில் ஜனாதிபதி சந்திரிகாவே தெரிவித்துள்ளார். யுத்த நிலைமை சம்பந்தமாக பொய்யான தகவல்கள் சொல்லப்படுவதே தணிக்கைக்கான பிரதான காரணம் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த மாற்றுப் பத்திரிகையாளர்கள் என்ன பொய்களை இதுவரை கூறியிருக்கிறார்கள் என்பதை ஜனாதிபதி அவர்கள் வசதியாக சொல்லாமல் விட்டுவிட்டார்கள்.

ஒரு வகையில் அவர்கள் சொன்னது பொய் என்றால் அந்தப் பொய்கள் எம்பிலிப்பிட்டிய படுகொலைகள் பற்றிய பொய், லலித் படுகொலை பற்றிய பொய், உடுகம்பொல விவகாரம் சம்பந்தமான பொய், போன்ற பொய்களையே சொல்ல வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்தப் பொய்களால் தான் பிரேமதாசவுக்குப் பதில் சந்திரிகா ஒரு மாற்றுத் தீர்வாக மக்கள் மத்தியில் பிரபலமானார். ஜனாதிபதி பதவியையும் பெற்றுக் கொண்டார். ஜனாதிபதிக்கு தாம் பதவிக்கு வரும்வரை இந்தப் பத்திரிகையாளர்கள் பேசுவதெல்லாம் பொய்யாகத் தெரியாதது எப்படி? அப்போதெல்லாம் இவர்கள் பொய் கூறுகிறார்கள் என்று அன்றைய ஜனாதிபதி பிரேமதாச கூறிய போது சந்திரிகா அவர்கள் ஏன் மௌனமாக இருந்தார்? உண்மையில் பொய் சொன்னவர் அன்றைய பிரேமதாசவா அல்லது பத்திரிகையாளர்களா என்பதை இப்போது நாடு தெளிவாகப் புரிந்து கொண்டு விட்டது.பாவம் சந்திரிகா.இப்போது தான் சொல்கிற பொய்கள், அவற்றை எவ்வளவு தான் அதிகார பலத்தால் 'மெய்' என்று அடித்துக் கூறினாலும் பத்திரிகையாளர்களை பொய்யர்கள் என்று கூறினாலும் அவர் கூறிய பொய்கள் ஒவ்வொன்றாக வெளியே வர ஆரம்பித்துக் கொண்டிருக்கின்றன என்பதை அவர் காணவில்லைப் போலும்!

எந்த ராணுவ அதிகாரிகள் இந்த அரசை கவிழ்க்க சதிசெய்ததாகவும்,படுகொலைகளுடன் சம்பந்தமானவர்களாகவும் குற்றம் சாட்டப்பட்டார்களோ, அதுவும் இதே ஜனாதிபதியால் பூடகமாக தெரிவிக்கப்பட்டார்களோ, அவர்கள் இப்போது எங்கே? அவர்கள் இந்த அரசாங்கத்தினால் பதவி விலக்கப்பட்டு விட்டார்களா? அல்லது விசாரணை தானும் நடக்கிறதா? ஊழலை ஒழிப்பதாக கூறிய ஜனாதிபதியின் அமைச்சரவையின் ஊழல்கள் பற்றி பேசப்பட்டதே அவற்றுக்கு என்ன நடக்கிறது? ஜனநாயக மரபு பற்றிப் பேசி, பலருடைய கைதட்டலுக்கு மத்தியில் ஜனாதிபதி முறையை ஒழிக்கப்போவதாக சூளுரைத்தாரே அந்தப் பொய் என்ன ஆனது? 50 வாக்குகளும் 60 வாக்குகளும் பெற்றவர்கள் தமது கட்சிக்கு ஆதரவாளர்கள் என்பதால் எம்.பிக்களாகி இருக்கிறார்களே, இந்த ஜனநாயகத்தையா ஜனாதிபதி அன்று ஜனநாயகம் என்று பொய் சொன்னார்? யுத்தம் வேண்டாம்! சமாதானம் வேண்டும் என்று கூறினாரே அந்தப் பொய்க்கு என்ன நடந்தது? இன்று முழுத் தமிழர்களையும் விஜேதுங்க பாணியில் புலிகளென வாய் கூசாமல் சொல்கிறாரே அது எந்த வகையிலான பொய்? ஆயுத இறக்குமதியாளர்கள் தான் யுத்தத்தை விரும்புவர் என்று ஒரு தனியார் நிறுவனத்தை சாடினாரே அவர் இப்போது இறக்குகின்ற ஆயுதங்களுக்கு என்ன கணக்கு? எல்லாவற்றிற்கும் மேலாக, உலகச் சந்தையில் மாவிலை உயர்ந்தாலும் கூட, யுத்தம் மற்றும் படாடோப செலவுகளை தவிர்த்தால் பாணை ரூ 3.50 க்கு கொடுக்கலாம் என்றாரே இப்போது அதற்கு என்ன நடந்தது? பாணின் விலையை ரூ 5.50 ஆக அதிகரித்ததற்கு உலகச்சந்தை விலையை மட்டும் காரணம் காட்டுவது நியாயமா? யுத்தமும் படாடோபமும் என்ன ஆனது?

ஆக, பொய் சொல்வதில் டாக்கடர் பட்டமே வாங்கக் கூடிய அளவுக்கு தகுதி வாய்ந்த ஜனாதிபதி பத்திரிகையாளர்களை பொய்யர்கள் என்பதைவிட வேறு வேடிக்கை என்னவாக இருக்க முடியும்?

சரி, விடயத்துக்கு வருவோம்.

எமது பிரச்சினை இதுதான்:

வடக்கிலே நீங்கள் செய்ததாகச் சொன்னவற்றில் பொய் எவ்வளவு, உண்மை எவ்வளவு?

அரசியல் தீர்வுத்திட்டம் நடைமுறைக்கு வரும் என்ற உங்களது வாக்குறுதியில் உண்மை எவ்வளவு பொய் எவ்வளவு?

அரசியல் தீர்வு முயற்சியில் உங்களுக்கு மனப்பூர்வமான விருப்பு இருப்பதாக சொல்வதில் உண்மை எவ்வளவு பொய் எவ்வளவு?

புலிகளிடமிருந்து தமிழ் மக்களை விடுவித்துள்ளதாக சொல்கிறீர்களே, அவற்றில் எவ்வளவு உண்மை இருக்கிறது?

பொய் கூட ஒரு கலைதான். அதைச் சொல்வதற்கு உங்களுக்கு நன்றாகவே தெரிந்திருக்கிறது. ஆனால் செய்தித் தணிக்கை, அவசரகாலச் சட்டம், தொடர்புசாதனவியலாளருக்கு வடக்குக்கு செல்ல அனுமதி மறுப்பு என்பவற்றை அகற்றிவிட்டு உங்கள் திறமையை மெய்ப்பியுங்கள். அப்போதுதான் உங்கள் திறமைக்கு உண்மையான அர்த்தம் இருக்கும்.

அல்லாத போது, தகவல்கள் வெறுமனே பொலிஸ்நிலைய வாக்குமூலமாக, உண்மைக்குப் புறம்பானதாகவே இருக்கும் என்ற உண்மையை மக்கள் நன்றாகவே தெரிந்து வைத்துள்ளார்கள்.

எனவே, நீங்கள் 'மெய்' பேசுபவர் என்ற 'பொய்'யை ஒருபோதும் நம்பவைக்க முடியாது. உங்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்கள்!

# கிழக்கு: புலிகள் கொடுக்கும் நெருக்கடி

புலிகளுக்கெதிரான அரசின் போரில் குடாநாட்டைக் கைப்பற்றிக் கொண்டதாகக் கூறிக் கொள்ளும் அரசுக்கும் அரச படைகளுக்கும் கிழக்கில் பல் பகுதிகளில் புலிகள் தொடர்ச்சியாக சிறுசிறு தாக்குதல்கள் மூலம் நெருக்கடி கொடுத்து வருகின்றனர்.

அடிக்கடி நடக்கும் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் எதிரான போரில் கிழக்கில் பல கிராமங்கள் இருளடைந்து மக்களின்றி அன்னியப்பட்டுப் போய்க்கிடக்கின்றன.

மட்டக்களப்பின் அரசசிவில் நிர்வாகத்தை இல்லாதொழிக்க புலிகள் மெல்லமெல்ல நகரை நோக்கி வருகிறார்கள் என்றால் அதில் எந்த வியப்புமில்லை. நகரில் நாலைந்து மைல்களுக்கு அப்பால் அரசதிணைக்கள வாகனங்கள் செல்வதைக்கூடக் காணமுடியவில்லை.

படுவான்கரைப் பிரதேசம் புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் அல்லது ஏதோ ஓர் வகையான நிர்வாக முறைமைக்குள் இருப்பது அனைவரும் அறிந்த ஓர் விடயமே. அதேபோல் நகருக்குள் சில மைல்கள் தள்ளி வாழைச்சேனை வீதி, கல்முனை பிரதான வீதிகளிலும் புலிகள் சுதந்திரமாகவே உலாவுகிறார்கள். வரிவசூலிப்பிலும் ஈடுபடுகிறார்கள்.

இதுவரை காலமும் ரான்ஸ்போமர்கள் மட்டுமே தகர்க்கப்பட்டு வந்த மட்டக்களப்பில் இப்போது மின்கம்பங்கள் கூட அடியோடு சாய்க்கப்படுகின்ற சம்பவங்களும் ஆரம்பமாகியுள்ளது. சந்திவெளி, வந்தாறுமூலைப் பிரதேசங்களில் இதைக் காணலாம்.

ஏப்.20ம் திகதி எரிபொருட்களுடன் மட்டக்களப்பு சென்ற புகையிரதம் ஆறுமுகத்தான் குடியிருப்பில் தாக்குதலுக்குள்ளானது. இத்தாக்குதலில் ஆறு பொதுமக்கள் காயங்களுக்குள்ளானார்கள். ஆயிரக்கணக்கான லீற்றர் பெற்றோல் மண்ணெண்ணை என்பன தரையில் வழிந்தோடின.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து மட்டக்களப்பில் பெரும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவியது. உள்ளூர் போக்குவரத்து சேவையும்,

சிறுபோக விவசாயமும் கடும் பாதிப்புக்குள்ளானது.

இதைவிட தாக்குதலுக்குள்ளான புகையிரதத்துக்கு இராணுவத்தினர் தொடர்ச்சியான பாதுகாப்பு வழங்க அங்கு நிலை கொண்டதைத் தொடர்ந்து ஆறுமுகத்தான் குடியிருப்புப் பொதுமக்கள் எல்லோரும் மூட்டை முடிச்சுக்களுடன் உடனடியாக வீடுவாசல்களை விட்டு அயல் கிராமங்களுக்கு வெளியேறினர். இதனால் இக் கிராமம் வெறிச்சோடிய நிலையிலேயே காணப்பட்டது. அயலிலுள்ள மைலம்பாவெளி கிராம மக்களும் வெளியேறினர். இக்கிராமங்கள் 90க்கு பின்னரான காலங்களில் முஸ்லீம் ஊர்காவல் படையினராலும் அரச படைகளாலும் அடிக்கடி தாக்குதலுக்குள்ளான கிராமங்களாகும். ஆறுமுகத்தான் குடியிருப்பு, மைலம்பாவெளி போன்று கிண்ணையடி, மீராவோடை (தமிழ்) போன்ற கிராமங்களும் அரச படைகளின் அட்டூழியங்களால் நிர்மூலமாக்கப்பட்டு இன்னும் மக்கள் குடியேற அஞ்சியுள்ள இடங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

படையினரால் ஓட்டமாவடி, வெலிக்கந்தை போன்ற இடங்களில் பல மணித்தியாலங்களாகத் தடுத்து வைக்கப்பட்டு சோதனையிடப்பட்டு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளபடியால் மட்டக்களப்பு திருமலை வவுனியா போன்ற தூர இடங்களுக்கான பஸ் சேவையும் கடந்த 15ம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதைப்போல் கொழும்புக்கான பஸ் வண்டியும் இவ்விடங்களில் பல மணித்தியாலம் வேண்டுமென்றே தடுத்து நிறுத்தப்படுவதால் கொழும்பு வர இரவு பத்து மணிக்கு மேலாகி விடுகின்றது. இதனால் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் இளைஞர்களையும் யுவதிகளையும் பஸ்ஸிலிருந்து இறங்கியவுடன் பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்வதும் அடிக்கடி நடைபெறுகிறது.

இம்முறையும் இராணுவத்தினரின் கடுமையான கட்டுப்பாடுகளினால் சிறுபோக நெற்செய்கையும் பல்வேறு சிரமங்களை எதிர்

நோக்கவேண்டியுள்ளது. டீசல், விதைநெல், உரவகை, கிடுகு, உணவுப் பொருட்கள் கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது.

எரிபொருள் தட்டுப்பாட்டினால் படுவான்கரையின் பல பிரதேசங்கள் இருளில் மூழ்கியுள்ளதாக அங்கிருந்து வருவோர் எம்மிடம் நேரடியாகவே கூறினார்கள். இதைவிட மட்டக்களப்பு சிறைச்சாலை முகாமிலிருந்து அடிக்கடி மேற்கொள்ளப்படும் ஆட்லறி தாக்குதல்களினால் துண்டி, வவுணதீவுபிரதேச மக்கள் கடும் அச்சத்துடன் வாழ வேண்டியுள்ளது.

இத் தாக்குதல்களில் காயமடையும் பொது மக்கள் நகர வைத்தியசாலைக்கு வருவதற்கு இராணுவத்தினர் அனுமதிக்கிறார்களில்லை. இதையெல்லாம் விட சிறைச்சாலை முகாமிலிருந்து ஆட்லறித் தாக்குதல் நடாத்தப்படும்போது அருகிலுள்ள மட்டக்களப்பு பொது வைத்தியசாலை அதிர்வதையும் சிகிச்சை பெறும் நோயாளிகள் பதட்டமடைவதையும் காண்க்கூடியதாகவுள்ளது.

மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மிக அருகாமையிலேயே சிறைச்சாலை முகாமும் அமைந்துள்ளது. இத் தாக்குதலின் அதிர்வு கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் போன்ற நோயாளிகளுக்கு ஆபத்தானது என்கிறார் இங்கு பணிபுரியும் ஒரு டொக்டர் மிகவும் கவலையுடன்.

வாகரைப் பிரதேசம் குடாநாட்டைப் போல் மிகவும் அன்னியப்பட்ட ஓர் நிலையிலேயே உள்ளது. இங்கு அடிக்கடி ஷெல் தாக்குதல்கள், விமானக் குண்டு வீச்சுகள் இடம்பெறுகின்றன.

உணவுப் பொருட்களுக்கும், மருந்துப் பொருட்களுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது. போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. வாகரை தபாலகம், வைத்தியசாலை, ப.நோ.கூட்டுறவுச் சங்கங்கள், பிரதேச சபைக் காரியாலயம் என்பனவும் பல வீடுகளும் ஷெல் தாக்குதல்களினால் சேதமடைந்துள்ளன.

வாகரைக்கும் பொலநறுவைக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலுள்ள கரடிக்குளம் முகாமிலிந்தே வாகரையை நோக்கி தினமும் ஷெல் வீச்சுக்கள் நடத்தப்படுகின்றன. இக் கரடிக்குளம் முகாம் பொலநறுவை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. சென்ற ஞாயிற்றுக் கிழமையும் இப்பிரதேசங்களில் விமானப்படை விமானங்கள் குண்டுவீசின என்பது குறிப்பிடத்தக்கது.

வாகரையிலுள்ள அனேகமான மக்கள் இப்போது கதிரவெளி, பனிச்சங்கேணி பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

# திருமலை: மூன்று பேருக்கு மட்டும்

— பாவேகி.

அதிகாரப் பரவலாக்கலுக்கான யோசனைகளில் இழுபறி நடக்கும் இக்கால கட்டத்தில் கிடைத்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு நல்லவை எதுவும் நடந்து விடாதபடி எப்படியெப்படியெல்லாம் தடுக்கலாம் என்பதற்கு திருகோணமலையில் இயங்கும் முகாமைத்துவ நூலகமே சான்றாகும்.

மறைந்த பற்குணம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்நூலகத்தில் பத்தாயிரத்துக்கும் அதிகமான பெறுமதி வாய்ந்த பல்துறை நூல்கள் இருக்கின்றன. ஆரம்ப நாட்களில் இந்நூலகம் சகல மக்களுக்கும் வாசிக்கும் உரிமையை வசதியோடு வழங்கியிருந்தது.அரசாங்க, கூட்டுத்தாபன, வங்கி ஊழியர்களுக்கு இலகுவான முறையில் உறுப்புரிமை வழங்கி இரவல் கொடுக்கும் பகுதியையும் செவ்வனே நடத்தி வந்தது. அத்துடன் இந்நூலக மேல்மாடியில் உள்ள மண்டபம் அறிவுத் தாகமுள்ளோர் கூடும் கேட்போர் கூடமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

நிர்வாகம் மார்க்கண்டுவின் கைகளில் மாறியதும் நூலகத்துக்குப் பிடித்தது சனியன். உடனடியாக நூலகம் இழுத்து மூடப்பட்டது. பற்குணம் அமைத்த நூலகத்தை இயங்க விட்டால் பற்குணத்துக்கு புகழ் வந்து விடுமோ என்ற உள்ளார்ந்த அச்சத்தில் நூலகம் இயங்கக் கூடாது என்பதற்கான நியாயங்கள் தேடப்பட்டன.

நூலகம் மூடப்பட்டதால் பிரமுகர்கள் சிலர் மார்க்கண்டுவிடம் தூதுசென்றனர். நூலகம் இயங்க வேண்டுமென இவர்கள் கேட்க இயங்க முடியாது என்பதற்கான காரணங்களை அவர் சொல்ல இழுபறிநிலை தொடர்ந்தது. விடயம் ஆளுநர் வரை சென்றது.

நூலகத்தை மூடிவிட்டு வவுனியாவுக்கு இடம் மாற்றினால் என்ன என்றொரு அபிப்பிராயம் நிர்வாக மட்டத்தில் எழுந்தது. நூல்களைப் பங்கு போட்டு வேறு நூலகங்களுக்கு அனுப்பி விட்டால் என்ன என்றும் ஆலோசிக்கப்பட்டது. இங்குள்ள நூல்களை எங்கும் எடுத்துச் செல்ல அனுமதிக்க மாட்டோம் என்ற போக்கு மக்களிடம் வலுவடைந்ததால் இம்முயற்சிகள் கைவிடப்பட்டன.

தனது அதிகாரத்தை எப்படிக் காட்டலாம் என்று தலையை உடைத்துக்கொண்ட மார்க்கண்டு மார்ச் மாத நடுப்பகுதியில் புதிய நடைமுறையொன்றை அமுல் படுத்தினார். அதன்படி நூலகம் உறுப்பினர்களுக்கு மட்டுமே என மட்டுப்படுத்தப்பட்டது.

உறுப்புரிமை அரச, மாகாண, கூட்டுத்தாபன வங்கி ஊழியர்களுக்கு என அறிவிக்கப்பட்டுள்ளது. உறுப்புரிமை விண்ணப்பப் படிவத்தில் நியமனத் திகதி, ஓய்வூதிய இலக்கம் போன்ற வேண்டாத கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விண்ணப்பதாரியின் விபரங்களை திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்த வேண்டும். அதன் பிறகு பிணையாளராக ஒரு அரசாங்க ஊழியர் நிற்க வேண்டும். பிணையாளரை அவரது திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்த வேண்டும்.

ஒரு அரசாங்க ஊழியரைப் பொறுத்தவரையில் 5 வருடச் சம்பள முற்பணத்தைக் கடனாகப் பெறச் சமர்ப்பிக்கும் விண்ணப்பம் கூட இவ்வளவு கடினமாக அமைவதில்லை, என்றாலும் இவற்றை நிறைவேற்றி விட்டால் கூட உறுப்பினர் தகுதி கிடைத்து விடாது. மார்க்கண்டுவின் தனிப்பட்ட பரிசீலனைக்குப் பின்னரே இறுதிமுடிவு எடுக்கப்படும்.

விண்ணப்பதாரி உறுப்பினராகத் தகுதி பெற்றுள்ளார் என்று அறிவிக்கப்பட்டதும் சாதாரண உத்தியோகத்தராயின் 350/= ரூபாவும் பதவி நிலை உத்தியோகத்தராயின் 500/= ரூபாவும் செலுத்தினால் தான் நூலகத்தைப் பயன்படுத்தலாம்.

தற்போது நூலகத்தில் உள்ள நூல்களின் எண்ணிக்கை பத்தாயிரத்து மூன்று. நூலகத்தைப் பயன்படுத்தும் உரிமை பெற்றோரின் எண்ணிக்கை மூன்றுமட்டுமே.

பாடசாலை மாணவர்கள், திறந்த பல்கலைக் கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், இணைந்த பல்கலைக்கழக மாணவர்கள், வேறு நூலகப் பிரியர்கள் எவருமே நூலகத்துக்குள் நுழைய முடியாதபடி தடுக்கப்பட்டுள்ளனர். உறுப்புரிமை பெற்ற மூன்று பேரைத் தவிர மற்றெவருக்கும் நூலகத்தில் வாசகராகும் உரிமையும் கிடையாது. நூலகம் வெறிச்சோடிக் கிடக்கிறது. நூலகர்கள் கொசு விரட்டிக் கொண்டிருக்கிறார்கள். வாசிக்கும் பழக்கத்தை தூண்டுவதே நூலகத்தின் பணி என்று யாரோ சொன்னதாக நினைவு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பிரதம ஆசிரியர் : சேரன், எல்லாத் தொடர்புகட்கும் : இல. 04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05, தொலைபேசி : 593615

96.04.30